# குறிஞ்சிப் பாட்டு

## இலக்கியத் திறனாய்வு விளக்கம்

தமிழண்ணல்

மீனாட்சி
புத்தக நிலையம்

கபிலர் அருளிய

# குறிஞ்சிப் பாட்டு

## இலக்கியத் திறனாய்வு விளக்கம்

தமிழண்ணல்
டாக்டர். இராம. பெரியகருப்பன்

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

60, மேலக் கோபுரத் தெரு : : மதுரை-625001

சிந்தாமணி முதற்பதிப்பு : 1992

உரிமை பதிவு

விலை ரூ. 15/-

KURUNJiPPATTU
Literary Criticism
By Dr. Rama Periakaruppan
Thamizhannal
First Edition 1992
Price Rs. 15/-
10 Pt. Letters
18×12 . 5 cms
White Printing Paper
120 Pages
Box Board Binding
Printed at
Maxie Printers
90, Hot Water Channel Road
Madurai-625010

MEENAKSHI PUTHAKA NILAYAM
60, West Tower Street
Madurai-625 001.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | குறிஞ்சிப் பாட்டுக் கதையும் கருத்தும் | ... | 5 |
| 2. | பத்துப் பாட்டு | ... | 26 |
| 3. | கபிலர் | ... | 37 |
| 4. | அமைப்பும் அழகும் | ... | 53 |
| 5. | சுவைப்பகுதிகள் | ... | 69 |
| 6. | வாழ்வும் நாகரிகமும் | ... | 90 |
| 7. | உளவியலும் உலகியலும் | ... | 100 |



# 1. குறிஞ்சிப்பாட்டுக் கதையும் கருத்தும்

## முன் கதை

மலைச்சாரலாம் குறிஞ்சி நிலத்தில் இது நிகழ்ந்தது. ஒரு கன்னிப்பெண் இளைஞன் ஒருவனை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. காதல் பிறந்தது. மீண்டும் மீண்டும் அவனைச் சந்திக்கப்பெறுமையாலும், அவனையே திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவினாலும் தலைவி மெலியலுற்றாள்.

இது காதலால் வந்த நோய் என்று அறியாமல், தெய்வத்தால் வந்ததோ எனக்கருதி, தாயர் அக்கால வழக்கப்படி வேலனுக்கு வெறியாட்டு எடுத்தனர்; பிற மருந்துகள் தேடி அலைந்தனர்.

தலைவியைத் தவிர, இக் காதலைப் பற்றிய உண்மை, அவள் தோழி ஒருத்திக்குத் தான் தெரியும்.

தலைவியோ தன் காதலைத் தானே வாய்விட்டுச் சொல்ல மாட்டாள். ஆனால் நாளுக்கு நாள் மெலிகிறாள். தாயரோ இந்த உண்மையை அறியார்கள். தலைவியின் வாட்டத்தோடு அவர்களின் வருத்தமும் மேலும் மேலும் வளரலாயிற்று. இச் சிக்கலைத் தீர்ப்பது யார்? எப்படி?

பொறுப்பு இடைநின்ற தோழிமேல் விழுந்தது. தலைவியும் இது நாள் வரை 'களவாக' இருந்த காதலை, இனி வெளிப்படுத்துவதே அறம் என ஒப்புக்கொண்டாள். நல்ல

நேரமாகப் பார்த்து, செவிலித் தாயிடம் தோழி உண்மையைக் கூறத் தொடங்கினாள் ;

1

**தாயே! நீயும் வருந்துகிறாய்!**

**தாயே! வாழ்வாயாக!**

அம்மா! நான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக; ஒளி வீசும் நெற்றியையும் தழைத்த மெல்லிய கூந்தலையுமுடைய என் தோழியின் உடம்பு, சிறப்புடைய வளையல் முன் கையிலிருந்து நெகிழ்ந்து கீழே விழும்படியாக மெலிந்தது. இவ்வாறு அவளை மெலியச் செய்த, எதனாலும் தீராத இந்தக் கடுமையான நோய்க்குக் காரணம் என்ன என்பதை நீ ஆராய்ந்தாய் அகன்ற இவ்வூரின்கண் இது பற்றி முன்னறிந்து சொல்லவல்ல கட்டுவிச்சி, வேலன் போன்றோரிடமெல்லாம் நீ உசாவினாய்! தெய்வக் கோளாறாக இருக்கும் என்று சிலர் கூறினார்கள். உடனே நீ பாடி அருச்சித்தும் வணங்கித் தொழுதும் பலநிற மலர்களைத் தூவியும் வேறுபட்ட பல உருவங்களையுடைய கடவுளை வழிபட்டாய்! நறும் புகையையும் பிற மணப் பொருள்களையும் ஏந்திக் கும்பிட்டாய்! இவற்றால் எல்லாம் நோய் தீராமையால் மனவருத்தமுற்று, நோயின் காரணத்தை அறியமாட்டாமையால் மனம் சுழன்று நீயும் வருந்துகிறாய்!

**நானும் வருந்தினேன் ;**

**நங்கையை வினவினேன்!**

அம்மா! கவர்ச்சி மிக்க இவளுடைய நல்ல அழகு தொலைந்தது. மணம் பொருந்திய தோள்கள் மெலிந்தன. மெலிந்த கைகளிலிருந்து வளையல்கள், பிறர் அறியும்படியாகக் கழன்று விழுந்தன. அடிக்கடி இவள் தனிமைத் துன்பத்தால் வருந்தினாள். இவற்றையெல்லாம் கவனித்த

நான் இவளது மனத்துள்ளே ஒரு துன்பம் மறைந்து இருந்து வருத்துகின்றது என உணர்ந்தேன். பிழைத்தற் கரிய வருததத்தைத்தரும் அப் பெருந்துன்பம் யாது என் றறிய நான் ஆவல் கொண்டேன். அவளோ அதை வெளி யிடுவதாக இல்லை. நானும் விடவில்லை. எனது நா வன் மையால அவளை நெருக்கிப் பல கேள்விகள் கேட்டு, உண்மையை அறிந்தேன். நான இவ்வளவு தூரம் நெருக்கிக் கேட்ட பிற்பாடுதான், அவள் உண்மையைக் கூறினாள்.

**மான்போலும் பார்வையினாள் !**

**உண்மை சொல்லித் தேம்புகிறாள் !**

மான்போலும் விரும்பத்தக்க விழிகளையுடைய அவளுக்கு இதைச் சொல்லும் போது கண்கள் கலங்கி நின்றன. அவள் சொன்னது இதுதான் அம்மா :

''முத்தினாலும் மாணிக்கத்தாலும் பொன்னாலும் ஆன, அச்சேர்க்கையால் அழகு பொருந்திய, அணி கலன் கெடுமானால் மீண்டும் தொழில் வல்லார் செப்ப னிட முன்பு போலக் கூடித்திகழும். அவ்வாறன்றி நற்பண்பும் பெருமையும் ஒழுக்கமும் சிறிது குன்றுமா யினும், அக்குற்றம் நீங்கத் தூய்மைப்படுத்தி, மீண்டும் பழைய விளங்கும் புகழ்நிலையில் அவற்றை நிறுத்துதல் என்பது யாருக்கும் இயலாது. பழைய நூல்களைக் கற்றறிந்த பெருமக்கள் குற்றமற்ற அறிவினையுடைய பெரியோர்க்கும் இது எளிதென்று கூறமாட்டார்கள்.

பெற்றோர்கள் என்மீது கொண்டிருக்கும் அன்பும் அவர்கள் சொல்லும் வழியிலேயே நடக்கும் என் மடப்ப மும் ஒரு சேர நீங்க, பெரிய தேரையுடைய என் தந்தை யின் அரிய காவலைக் கடந்து சென்று நான் அவரைக் காதலித்தேன். நானும் அவரும் ஒருவருடன் ஒருவர் பழகி, புரிந்துகொண்டு, திருமணம் செய்து கொள்வ

தாக முடிவு செய்தோம். எனவே, நாங்கள் இருவரும் ஆராய்ந்து முடிவு செய்த திருமணம் இதுவென்று, நாம் தாயர்க்கு அறிவுறுத்தினுல், அதனுல் நமக்குப் பழி உண்டாகுமோ? காதலித்தவரையே கைப்பிடிப்பது தானே புகழாகும். இந்த அறவழியிலே நடந்து, அவருக்கே என்னைக் கொடுக்க நம் வீட்டார் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், நாம் சாகும்வரை இதுதுன்பத தைப் பொறுத்து இருப்போம். அவ்வாறு பொறுத் திருந்தால் மறு உலகத்திலாவது நமக்கு இத் திருமணம் வாய்க்கக் கூடும்.''

''முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலங்கெடின் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னுர் தொல்மருங்கு அறிஞர்
மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அருந்தடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம் அறிவுருலின் பழியும் உண்டோ?''

இவ்வாறு கூறியவுடனே கண்கள் கலங்கச் செயலற்ற வளாய்க் காணப்பட்டாள். ஆற்றுதற்கரிய மனநோயி னுல் அவள் தேம்பி அழுதாள்.

**மணவாளன் தேர்ந்த கதை**

**சினவாது கேள் அம்மா!**

அம்மா! ஒரு பக்கம் இவள் துன்பத்தால் மெலிவது கண்டு நான் அஞ்சினேன்; மறுபக்கம் உண்மையை உன்னிடம் சொல்லவும் நான் அஞ்சினேன்.

இரண்டு பெரிய வேந்தர்கள், ஒருவர் மீது ஒருவர் மேலும் மேலும் பகையை வளர்க்கிறார்கள். அவர்கள் இருவரையும் சமாதானம் செய்து வைக்கும் செயலில் சான்றோர் ஒருவர் ஈடுபடுகிறார் என்று வைத்துக்கொள். அவர் மனம் எப்படி-யிருக்குமென்று எண்ணிப்பார் அம்மா. இருவரும் அவரைத் தவறாக எடுத்துக் கொள்ளாதிருக்க வேண்டும். ஒருவரைச் சார்ந்தவரென மற்றவர் சிறிது ஐயப்பட நேர்ந்தாலும் போதும், துன்பந்தான்.

அம்மா! உனக்கும் என் தோழிக்குமிடையே என் நிலைமையும் இப்படித்தான் இருந்தது. அவளுக்காக, அவள் மன நோய்க்காக அஞ்சினேன். எங்கே, வெளிப்படுத்தா விட்டால், அது வளர்ந்து அவளையே அழித்து விடுமோ என அஞ்சினேன். வெளிப்படுத்தினால், அருளுடைய நீயும் என்னைத் தவறாக எடுத்துக்கொண்டு சினப்பாயோ என மறுபுறம் அஞ்சினேன். இவ்வாறு, இவ்விரண்டு பெரிய அச்சங்களால் நானும் வருந்தலானேன்.

பொதுவாகத் திருமணம் பேசும்போது ''நம் பெண்ணை இன்ன இடத்திலே கொடுத்தால் பின்னர் நன்றாக வாழ் வாளா எனச் சிந்திப்பார்கள். தம் குடியோடு மணமகள் குடி சமமானதா என ஆராய்வார்கள். தலைவன் தலைவியரிடையே உள்ள குண ஒற்றுமையை நோக்கு வார்கள். இரண்டு குடும்பத்திலும் உள்ள உற்றார் உற வினரை ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இங்ஙனம் பெரியோர் கள் எண்ணுவது போல எல்லாப் பொருத்தங்களையும் ஒப்பிட்டுப் பாராமல் நாங்களாகவே இதனைத் துணிந் தோம். ஏனெனில் இங்ஙனம் முடிவு செய்வதுதான் இவளது ஒழுக்கத்தைக் காக்கும்; உயிரையும் பாதுகாக் கும் என்பதால் இங்ஙனம் முடிவு செய்தோம். எனவே, இவ் அரும் செயல் முன்பு நிகழ்ந்த விதத்தை நீ தெளி வாக உணரும் வண்ணம் சொல்லத் தொடங்குகிறேன் இதைக் கேட்டு, அம்மா! எங்கள் மீது கோபம்கொள்ளா திருப்பாயாக.

2

**அன்று ஒருநாள், தினைப்புனம் காக்க**

**அனுப்பியது நீ தான் அம்மா!!**

'நெல் விளைவு பெற்ற நீண்ட மூங்கிலை வளைத்துத் தின்பதற்காக, நெடு நேரம் அண்ணாந்து நின்ற யானை முத்து நிறைந்து முற்றிய தன் கொம்பிலே துதிக்கையை வளைத்துப் போட்டிருக்கும். அதுபோல, முன்னே துய்யை உடையதும் வளைந்ததுமான முதிர்ந்த பெரிய கதிர்களை மிகுதியாகக் கொண்ட சிறிய தினை நம் புனத்தில் வளர்ந்திருக்கிறது. அத் தினையிலே வந்துவிழும் பறவைகளை விரட்டி, பொழுது மறையும் நேரத்தில் வீட்டிற்குத் திரும்பி வருக' என்று நீ எங்களை அனுப்பினுய். நாங்களும் அவ்வாறே தினைப்புனம் சென்றோம். அங்கே ஆரவாரம் மிக்க மரத்தின் மேல், புலி அஞ்சி நீங்குவதற்குக் காரணமான பரண் இருக்கிறதல்லவா? இரவு நேரத்தில் காவல் காக்க மேலே இருப்பவன் செய்தமைத்தது அது. நாங்கள் அப் பரண் மீது ஏறி நின்று அம்மலைச்சாரலிலுள்ள பிரம்பினுலே அழகு பெறப் பின்னப்பட்ட **தழலும் தட்டையும் குளிரும்** இவை போன்ற பிறவுமான கிளி ஓட்டும் கருவிகளை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து ஒலித்துத் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்தோம். ஞாயிற்றின் வலிமைமிக்க கதிர்கள் தாக்குகின்ற வெப்பமிகுந்த அந்த நேரத்தில் திடீரென மழை பெய்யத் தொடங்கியது.

**மலை குளிர மழை பெய்தது!**

**மனம் குளிர நீராடினேம்!**

திடீரெனக் கருமேகம் சூழ்ந்தமையால், வானத்தே பறந்து திரிந்த பறவைகள் தாங்கள் விரும்பும் கூடுகளுக்குச் சென்றன. நீர் நிறைந்த கரிய கடலும் குறையும்படி, நீரை முகந்துகொண்டு வந்த கரிய மேகம் வானத்தே திரண்டது. அகன்ற பெரிய வானத்தே வீசுகின்ற காற்றுக்

கலந்தமையாலே முரசு அதிர்வது போல இனிய ஓசையுடன் இடிகள் முழங்கின. வரிசை வரிசையாக மேல் நோக்கிச் செல்லுகின்ற மேகங்கள் ஒன்று கலந்தன. இனிய ஓசையுடன் முரசினையும் ஒளிவீசும் அணிகளையும் உடைய முருகன் பகைவர்க்கு எதிரே எடுத்த விளங்கும் இலை அமைப்பை உடைய வேல் போன்ற மின்னல் முதலிய கருவிகளை யுடையதாய் அக் கருமேகம் மலைமீது பொழிந்தது. அவ்வாறு மழை பொழிந்த காரணத்தால் தலைவனது நீண்ட மலையுச்சியிலிருந்து தெளிந்த நீர் கீழிறங்கிப் பாயவே, அழகிய வெண்மையான துகிலைப் போலக் காட்சி அளித்தது. நாங்கள் அந்த அருவியில் தீராத விருப்பத்துடன் விடாமல் ஆடினோம். மேலும் பளிங்கை நீராக்கிச் சொரிந்து வைத்தாற்போன்ற. அவ்வருவி நீர் பாயும் சுனையில் குடைந்து குடைந்து நீராடினோம் பின்னர் மரமடர்ந்த அம்மலைப் பகுதியில், நாங்கள் விரும்பியவாறு பாடிக்கொண்டே, பொன்னில் பதித்த நீலமணிபோல எம் முதுகில் தாழ்ந்து கிடந்த, பின்னு தலமைந்த எமது கூந்தலைப் பிழிந்து உலர்த்தினோம். அளவற்ற ஆவலுடன் நெடுநேரம் நீராடிய காரணத்தால், எங்களது கண்களின் உட்பகுதியெல்லாம் சிவந்து போயின.

மலைமுழுதும் அலைந்து
மலர்களைக் குவித்தோம்!

பூச்சூடும் விருப்பத்தால் மலை முழுதும் அலைந்து திரிந்து பல நிற மலர்களைக் சேர்த்தோம் பெரிய இதழ்களையும் ஒளியையும் உடைய செங்காந்தள். ஆம்பல், அனிச்சம், குளிர்ந்த குளத்தில் பூத்த குவளை, குறிஞ்சி, வெட்சி, செங்கொடு வேரி, தேமா. மணிச்சிகை (செம் மணிப்பூ). உரியதான மணத்தினையும் விரிந்ததான கொத்தினையுமுடைய பெருமூங்கிற்பூ, வில்லப்பூ (வில்வம்,' நெருப்பை ஒத்த எறுழம்பூ, மராமரப்பூ, வடவனம், வாகை, வெண்மையான வெட்பாலை, பஞ்சாய்க் கோரை,

வெண்காக்கணம், நீலமணி போன்ற கருவிளம்பூ, பயினி, வாணி, பல இதழ்களை உடைய குரவம், பச்சிலைப்பூ மகிழம்பூ, பல கொத்துக்களை உடைய காயாம்பூ, விரிந்த பூக்களை உடைய ஆவிரம் பூ, சிறு மூங்கிற்பூ, சூரைப்பூ, சிறுபூளை, குன்றிப்பூ, முருக்கிலை, மருதம், விரிநத கோங் கப்பூ, மஞ்சாடி, திலகம், தேன் மணக்கும் பாதிரி, செருந்தி, புனலிப்பூ, பெரிய குளிர்ந்த சண்பகம், நாறு கரந்தை, காட்டு மல்லிகைப்பூ, மணம் கமழும் தழைத்த மாம்பூ, தில்லைப்பூ, பாலைப்பூ கல்லில் படர்ந்த முல்லை, கஞ்சங் குல்லை, பிடவம்பூ, செங்கருங்காலிப்பூ, வாளழப்பூ, வள்ளிப்பூ, மணமிக்க நீண்ட நெய்தல்பூ, தென்னம் பாளை, செம்முல்லை, முள்ளையுடைய தாள் பொருந்திய தாமரை, ஞாழல், மௌவல், மணமுள்ள குளிர்ந்த கொகுடி, பவழக்கால் மல்லிகை, சாதிப்பூ, கருந்தாமக் கொடிப்பூ, வெண்கோடற்பூ, தாழம்பூ, தாது முதிர்ந்த மணமுள்ள சுரபுன்னை, காஞ்சி, நீலமணி போன்ற தேன் மணக்கும் கருங்குவளை, ஓமைப்பூ, வெண் கடப்பம்பூ, கொத்தான தணக்கம்பூ, இண்டம்பூ, இலவம்பூ, கொத் தாகத் தொங்குகிற கொன்றைப்பூ, அடும்பம்பூ, விரும் பத்தக்க ஆத்திப்பூ, நீண்ட கொடியையுடைய அவரைப்பூ பகன்றை, பலாசம், நிறைந்த அசோகம்பூ, வஞ்சி, பித்தி கம், கரு நொச்சிப்பூ, தும்பை, திருத்துழாய், விளக்குப் போலும் தோன்றிப்பூ, நந்தியாவட்டம், நறைக்கொடிப்பூ, மணமிக்க புன்குகம், பருத்தி, பீர்க்கு, பசிய குருக்கத்தி, சந்தனப்பூ, அகிற்பூ, மணத்தையுடைய பெரிய புன்னைப் பூ, நாரத்தம்பூ, நாகப்பூ, இருள்வாசிப்பூ, கரிய பெரிய குருந்தம் பூ, வேங்கைப்பூ முதலிய பிற பூக்களையும் அரக் கைப் பரப்பினாற்போன்ற பருத்த அழகிய மலையெருக்கம் பூவுடன் ஒன்றுடன் ஒன்று மயங்கிக் கலந்து ஆங்காங்கு கிடப்பனவாகிய மலர்கள் அனைத்தையும், மனவிருப் பத்துடன் அலைந்து திரிந்து சேகரித்தோம்.

இவற்றை, மழைபெய்து தூய்தாக்கின அகன்ற பாறையில் குவித்தோம்.

கிளிஓட்டித் தழைஉடுத்தி!

மாலைசூடி மகிழ்ந்திருந்தோம்!

பறவைகளின் ஒலிகள் வாத்தியங்கள் போலக் கேட்கின்ற, அடுக்கடுக்காகக் குறுக்கிட்டுக் கிடக்கின்ற மலைச் சாரலில் மிக்க எதிரொலியை உண்டாக்கும் தெளிந்த ஒலிகளை இடையிடையே எழுப்பிக் கிளிகளை ஓட்டினோம். வேலையோடு வேலையாகப் புறவிதழ்களை நீக்கிவிட்டு, கொய்த தழைகளைக் கட்டி ஆடையாக்கி, பாம்பின் படம் போல விரிந்த அடிவயிற்றில் கட்டிக் கொண்டோம். பலவாக வேறுபட்ட நிறத்தையுடைய அழகமைந்த மலர் மாலைகளை எங்களுடைய மெல்லிய கரிய முடியிலே அழகு பெறச் சூடிக் கொண்டோம். பிறகு நெருப்புப் போல விளங்கும் நிறத்தையுடைய அழகிய தளிர்களைக் கொண்ட அசோக மரத்தின், பூந்தாது விழுகின்ற குளிர்ந்த நிழலின் கண்ணே நாங்கள் இளைப்பாறினோம்.

3

முடிபுனைந்த அழகுடையான்;

முடிவில்லா அன்புடையான்!

ஒரு தலைமகன், எண்ணெய் நன்கு கலந்ததும், நெளி அமைய வளர்ப்பதும், நல்ல கரு நிறம் அமைந்ததுமான குளிர்ந்த மணமிக்க மயிர்ச் சந்தனத்தை மணம் கமழப் பூசிக் கொண்டு, தலைமுழுகி, அந்த ஈரமானது காயுமாறு விரலாலே உலர்த்திச் சிக்கு எடுத்துக் கொண்டான். பின்பு, வயிரம் பாய்ந்த அகில் கட்டையினது அழகிய புகையைத் தலைமயிருக்கு ஊட்டினான். யாழ் இசைபோல ஒலிக்கின்ற அழகு மிகும் வரிகளை உடைய வண்டுகள் ஆரவாரிக்கும்படி நெய்ப்புடையதாய் நீலமணியின் நிறத்துடன் திகழும் கரிய பெரிய தலைமயிரினையுடையவனாக அவன் காணப்பட்டான். மலையிடத்தே பூத்தனவும் நிலத்திடத்தே பூத்தனவும் மரக் கொம்புகளிடத்தே பூத்தனவும் குளங்களிலே பூத்தனவுமாகிய பல வேறு வகையா

நிறங்களையுடைய மலர்களை ஆராய்ந்து கலந்து தொடுத்த குளிர்ந்த மணம் மிக்க மாலையையும், வெண்தாழை மடலாலே ஆன கண்ணியினையும், தனது நலம் பெற்ற தலைமுடியிலே, 'முருகனோ இவன்' என்று கண்டோர் அச்சமுறும்படி சூடிக்கொண்டு வந்தான். அவற்றுடன் பச்சைக் காம்பினை உடைய, நுணுகிய இதழ்களை உடைய பிச்சிப் பூவால் அழகாகத் தொடுக்கப்பட்ட ஒரு வடத்தைத் தலையில் சுற்றியிருந்தான்.

சிவந்த நெருப்புப் போன்ற ஒளி பொருந்திய பூக்களை யுடையே அசோகினது அழகிய தளிரை ஒரு காதிலே செருகிக் கொண்டிருந்தான். அத் தளிர் திரண்டு வலிய தோளில் பட்டு அசைந்தது. சந்தனத்தை, மார்பில் நன்றாகப் பூசிக் கொண்டிருந்தான். ஆற்றல் தங்கிக் கிடக்கும் அகன்று உயர்ந்த மார்பினிடத்தே, தொன்று தொட்டு அணியும் மரபுடைய மணமிக்க மாலையைப்பிற அணிகலன்களுடன் பொலிவு பெற அணிந்து கொண்டிருந் தான்.

இலக்கணம் அமைந்த சிவந்த கோடுகள் பொருந்திய தும் பருத்த முன் கையினை உடையதுமான அகன்ற கையில் அழகிய கட்டமைந்த வில்லை ஏந்தி அம்புகளை ஆராய்ந்து கொண்டு வந்தான் நுணுகிய தொழில் திறன் அமைந்த கச்சையினைத் துளக்கம் இல்லாதபடி இறுகக் கட்டிக் கொண்டிருந்தான். இயல்பான அழகாலே பொலிவு பெற்ற பொன்னாலான வீரக்கழலைக் கால்களிலே அணிந்திருந்தான். அவன் அடியெடுத்து வைக்கும் பொழுதெல்லாம், அக்கழல்கள் பிறக்கிடாத பாதங்களிலே உயர்ந்தும் தாழ்ந்தும் அசைந்தன.

வேடன் வந்தான் பின்னே,
வேட்டைநாய் வந்தது முன்னே!

பகை நாட்டைப் பாழாக்கும் நெருங்குதற்கரிய வலிமையினையுடைய பகைவர்களையும் முதுகுகாட்டி ஓட

வைத்துத் துரத்துகின்ற வேற்படை மிக்க வீரர்களைப் போலச் சில வேட்டை நாய்கள் ஓடி வந்தன. அவை வலிமைமிக்க சினத்தாலே செருக்குற்றன. தம்பால் ஏதேனும் ஒன்று நெருங்குந் தோறும் சீறும் இயல் புடையன. மூங்கில் முளை போன்ற ஒளி மிக்க பற்களை யுடையன. பெரிய நகங்களை உடையன. இத்தகைய வேட்டை நாய்கள் இமையாத கண்களை உடையன வாய், எம்மை வளைத்துக்கொண்டு நெருங்கிப் பாய்ந்து வந்தன.

அம்மா! அந்த நாய்கள் நெருங்கி வரவர நாங்கள் பெரிதும் நடுக்கமுற்றோம். அந்த அசோக மர நிழலை விட்டு எழுந்து ஓட முயன்றோம். அச்சத்தால் எங்களு டைய நல்ல பாதங்கள் தளர்வுற்றன. எங்கள் மனத்தில் துன்பம் மிகுந்து கப்பிக் கொண்டது. செய்வதறியாது மயங்கி, வேறு இடம் நோக்கி ஓடினோம்.

வேறு ஒரு புதிய இடத்தில் புதிய பசுவைக் கண்ட காளை, அங்கு தனக்கு எதிராக நின்ற காளைகளையெல் லாம் போரிட்டு விரட்டி விட்டு, அம்மனச் செருக்கோடு அப்புதிய பசுவை நெருங்குவது போலத் தலைமகன் அழகு பொருந்த எம்மிடம் வந்தான். மன மயக்கத்தால் நாங் கள் அங்கு அஞ்சி நின்றமை கண்டு, இவர்களை அஞ்சி நடுங்கும்படி செய்து விட்டோமே என்று அவ்வாறு செய் தமைக்குத் தானும் வருந்தினான். மென்மையும் இனிமை யுமுடைய சொற்களை நாங்கள் மன ஆறுதல் அடையும் வண்ணம் பேசினான். எங்களின் கவர்ச்சி மிக்க கூந்தல் அழகைப் பாராட்டி விட்டு, ''ஒளி பொருந்திய வளையலை யும், அசையும் மெலலிய சாயலையும், அழகுடன் வளைந்த உந்தியினையும், மடப்பமுடைய, மதர்த்த, குளிர்ந்த கண்களையும் பெற்ற இளம் பெண்களே! என்னிடமிருந்து ஒரு விலங்கு இங்கு தப்பி ஓடி வந்து விட்டது'', என்று கூறினான்

பேசாத சித்திரங்காள்,
பேசும் என்றான்!

அதற்கு எதிராக, நாங்கள் ஒன்றும் விடை சொல்லாது, வெட்கத்துடன் நின்றோம். இதைக் கண்ட அவன் ஏமாற்றமடைந்து வருத்தப்பட்டான். அவன் மனக் கலக்கமுற்று 'மென்மை பொருந்திய சாயலை உடையவர்களே! நீங்கள் என்னிடமிருந்து தப்பிப்போன விலங்கைக் காட்டி, என்னிடம் திருப்பி விடாவிட்டாலும், என்னிடம் பேசுவது கூட உங்களுக்குப் பழியை உண்டாக்குமோ?' என்று கேட்டான். நட்டராகம் என்ற பண்ணை முற்றிலும் வாசித்தற்கேற்ற பாலை யாழினை இயக்கவல்லவன், தன் கையாலே தெறித்து எழுப்பும் இசைபோல 'இம்' மென்ற ஓசை உண்டாக ஒலிக்கின்றது காதல் மிக்க பெண்வண்டு அதனுடன் ஆண் வண்டு புணர்ச்சியை விரும்பித் தங்கியிருப்பதும் தாது விரிந்த பூக்களையுடையதுமான தழைத்து விரிந்த கொம்பு ஒன்றை அவன் முறித்து எடுத்தான். மதங்கொண்டு அங்குசத்தை எதிர்க்கும் களிறுபோல, அப்பூங் கொம்பினை வெற்றியுண்டாக வீசினான். 'கல்' லென்னும் ஓசையுண்டாக்கிய தன் வேட்டை நாய்களின் பேரிரைச்சலை அடக்கினான். இவ்வாறு நாய்களை அடக்கிவிட்டு, நாங்கள் வாய்திறந்து விடையிறுக்கும காலத்தை எதிர்பார்த்து நின்றான்.

காப்பவன் சோர்ந்து இருந்தான்;
கானம் அழிந்து பட்டது.

மலைச்சாரலிலே ஒரு குடிசை. அது தினை அரிந்த தாளாலே வேயப்பட்டது. குட்டையான கால்களை உடையது. அதனுள் பெண்மானைப் போன்ற அழகிய பார்வையினையுடைய மனைவி, தேனைப் பிழிந்து ஆக்கிய கள்ளை ஊற்ற, அதைக் குடித்துவிட்டுக் கணவன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். இதனால் அவன் சிறிது நேரம் காவல் தொழிலை மறந்து கிடந்தான். இச்சமயத்தில் மதங்

கொண்ட யானை ஒன்று தினைப்புனத்தில் புகுந்து, தினையை வாயிலிட்டு அழித்துவிட்டது. இதைக் கண்ட கானவர்கள் கடுங்கோபங்கொண்டனர். தினைப்புனம் அழிந்துபட்ட சிறுமையை அவர்களால்பொறுக்க முடியவில்லை உடனே, **பாம்பினை ஒத்த அழகுடைய வில்லை** நாண் ஏற்றனுர்கள் வருத்தம் மிகுந்ததனுல், உள்ளத்தில் தோன்றிய சினம் மிக்க வலிமையினுல் அவர்கள் தம் உடலின்கண் அச் ஓற்றந்நிற்றரிய செருக்கைப் பெருக்கி அம்புகளை யானை மேல் எய்தார்கள். **தட்டை முதலியவற்றை அடித்து** ஒலித்தார்கள். காடு முழுதும் 'கல்'லென்ற ஓசை எழுமாறு, **வாயை மடித்துவிடும் சீழ்க்கை ஒலியை** எழுப்பினுர்கள். இவ்வாறு பேரோசையை எழுப்பி யானையை எதிர்த்து விரட்ட முயன்றுர்கள்.

**ஆர்த்து வரும் யானையைப் பார்த்தோம்,**
**அவரருகே ஓடி, உடல் வேர்த்தோம்!**

கார் காலத்து மழையின் இடிபோல முழங்கி, அதன் பெருமைக்குத் தகும் வண்ணம் கரிய சருக்கரையையுடைய பெரியகையைப் பூமியிலே அறைந்து, கோபத்தை மிகுதிப் படுத்தும் மதத்தினுல் மனம் செருக்குக்கொண்டு, எதிர்ப்பட்ட மரங்களை அழித்து, மதங்கொண்டு மயங்கிய யானை சிங்கத்தைப்போல எங்கள் எதிரே பாய்ந்து வந்தது. நாங்கள், தப்பிப் பிழைக்கும் இடமிருந்தாலல்லவா ஓடிஒளியலாம். அப்படி ஓர் இடத்தை அந்த நிலையில் நாங்கள் அறியாமையால், திருந்திய, திரண்ட, ஒளி பொருந்திய வளையல்கள் ஓசையிடுமாறு விரைந்து ஓடினேம். **வெட்கத்தை மறந்து அச்சம் மிக்க** மனமுடையவர்களாய் நாங்கள் விரைந்து சென்று அவன் அருகே நின்றேம். **தெய்வம் ஏறின மயிலைப்போல**

**நடுங்கிக்கொண்டு நின்றேம்]**
**நடுக்கத்தைப் போக்கினுன்**
**நகை முகம் காட்டினுன்;**
**நீண்ட காம்பையுடையதும் நாணில் பொருந்தும்**

அடிப்பகுதி அமைந்ததுமான அம்பை இவன் நன்கு இழுத்துக் கடிது செல்லுமாறு விசையோடு விடுத்தான். அது தலைமையினையுடைய அவ்யானையினது அழகிய முகத்தின்கண் பாய்ந்து அழுத்தியது. அப்புண்ணிலே யிருந்து வெளிப் பாய்ந்த இரத்தம் அதன் முகத்திலே பரந்து வழிந்தது. அதனால் புள்ளிகளையும் வரிகளையு முடைய யானையின் நெற்றி சிதைந்தது. அதற்கு மேலும் எதிர்த்து நில்லாமல் அந்த யானைதோற்றுப் புறமுதுகிட்டு ஓடியது.

அதன் பின்னர். அந்த இடம் தெய்வம் தீண்டி வருத்த மடைந்த பெண்களின் வருத்தத்தைத் தீர்க்கும் பொருட்டு, முருகக் கடவுளுக்கு மறி அறுத்து வெறி யாட்டு எடுக்கும் களத்தைப் போலக் காட்சியளித்தது. அந்தக் களத்தில் நிற்கும் திண்ணிய கடப்ப மரத்தினது திரண்ட அடிப்பகுதியை வளைத்துப் போடப்பட்ட, ஒன்றற் கொன்று துணையான இரண்டு மாலைகளைப்போல, நாங்கள் இருவரும் அவன்மீது சார்ந்து யான் முதலிலும் என்மீது தோழியுமாக—ஒருவர் ஒருவருடன் கைகோத்தலை விடாமல் நின்றோம். நுரையுடைய புதுவெள்ளம் பாய் கின்ற காலத்தில், வலிமைமிக்க அலைகள் மோதுகிற இடி கரையிலே நிற்கின்ற வாழைமரம் போல, தலைவி நடு நடுங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்துப் பெருந்தகை யாளனாகிய அத்தலைவன் ஆறுதல் கூறினான், ''அழகியசில வாகிய கூந்தலையுடையவளே! நடுங்காதே; சிறிதும் அஞ்சாதே! சொல்வதைக்கேள். எதிர்பாராமலே அய லானை நெருங்க நேர்ந்ததே; தொட நேர்ந்ததே என்று தானே இப்போது நடுங்குகிறாய். அஞ்சவேண்டாம். நானே உன் அழகிய நலத்தை நுகர்வேன், (உன்னையே மணம் செய்து வாழ்வேன்.)'' என்று கூறினான். இவ்வாறு சொல்லியபடியே, அவளது குற்றமில்லாத, ஒளி பொருந்திய நெற்றியைத் தடவிக் கொடுத்தான். பிறகு நீண்ட நேரம் சிந்தித்து, சற்று அயலே விலகி நின்ற என் முகத்தைப்பார்த்துச் சிரித்தான்.

"அம்சில்ஓதி! அசையல்; யாவதும்
அஞ்சல்ஓம்பு! நின் அணிநலம் நுகர்குளன
மாசறு சுடர்நுதல் நீவி நீடு நினைந்து
என்முகம் நோக்கி நக்கனன் ..."

4

கூடி மகிழ்ந்தான், அந்தக்
குன்று கெழு நாடன்!

இவ்வாறு தலைவனால் தேற்றப்பட்ட நிலையில் சிறிது சிறிதாகத் தலைவி பழைய நிலையை அடைந்தாள். அவளை விட்டுச் சென்ற நாணமும், அவ் வெட்கத்தை இழத்தலால் உண்டாகும் அச்சமும் முறைப்படி திரும்ப அவளிடம் வந்து சேர்ந்தன. ஆம் தலைவன் அருகே, தான் அச்சத்தால் ஓடிவந்து நின்றபோது, அவள் எதையும் அறியாள். இப்போது அவன் அருகே தான் நிற்பதைக் கண்டதுமே வெட்கம் கொண்டாள். இதை யாரும் கண்டால் என்ன ஆகும் என அவள் அஞ்சினாள். விரைந்து அவனை விட்டு ஓடிவர முயன்றாள் தலைவனோ, அவளை விடாமல் கைகளால் அணைத்துத் தன் மார்பிலே ஒடுங்கத் தழுவிக் கொண்டான்.

அவனும் நமது மலைநாட்டிற்கு உரியவன்தான் அம்மா! பழுத்த மிளகு உதிர்ந்து கிடக்கின்ற கற்பாறையில் நீண்ட சுனை யிருக்கிறது. அச்சுனையில் பெரிய அடிமரத்திலும் தினையுடைய மாவின் இனிய கனிகள் உதிர்ந்து விழுகின்றன. அதோடு வண்டுகள் பக்கத்து மலர்களிலே உண்டாடிச் சிதறுகின்ற தேனும் கலக்கிறது. பலாமரத்திலிருந்து, முற்றிய பழம் நெகிழ்ந்து விரிந்து கொட்டுகிற மணமிக்க சுளைகளும் கலக்கின்றன. இவற்றால் அச்சுனை நீர்ப்பகுதி, நல்ல கள்ளின் தெளிவாகியிருக்கவும் மயிலானது அதை நீர் என்றே கருதிக் குடித்து

விடுகிறது. அக்குடி மயக்கத்தால் அம்மயில் தளர்ந்து தளர்ந்து ஆடுகிறது. அகன்ற ஊர்களில் விழாக் கொண்டாடும் காலத்தில், விழாக் காலங்களில் மிகுதியாக ஒலிக்கின்ற இனிய வாத்தியங்கள் முழங்க, ஆடுகின்ற பெண், மூங்கில்களுக்கு இடையே கட்டிய கயிற்றிலே ஏறித் தாளத்திற்கேற்ப ஆடுவது போல இந்த மயிலானது தளர்ந்து தளர்ந்து ஆடுகிறது.

மலைமீது விளையாடும் பெண்களால் உதிர்க்கப்பட்டு, கண்டார் விரும்பும்படி, வானத்தைத் தொடும் மலையுச்சியிலே கிளைத்த செங்காந்தளின் குளிர்ந்த, மணமிக்க பூக்கள், கீழே பரவிக் கிடக்கின்றன. இது நல்ல பல கச்சைகளை விரித்த களம்போல, அழகு பொருந்தக் காட்சியளிக்கிறது. இத்தகைய மலைகள் சூழ்ந்த பகுதிக்கு உரியவன் அவன் எங்களிடம் விருப்பத்தை விளைவிக்கின்ற பெரிய வெற்றியையுடையவன்.

அவன் மார்புற அணைத்தபோது, தலைவியின் உள்ளத்தே இவன் நம்மைக் கைவிடாது ஏற்று இல்லறத்தை அன்பும் பண்பும் உற நடத்த வேண்டுமே என்ற ஓர் ஐயப்பாடு தோன்றியது. இவ்வாறு அவள் மனத்துள்ளே நினைத்ததை, தானும் தன் உள்ளத்தால் ஒற்றி உணர்ந்தான் போல் தலைவன் பேசத் தொடங்கினன்.

**இல்லறம் ஏற்பதாய்**

**நல்லறம்' கூறினன்!**

'விழாக் கொண்டாடினல் போல் பெரிய மிடாவிலே சோறு சமைக்க வேண்டும். அச்சோற்றை வருபவர்க்கு எல்லாம் வரையாது வழங்கவேண்டும். இதனல் நமது செல்வம் நிறைந்த இல்லம் பொலிவு பெறவேண்டும்.

நம் வீட்டு வாயிலைப் பலரும் வந்து உண்ணுமாறு அகலத் திறந்து வைக்க வேண்டும். பசிய நிணம்

ஒழுகுகிற நெய்மிக்க சோற்றை நீ இடுதலால், குற்ற மற்ற உயர்ந்த குடிப்பிறந்த சான்றோர்கள் குடும்பத்தோடு வந்து விருந்துண்ண வேண்டும்.

இவ்வாறு நாள்தோறும் விருந்திளர் உண்டு எஞ்சிய சோற்றை, பெருந்தகைமை பொருந்திய நங்கையே! நான் உன்னோடு சேர்ந்து பிறகு உண்ண வேண்டும். இதுவே நாம் கடைப்பிடிக்கத் தக்க உயர்ந்த அறமாகும்''

''சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலர்உண
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றி''

என்று கூறினான். தலைமகன் அவ்வாறு 'இல்லறமாம் நல்லறமே நாம் கடைத்தேறும் புணை' என்று காட்டித் தேற்றினான். அம் அம்மா! இவளையே திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவதாக அவன் உறுதி கூறினான். இதனை நாங்கள் உடனே நம்பிவிடவில்லை. எங்கள் முகத் தோற்றத்தைக் கவனித்த அவன் விளங்குகின்ற மலைமேலே இருக்கின்ற முருகக் கடவுளை வாயார வாழ்த்-திக் கையால் தொழுது வணங்கினான். இவள் இன்பமடையும் வண்ணம் உறுதி செய்து, உண்மை நிலைக்களனாகிய இவளைத் தேற்றி, அழகிய இனிய தெளிந்த அருவி நீரைக் குடித்துச் சூளுறவும் செய்தான். இதைக் கண்ட தலைவி அச் சூளுறவை ஏற்றுக் கொண்டாள்.) அதன் பிறகு அவர்கள் அரிய மலைப்பிளவிடையே அமைந்த களிறால் ஏற்பட்ட அக் கூட்டத்தைப் பெற்றார்கள். வானத்தைத் தமக்குரிய இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவர்களாகிய தேவர்களும் விரும்பும்படியான

பூக்கள் நிறைந்த சோலையிலே அன்றைக்குப் பகல் முழுவதும் இன்புற்றுப் பொழுதைப் போக்கினார்கள், அவர்கள்.

**மாலை வளர்க்கும்**
**மாலையும் வந்தது !**

பகற் பொழுது கழிய, ஏழு குதிரைகள் பூண்ட தேரைச் செலுத்திக் கொண்டு சென்று, சாய்ந்து பல கதிர்களையுடைய சூரியன் மேற்கு மலையில் மறைந்து விட்டான். மான் கூட்டங்கள் மரத்தடியிலே வந்து கூடின. பசுக்கூட்டங்கள் தம் கன்றுகளை அழைக்கும் 'அம்மா' என்ற குரலை உடையவாய் மன்றுகள் நிறையுமாறு வந்து புகுந்தன. ஊதுகின்ற கொம்பு போன்ற ஓசையை உடைய வளைந்த வாயினைக் கொண்ட அன்றில் பறவை உயர்ந்த கரிய பனைமரத்தின் உள்மடலிலே பெட்டையை அழைத்துக் கூவிற்று. பாம்புகள் மாணிக்கத்தை உமிழ்ந்தன. பல இடங்களிலிருந்து இடையர்கள் ஆம்பல் என்னும் அழகிய இனிய குழலினால் தெளிந்த இசையை இடையறாது எழுப்பினார்கள். ஆம்பல் மலரின் அழகிய இதழ்கள் முருக்கு அவிழ்ந்தன. செல்வம் நிறைந்த இல்லங்களில் பொலிவு பெற்ற வளையலை அணிந்த பெண்கள் விளக்கேற்றி மாலைப் பொழுதை வரவேற்றார்கள். அந்தணர்கள் அந்திக் கடன்களை நிகழ்த்தினார்கள். காட்டிலே வாழும் மக்கள் வானத்தைத் தீண்டும் தம் பரணிடத்தே தீக்கடை கோலால் நெருப்பைத் தோற்றுவித்தார்கள். முகில்கள் பெரிய மலையைச் சூழ்ந்து கறுத்தன. காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் 'கல்'லென்னும் ஓசை உண்டாகுமாறு ஒன்றற்கு ஒன்று மாறி ஒலித்தன பறவை இனங்கள் ஆரவாரித்தன இவ்வாறு பகைவர் மீது கோபம் மூண்ட அரசன் படையெடுத்துப் போர்மேல் விரைந்து செல்வதைப் போல, மாலைப்பொழுது மிக விரைந்து நெருங்கி வந்தது.

பொழுது போவதைக் கண்டு, தலைவன் எழுந்தான் பிரிவு கருதிக்கலங்கிய எம் நிலையைப் பார்த்து,

"விளங்குகின்ற அணிகலன்களை உடையீர்! உமது அழகிய இறையினையுடைய முன் கையை, உம் சுற்றத்தார் தர யான கைப்பிடித்து, நாட்டில் உள்ளார் எல்லாம் அறியும் படியான நல்ல மணத்தைப் பின்னர் நிகழ்த்துவோம் அதுவரை, இடையே உள்ள சில நாட்களுக்கும் நெஞ்சம் கலங்காமல் இருப்பீர்களாக"

என்று அருள் பொருந்திய நல்ல சொற்களை எம் வருத்தம் தீருமாறு கூறினன். பசுவுடன் கூடிய காளை போன்று, எம்முடன் சேர்ந்து உடன் நடந்துவந்தான். எப்போதும் ஓசை நீங்காத முழவினையுடைய, பழைய தாகிய நம் ஊரின் வாயிலிலே பலரும் நீருண்ணும் குளக் கரை இருக்கிறதல்லவா? அதுவரை எங்கட்குத் துணை யாக வந்து, அங்கே எங்களை நிறுத்திவிட்டுத் திரும்பிச் சென்றான். அன்று ஒரு நாள் நடந்தது இதுதான் அம்மா! உண்மையை உன்னிடம் கூறிவிட்டேன்.

## 5

மறவாக் காதலன் வரவுக்கே

மங்கை மிகவும் வருந்துகிருள்!

அன்று முதல், அந்த நாளில் இவளுடன் எவ்வளவு விருப்பத்தோடு பழகினனோ. அதே அளவு விருப்பத் துடன், நாள்தோறும் இரவு நேரத்திலே வருகின்ற பழக்க முடையவனானன், அவன். அவ்வாறு அவன் வரும் சமயங்களிலெல்லாம் ஊர் காப்பாளர் கடுக நடந்து வந்தாலும் சினம் மிக்க நாய்கள் குரைத்தாலும் நீ தூக் கத்திடையே விழித்துக்கொண்டாலும் நிலவு வெளிப் பட்டு ஒளி பரப்பினாலும் மூங்கிலை ஒத்த மெல்லிய தலைவி யின் தோளிடத்தே பெறும் இனிய துயிலைப் பெருமல். பயனின்றித் திரும்பிச் செல்வான். இவ்வாறு ஒவ்வொரு முறையும் திரும்பிச் செல்ல நேரிட்டாலும் வெறுப்படைய மாட்டான்.

அவன், இன்னும் இளமையைக் கடவாத பருவமுடையவன்; செல்வச் செருக்குக் காரணமாக, உயர்ந்த குடியிலே பிறந்ததற்கேற்ற நற்குண, நற்செயல்களிலிருந்து தவருதவன்.

அச்சந்தரும் இந்த ஊரில், பிறர் அறியாமல் இரவிலே தலைவன் வருகின்ற தன்மையைப் பற்றிச் சிந்தித்து இவள் வருந்துவாள். அவனேடு கூடி இல்லறம் நடத்துதலே சிறப்பு எனத் துணிவு பெறுவாள்.

இவற்றை எண்ணும் பொழுதெல்லாம் இவளுடைய பெரிய, மதர்த்த குளிர்ச்சி பொருந்திய கண்கள், மழைத் துளிகளாலே தாக்கப்பெற்ற மலர் போல அழகழிந்து இமை சோர்ந்து ஈரத்தை உடையவாய்க் கலங்கி நிற்கும்.

**வழியின் அச்சம் கருதி, இவள்**

**வாடி மெலிந்து நைகின்ருள் !**

தலைவன் இரவுப் பொழுதிலே வருகின்ருன். மலைச் சாரலில் காடுகளின் நடுவிலே தன்னந்தனியாக வருகின்ருன். அவன் வரும் வழி தான் எவ்வளவு அச்சமுடையது? குகையிலே வாழும் புலிகளும், யானைகளும் போன்ற கொடிய விலங்குகள் திரியும் பெருங்காடு அது. தன் வலிமையினுல் அழிக்கும் தறுகண்மையும் கடுஞ்சினமும் உடையதான உருமேறு, தீண்டி வருத்தும் தெய்வம் போன்ற இயற்கைப் பகை மிக்க இடம் அது. இரை தேடித்திரியும் பாம்புகள் அங்கு வட்டமிட்டுத் திரியும். ஓடுங்கிய கரியநிறம் அமைந்த ஆழமான நீர் நிலைகளில் கடந்து செல்லுதற்குரிய சுழிக்களுக்கிடையே வளைந்த கால்களையுடைய முதலையும் இடங்கரும் கராமும் திரிந்து கொண்டிருக்கும். இவை மட்டுமா? அங்கு வழிப்பறி செய்வோர் கொன்று குவிக்கும் இடங்களும் உள்ளன. வழிச் செல்வாரை விழுந்து சாகவைக்கும் வழுக்கு நிலங்களும் உள்ளன. முறையடிப் பாதையாய் முதலில் காட்சி அளித்து, அவ் ஒற்றையடி வழியே செல்வார்க்குப் பின்பு

வழியின்றி முடியும், திசையறியா இடங்களும் அங்கு இருக்கின்றன. அங்கே பேய்கள் அலைகின்றன; மலைப் பாம்புகள் திரிகின்றன. இவைகளும் இவைபோன்ற பிற பகைகளும் கொலைத் தொழிலைத் தப்பாது விளைவிக்கும் இயல்புடையன. கூட்டமான மலைகளிடத்தேயுள்ள பிளவுகள் இவ்வளவு துன்பங்களை உடையன என்று நினைக்குந்தோறும் இவள் வருந்தி அழுகிறாள். தலைவனுக்கு ஒவ்வொரு நாள் இரவும் என்னநேருமோ என்று எண்ணி எண்ணி அழுது நைகின்றாள். இந்தக் களவு மணம் கற்பு மணமாகித் தலைவனுடன் அச்சமின்றிக் கூடிமகிழும் நாள் எந்நாளோ என்று ஏங்கி அழுகிறாள். இவ்வாறு கலங்குகின்ற கண்களிலிருந்து அரித்துவிழுகின்ற கண்ணீர் இவளது மார்பின்கண் துளித்து நிற்கின்றது. நாள்தோறும் வலையிலகப்பட்ட மயில் போலத் தன்னுடைய அழகு கெடுமாறு மெலிவடைகின்றாள். அம்மா! இதுவே இவளுக்கு இப்போது தீராத நோயாக இருக்கிறது!

''மாய வரவின் இயல்புநினைஇந் தேற்றி
நீர்எறி மலரின் சாஅய் இதழ் சோரா
ஈரிய கலுழும் இவள் பெருமதர் மழைக்கண்
ஆகத்து அரிப்பனி உறைப்ப, நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலம் செலச் சாஅய்
நினைத்தொறும் கலிழுமால் இவளே!''

# 2. பத்துப்பாட்டு

சங்க இலக்கியம் 'பத்துப் பாட்டு', 'எட்டுத் தொகை' என்னும் இரு பிரிவினதாகும். அவற்றுள் முதலாவதாக வைத்து எண்ணப்படும் சிறப்புடையது பத்துப்பாட்டே யாகும். இதனைப் 'பாட்டு' என்றே வழங்குதலும் உண்டு.

'எட்டுந்தொகை' நூல்கள் தொகுக்கப்பெற்ற காலத்தை ஒட்டித்தான் பத்துப்பாட்டு தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும். எட்டுத்தொகை நூல்கள் ஒவ்வொன்றையும் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயர்கள் பெரும்பாலும் தெரிகின்றன. இப் பத்துப் பாட்டைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றி யாதொன்றும் தெரியவில்லை. இவை தனித் தனிப் பாட்டுக்களாகவே விளங்கி, சிறிது காலத்திற்குப் பிறகு எட்டுத்தொகை என்ற முறைக்கு ஏற்பப் பத்துப் பாட்டு என ஆன்றோரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பர். எட்டுத்தொகை நூல்கள் ஒவ்வொன்றும் சிறிய பாடல்களின் தொகுப்பு; பத்துப் பாட்டு நீண்ட பாடல்களின் தொகுப்பு. எட்டுத் தொகையில் உள்ள பாடல்கள் கருத்துத் தொடர்பு, அளவு ஒற்றுமை முதலியவற்றை உடையன. இவை ஒன்றுக்கு ஒன்று கருத்துத் தொடர்பு அற்றவை; பாடப் பெற்ற காலமும் சூழ்நிலையும் வேறுபட்டவை. முன்னவை உதிரிப் பாடல்கள் போன்றவை. இவை சிறு காவியங்கள் போன்றவை. கைவல்ல ஓவியன் வரைந்து காட்டிய சிறு ஓவியங்கள் என எட்டுத்தொகைப் பாடல்களை நாம் கருதினல், அதே ஓவியங்களைப் பெரிதுபடுத்தி, வண்ணம் தீட்டி முழு வண்ண ஓவியமாக்கியவை போல இப்பத்துப் பாட்டுக்கள் காட்சியளிக்கின்றன எனலாம்.

இவ்வாறு, இப்பத்துப் பாட்டுகளும் நீளமானவையாக இருப்பதில் பல தனிச் சிறப்புக்கள் உள்ளன. ஆங்கில

இலக்கியத்தில் நீண்ட பாடல்கள் (Long Poems) சிறப்புடையன. ஜான் மில்டன், வில்லியம் வேர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, மாத்யூ ஆர்னல்டு போன்ற சிறந்த புலவர்கள் அனைவருமே குறும் பாடல்களுடன் நெடும் பாடல்களும் பாடியுள்ளனர். பெருங்கவிஞர் மில்டன் தமது துறக்க நீக்கத்தை மிக நீண்ட பாடலாக எழுதினர்.

அமைப்பு, அளவு, நடை, பிற அணிச் சிறப்புக்கள் என அனைத்தாலும் ஆங்கிலத் தமிழ் நெடும் பாடல்களிடையே காணப்படும் ஒற்றுமை நயங்கள் ஒப்பிட்டுப் படித்து இன்புறத் தக்கன.

பெருங்காப்பியங்கள்-சிறு பாடல்கள் இவற்றுக்கிடையே இந் நெடும் பாடல்கள் ஒரு வளர்ச்சிப் படியாக உள்ளன. சிறுபாடல்களின் எளிமை, தெளிவு, சுருக்கம், பொருள் அமைதி போல்வனவும் இந்நெடும் பாடல்களில் அமைந்துள்ளன; அதே சமயத்தில் பெருங்காப்பியத்தின் சாயலையும், வருணனைகளையும், கிளைக்கதை போல்வனவற்றையும். குறிக்கோளாகும் உயிர்க்கருத்து ஒன்றை நெடுக வலியுறுத்தும் போக்கினையும், தொடக்கம் - வளர்ச்சி—முறுக்கு— விடுபடல்— முடிவு என்ற நாடக அமைப்பு முறையையும் இவை கொண்டுள்ளன. நீண்ட பாட்டுக்களின் பொற்காலமாகச் சங்க காலம் இருந்தது. பிற்காலத்தே தோன்றிய தூது, உலா போன்றவற்றிற்கு இப் பழம்பாடல்களே வழிகாட்டின எனலாம். அன்று பல குறும் பாடல்களைப் பாடிய புலவர்களே ஒன்றிரண்டு நெடும் பாடல்களையும் பாடுவது என்பது அவர்தம் புலமைச் சிறப்புக்கு அறி-குறியாகப் போற்றப்பட்டது.

ஓர் ஆசிரியர் தமது திறனை வெளியிட—கலைப்பண்பை உணர்த்த இந்நெடும் பாடல்கள் சிறந்த கருவியாக உள்ளன. அதுபோலவே, அவ்வாசிரியரின் இலக்கியத் திறனை அறிய-உணர இந்நெடும் பாடல்கள் நமக்குத் துணைபுரிகின்றன.

குறும்பாட்டுக்களைத் தொகை நூல்களில் அடக்கியமையால் அவை சிதறுது, அழியாது வாழ்கின்றன. நெடும் பாடல்களோ தம் அளவில் நூலமைப்பு உடையனவாதலின் எளிதில் மறையாத இயல்பினவாகும்.

இச் சிறப்புக்கள் பல இருக்கின்ற காரணத்தினுல் தான், எல்லாம் பாட்டுக்களே யாளுலும் அடைமொழியின்றிப் 'பாட்டு' என்ற அளவில் அது நீண்ட பாட்டுக்களையே குறிக்கலாயிற்று.

பத்துப் பாட்டில் சரிபாதி ஆற்றுப்படைகள். அவை திருமுருகாற்றுப்படை (புலவர் ஆற்றுப்படை), பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, கூத்தர் ஆற்றுப்படை (மலைபடுகடாம்) என்பன. மதுரைக் காஞ்சி புறப் பொருளாக நிலையாமையை அறிவுறுத்திப் பாடப்பெற்றது. இவை ஆறும் முழுதும் புறப்பொருட் பாடல்கள்.

அடுத்து, 'நெடுநல் வாடை' அகப்பொருட் பாடலாகும். எனினும் 'வேம்பு' என்ற ஒரு சொல் வந்துவிட்டதால்— வேப்பமாலை சூடிய வேலையுடையவன்[1] என்று குறிப்பிடப் படுவதால் சிலர் இதனைப் புறப்பாட்டு என்பர். எஞ்சிய மூன்றும் அகப்பாடல்களாகும். அவற்றுள்ளும் பட்டினப் பாலையில் புறப்பொருட் செய்திகளே மிகுதியாகும் எனவே முழுதும் அகப்பொருட் பாடல்களாக அமைந்தவை குறிஞ்சிப் பாட்டும் முல்லைப் பாட்டுமே எனலாம்.

முருகு, பொருநாறு, பாண்இரண்டு, முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி, — மருவினிய
கோல நெடுநல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து.

---

1. ''வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு''
—நெடுநல்வாடை 176.

என்ற தனிப்பாடல் ஒன்று பத்துப் பாட்டுக்களின் பெயர்களையும் வரிசை முறையையும் கூறுகிறது. பத்துப்பாட்டுக்களில் ஒவ்வொன்றின் இறுதியிலும் தனி வெண்பாக்கள் சில உள. இவை பிற்காலத்தே பத்துப் பாட்டைப் படித்து அதிலே ஒன்றியவர்களால் பாடிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்[1] என்பார் டாக்டர் மு.வ. அவர்கள். சிலப்பதிகாரத்திலும் காதைகளின் இறுதியில் இத்தகைய தனி வெண்பாக்கள் உள. இவ்வாறு நெடும் பாடல்களைப் படிப்போர் அவற்றின் இறுதியில் — அப் பாட்டின் உயிர்க் கருத்தை விளக்கும் சில தனி வெண்பாக்களைப் பாடிச் சேர்ப்பது என்பது அக்கால மரபாக இருந்திருக்கலாம் என ஊகித்தற்கு முடிகிறது.

முதலில் பத்துப்பாட்டை நமக்குப் பதிப்பித்துத் தந்த டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கட்கு நன்றியுடையோம். இப் பெருநூல் முழுமைக்கும் நச்சினார்க்கினியரின் பேருரை கிடைத்திருப்பது நம் பெரும் பேறுகும். அவரது உரை விளக்கத்தில் கருத்து வேறுபாடு முளைப்பதற்கு இடம் உளதேனும் இருள் சூழ்ந்த பழம் மாளிகையில் முதன் முதலில் விளக்கேற்றி வழிகாட்டிய பெருமை என்றும் அவருக்குண்டு. பெருமழைப்புலவர் திரு பொ. வே. சோமசுந்தரனாரின் புதிய உரையும் சிறப்புடையதாக, விரிவுடன் திகழ்கிறது.

பத்துப் பாட்டுக்களில் இரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் (பட்டினப்பாலை, முல்லைப் பாட்டு) மறைமலை அடிகளார் ஆராய்ச்சியுரை நல்கியுள்ளமை பெரிதும் போற்றத்தக்கதாகும்.

இப்பத்துப் பாட்டுகளில் இயற்கை வருணனைகளும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் மிகுதியாக உள்ளன. தலைநகரங்களின் சிறப்பு, மூவேந்தர்களின் பேராற்றல் உவமை

---

1. பத்துப் பாட்டுச் சொற்பொழிவுகள் — தலைமை உரை.

நயம், யாழ், வருணனை, இயற்கை அழகு என இவை போன்ற பல பகுதிகளை மிகுதியாக உடையது பத்துப் பாட்டு. இதனால்தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இப்பத்துப்பாட்டை,

''பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும், பொருட்கிசையா இலக்கணமில்
கற்பனையே''

எனக் கூறிப் புகழ்ந்துள்ளார்.

**குறிஞ்சிப் பாட்டு**

தமிழ் இலக்கியம் உலகியல் வாழ்க்கையும் நாடக வாழ்க்கையும் அடித்தளமாகக் கொண்டது, தொன்று தொட்டு வரும் இந் நெறியினைப் 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்[1]'' என்பர். இதன்படி தமிழ் இலக்கியத்தை 'அகம்' என்றும் 'புறம்' என்னும் இரு பிரிவினதாக்கினர்.

அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் இல்வாழ்க்கையைப் பற்றியது. புறம் என்பது குடும்பத்திற்கு வெளியே நடைபெறுவன எனத் தகும் கொடை வீரம், செங்கோலாட்சி, போர், புகழ் முதலியன பற்றியது.

அகப் பொருளைச் சார்ந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகள் உள. இவை ஐந்தும் நிலமும் ஒழுக்கமும் பற்றியன. இவற்றுள் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும்: இதன் ஒழுக்கம் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்பர். அஃதாவது தலைவனும் தலைவியும் கூடி வாழுதல்; திருமணம் செய்து கொள்ளுதல் பற்றியது. இக் கூடி வாழுதலுக்கு நிமித்தமான - காரணமான செயல்களும் நிகழ்ச்சிகளும் குறுஞ்சித் திணையில் அடங்கும்.

---

1 தொல்காப்பியம்-பொருள் ; 56

எனவே, இலக்கியத்தில் குறிஞ்சித் திணையைப் படைக்க விரும்புவோர் மலையையும் மலைசார்ந்த இடங்களையும் பின்னணியாக வைத்துப் புணர்தலும் புணர்தல நிமித்தமும் பற்றிய செய்திகளைப் பாடவேண்டும். அதாவது தலைவன் தலைவியரின் இன்ப வாழ்வை, கூடி, வாழும் களிப்பை, திருமணம் புரியும் மகிழ்ச்சியைப் பாட வேண்டும்; அல்லது இவ்வின்பம், களிப்பு, மகிழ்ச்சியை எய்துதற்குக் காரணமான நிகழ்ச்சிகளையேனும் பாடவேண்டும்.

அகம் களவு, கற்பு என இரண்டு கைகோள்களை (ஒழுக்க நிலைகளை) உடையது. திருமணத்திற்கு முந்தியது களவு. அஃதாவது பிறர் அறியா நிலையில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் மனத்துள்ளே காதலித்தல் 'களவு' எனப்படும். இக் களவை முறைப்படி வெளிப்படுத்தி, திருமணம் புரிந்து கொள்ளுதல் — தலைவனும் தலைவியும் உலகறிய மணம் புரிந்து வாழுதல் கற்பு எனப்படும்.

ஒருத்தி களவில் மனதாரக் காதலித்தவனையே கற்பில் மணந்து கொள்ள வேண்டும். வாழ்வு முழுதும் 'களவாக' அமைத்தலும், களவில் ஒருவனைக் காதலித்துக் கற்பில மற்றொருவனை மணத்தலும் தமிழ் இலக்கியத்தில் ஒவ்வா நெறிகளாலும் அது களவும் ஆகாது; கற்பும் ஆகாது. இக் குறிஞ்சிப் பாட்டு களவு என்ற பிரிவைச் சார்ந்தது. களவைக் கற்பாக மாற்றும் 'துறை' அமைந்தது.

குறிஞ்சி, முல்லை முதலிய பெரும் பிரிவுகளாகிய திணைகள், பல சிறு பிரிவுகளாகிய துறைகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. துறை என்ற இச் சிறு பிரிவு நீர்த் துறையை நினைப்பூட்டுகிறது. ஊருணியில் நிறைந்திருக்கும் நீர் பயன்படுவது எப்படி? வழுக்குதலின்றி முறையான அமைப்புடைய துறைகளிருப்பின் அதன் வழிச் சென்று, மக்களும் விலங்குகளும் நீர் பருகுவர், அது போலப் பலவகைப்பட்ட பொருள்களை ஒரு முறைப்படு

தொகுத்து, வகுத்து மனங்கொள்ளும் வகையில் கூறுவன துறைகளாகும்.

துறை அற்ற நீர்நிலைகள் பயன்படா; பயன்படினும் மிகுந்த துன்பத்திற்கிடையே பயன்படும். ஒரு முறைப் படத் தொகுத்துணர்த்தாக் கருத்துக்களும் இவ்வாறே பயன்படாது கழியும் எனலாம்.

குறிஞ்சித் திணை பற்றிய இவ்விவரங்களிலிருந்து. பொதுவாகக் குறிஞ்சி, இன்பந்தரும் உவகைச் சுவை பற்றியது என உணர்கிறோம். ஆனால் இக் குறிஞ்சிப் பாட்டுப் பல சுவைகளும் விரவி, இன்பச் சுவையை மிகுதியும் புலப்படுத்தி, அவலச்சுவையாக (துன்பமுடிவு) முடிகின்றது. இம்முடிபு தலைவியின் நிலையான இன்ப வாழ்வை எதிர் நோக்கிய, துன்ப முடிபாகும். இங்ஙனம் திட்பமான அமைப்பும், நுட்பமான முடிவும் உடையது இக் குறிஞ்சிப் பாட்டு.

சங்க இலக்கியத்துள் பாலைத்திணை பற்றிய பாடல்கள் மிகுதி. அதற்கு அடுத்த நிலையில் குறிஞ்சி பற்றிய பாடல்கள் மிகுதியாக உள்ளன. குறிஞ்சிப் பாடல்கள் அனைத்திலும் இக் 'குறிஞ்சிப் பாட்டு' ஒன்றுதான் மிகப் பெரியதும் சாலச் சிறந்ததுமாகும். கபிலர் சங்க இலக்கியத் துள் 235 பாடல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் 193 பாடல்கள் குறிஞ்சித் திணை பற்றியன. இப் பாடல்கள் அனைத்திலும் கபிலருக்கு, குறிஞ்சித் திணையில் வல்லவர் என்ற சிறப்பும் புகழும் தரக்கூடியது இக் குறிஞ்சிப் பாட்டேயாகும். இதனால் இதைப் 'பெருங்குறிஞ்சி' என்றும் முன்னையோர் வழங்கினர்.

ஒவ்வொரு திணையும் முதற் பொருள், கருப் பொருள் உரிப்பொருள் என்ற மூன்று பிரிவுகளை உடையது முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும். கருப் பொருள்கள் தெய்வம், பறவை, விலங்கு, உணவு முதலியன.

உரிப்பொருள் என்பது மக்களின் செயல் முறைகளைக் குறிக்கும். தொல்காப்பியர் கருத்துப்படி உரிப்பொருள் மிக்க சிறப்புடையது; அதற்கு அடுத்த சிறப்புடையது கருப்பொருள்; அதற்கும் அடுத்த சிறப்புடையது முதற் பொருளாகும்.

இக் குறிஞ்சிப் பாட்டு தோழி, செவிலித் தாய்க்குச் சொல்லும் முறையில் அமைந்துள்ளது. இதில் தலைவியின் காதலைத் தோழி வெளிப்படுத்தி, ''அதே தலைவனுக்குத் தலைவியை மணம் புரிவிப்பதே அறநெறியாகும்; இன்றேல் தலைவியின் உயிருக்குத் தீமை விளையும்'' என அறிவிக் கிறாள். இதை உணர்ந்து, பெற்றோர் தலைவியைக் காதலித்தவனிடமே கைப்பிடித்துக் கொடுக்க வேண்டும்- கைப்பிடித்துக் கொடுப்பார்கள். ஆகவே, திருமணம் செய்வதற்கு முற்காரணமாக நிகழ்ச்சிகளை இப்பாட்டு விவரிப்பதால் இது குறிஞ்சித் திணையாயிற்று. இவ்வாறு உரிப்பொருளால் இது முழுதும் குறிஞ்சித் திணையாக விளங்குவது போலவே, முதற்பொருள் கருப்பொருள்— களாலும் குறிஞ்சித் திணையாக விளங்குகிறது. மலை சார்ந்த இடங்களைப் பற்றியும்; அங்குள்ள மலர்கள், விலங்குகள், பறவைகள், உணவுகள் பற்றியும் இதில் விரிவான புனைவுகள் வந்துள்ளன. ஆயினும் பிற திணை கட்கு உரிய பறவைகள், விலங்குகள் போல்வன சில இதில் மயங்கியும் வந்துள்ளன.

இப்பாட்டு **'அறத்தொடு நிற்றல்'** என்ற துறையா கும். தான் மனத்தால் விரும்பியவனையே மணம் புரிந்து கொள்வதுதான் அறவழியில் நிற்பதாகும். விவரம் அறியாத பெற்றோர் வேறு எவனுக்கும் திருமணம் பேசிவிடாமல் தடுத்து, தலைவியின் காதல் உண்மையை அறிவித்து, முதலில் சினங் கொண் டாலும் பிறகு பெற்றோரையும் ஒப்புக் கொள்ள வைத்து, மனத்தால் வரித்தவனையே மணமேடையில் வரைந்து கொள்ள வழி செய்வதால்தான் இதற்கு அறத் தொடு நிற்றல் என்று பெயர்.

தலைவியின் சம்மதத்தைப் பெற்றுத்தான் தோழி அறத்தொடு நிற்கவேண்டும். அவளும் செவிலியிடம் தான் இதைக் கூறுதல் வேண்டும். செவிலித்தாய் தோழியைப் பெற்றவள். காதல் கொண்ட தலைவியும், அவளைப்பெற்ற நற்றாயும் இக் காட்சியில் வருதலில்லை. தோழி தலைவிக்காகக் கூறுவதை, செவிலித்தாய் நற்றாய்க்காகக் கேட்பாள்! ஆம், தமிழ்ப் பண்புடைய காதலியர் 'நான் இன்னாரைக் காதலிக்கிறேன்' எனத் தாயிடம் நேர்நின்று கூறுவதில்லை. தோழியிடமும் குறிப்பாகவே புலப்படுத்துவர். தோழி செவிலித்தாயிடம் கூறுவதாக இப்பாட்டு அமைந்துள்ளமை இதனால்தான். பிறகு, செவிலித்தாய் நற்றாயிடம் கூறுவாள் என்றும், நற்றாய் தந்தையாரிடமும் தமையன்மாரிடமும் கூறுவாள் என்றும், அவர்கள் சினங்கொண்டு பிறகு ஆறி, திருமணத்திற்குச் சம்மதிப்பார்கள் என்றும் குறிஞ்சிக் கலி ஒன்று கூறுகிறது. அப்பாடலில் தந்தை, தமையன்மார் இக்காதலை ஏற்க முதலில் எதிர்க்கின்ற காட்சியும், பிறகு சிந்தனை செய்து சம்மதிக்கின்ற காட்சியும் அழகாகப் பாடப்பெற்றிருக்கிறது. ஓர் இளம் பெண் தனக்குகந்த கணவனைத் தேர்ந்துகொள்ள நேர்ந்தது என்றால், அதை அவர்தம் பருவத்தின் குறையாகக் கருதினும் கருதலாம்; அவ்விருவர்தம் குற்றமாகக் கருதலாமா?

எனவேதான், முதலில் கோபம் கொண்ட தந்தைமாரும் தமையன்மாரும் பின்பு சம்மதித்ததை,

> "இருவர்கட் குற்றமும் இல்லையால்" என்று
>
> தெருமந்து சாய்த்தார் தலை!"[1]

என அழகிய காட்சியாக அங்கு வரையப் பெற்றுள்ளது. இவ்வாறு அறத்தொடு நிற்கும்பொழுது தலைவியின் குடிப் பிறப்புக்கும் செவிலியின் அறிவுக்கும் குற்றங் கற்பியாத

---

1. கலித்தொகை : 39.

வகையில் சொல்லவேண்டும். முன்னிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளைக் கூறுங்கால் தோழி தனது காவலுக்கும். தலைவியின் கற்புக்கும் நாணத்திற்கும், அறிவு, ஆராய்ச்சி, மனநிறை, பண்பாடு போன்றவற்றுக்கும் பழுது நேர்ந்தது என எண்ணுமாறு கூறிவிடுதல் கூடாது. எல்லா நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளும் முன்னுக்குப்பின் முரணின்றி இருக்க வேண்டும். இக் குறிஞ்சிப் பாட்டைப் படித்து உணர்பவர்கள் இவை அனைத்தும் பொருந்தியிருப்பதை அறிந்து மகிழ்வார்கள்.

இவ்வாறு அறத்தொடு நிற்கும்பொழுது கீழ்க்காணும் ஏழு முறைகளுள் ஏற்பவற்றைக் கூறித் தலைவன் தலைவியரின் காதல் உண்மையை விளக்குதல் வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.[1]

தலைவன் பெருந் தகுதி உடையவனானாலும் எங்கள்-பால் எளிமையுடன் நடந்துகொண்டான் என்று கூறுதலும். அவ்வளவு எளிமையுடன் அவன் நடந்துகொண்டாலும் மிக உயர்ந்தவன் என்று கூறுதலும், தலைவன் தலைவியைக் களிறு போன்ற விலங்குகளிடமிருந்து காப்பாற்றியமையால் அவனை அவள் காதலிக்க நேர்ந்தது எனக் காரணமிட்டுக் கூறுதலும், தலைவன் தலைவியர் தாமாகவே எதிர்பாராமல் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காதலித்தனர் என்று கூறுதலும், அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளவாறே கூறுதலும், ஒருவரை ஒருவர் விரும்புதலைக் கூறுதலும். வெறியாட்டு எடுக்கும் பொழுது, அவ்வேலன் முதலியவர்களை எதிர் மறுத்துக்கேட்டு உண்மையை உணர வைத்தலும் என இந்த ஏழு முறைகளாலும் அறத்தொடு நிற்றல் வேண்டும். இக்குறிஞ்சிப் பாட்டில் வெறியாடும் வேலனை எதிர்த்துக் கேட்டதாக வரவில்லை, எஞ்சிய ஆறுவகைகளாலும் தோழி உண்மையைப் புலப்படுத்துவதாக வந்துள்ளது.

---

1. தொல்காப்பியம்—பொருள் : 12

'அறத்தொடு நிற்றல்' என்ற துறை களவைக் கற்பாக மாற்றுவதற்கான முயற்சியாகும். களவு, கற்பு என்று கூறும் இரு பெரும் கடல்களுக்கு இடையே ஒரு பாலம் போல விளங்குகிறது இத்துறை. அகத்திணைத் துறைகள் அனைத்திலும் சிறப்புடையது. இன்றியமையாமை பொருந்தியது, நுட்பம் அமைந்தது இத்துறை என்று கூற வேண்டும்,

கபிலர் பெருமானால் அருளப்பட்ட இக்குறிஞ்சிப் பாட்டுப் பத்துப்பாட்டுக்களில் எட்டாவதாகும். பத்துப் பாட்டு என்ற பெயருக்கு ஏற்பக் குறிஞ்சிப் பாட்டு என்றும் முல்லைப் பாட்டு என்றும் இரு பாட்டுக்கள் மட்டும் பெயர் பெற்றிருப்பதும் இவை இரண்டும் முழுவதும் வரிக்கு வரி அகத்திணையே பற்றிக் கூறும் பாட்டுக்களாக இருப்பதும் உற்று நோக்கத்தக்கனவாகும்.

செவிலித்தாயிடம் தோழி தலைவியின் காதலைப் பற்றி அறத்தொடு நிற்கும் துறை அமைந்த இப்பாட்டு பல காவியச் சிறப்புக்களை உடையது; வாழ்வோடு ஒட்டிய பொருள் அமைதியும் மனத்தோடு ஒட்டிய பா நடையும் கருத்தோடு ஒட்டிய ஓவியப் படைப்பும் உணர்ச்சியோடு ஒட்டிய சுவைப் பகுதிகளும் பொருந்தி நம் மனத்தோடு ஒட்டி உறவாடுவது!

# 3. கபிலர்

பாட்டுத் தொகையாலும் பாடும் திறத்தாலும் கபிலர் சங்ககாலப் பெரும் புலவர்களில் ஒருவர். மற்ற புலவர் களின் பாடல்களைக் காட்டிலும் இவரது பாடல்களே சங்க இலக்கியத்துள் மிக அதிகம்.

நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியத்துள் இவரது பாடல்களின் தொகை 235. இவருக்கு அடுத்து அம்மூவனார் என்ற புலவரின் பாடல்கள் 127 உள்ளன. பரணர், நக்கீரர், ஔவையார் பாடல்கள் எல்லாம் நூற்றுக்குக் குறை வாகவே கிடைத்துள்ளன.

கபிலர் பாட்டுக்கள் சங்க இலக்கியத்துள் காணப் பெறும் முறை: நற்றிணை 20. குறுந்தொகை 29. ஐங்குறு நூறு (குறிஞ்சி) 100. பதிற்றுப் பத்து (ஏழாம் பத்து) 10. அக நானூறு 18. புறநானூறு 28. குறிஞ்சிப் பாட்டு 1. கலித் தொகை (குறிஞ்சிக்கலி) 29.

இந்த 235 பாடல்களில் குறிஞ்சித்திணை பற்றியன 193. புறப்பொருள் பாடல்கள் 38. எஞ்சியன நான்கும் அகத் திணைப் பாடல்களே. அகநானூற்றில் பாலைத்திணையில் ஒன்றும். நற்றிணையில் முல்லைத்திணையில் ஒன்றும், மருதத் திணையில் ஒன்றும், குறுந்தொகையில் நெய்தல் திணையில் ஒன்றுமாக இவரால் பாடப்பட்டுள்ளன. இதனால் ஐந்திணையும் பாடிய புலவர் என்று ஆகிறது அல்லவா? 'குறிஞ்சி பாடக் கபிலன்' என்னும் மூதுரை, இவ்வளவு அதிகமான - குறிஞ்சிப் பாடல்கள் இவர் பாடியுள்ளதால் மட்டுமன்று-குறிஞ்சித் திணையைக் கற்பனை ஓவியமாக்கி. சொற்படமாக்கி, கருத்துக் காட்சியாக்கிக் காட்டும் திறத்தாலும் இவருக்குப் பொருந்தும்.

கல்விப்பரப்பு, சொல்லாட்சிச் சிறப்பு, கற்பனை நலம், உவமை அழகு, காவிய நுணுக்கம், பாட்டுத் திறம் போன்றவற்றில் கம்பருக்கு ஒப்பிடலாம் கபிலரை!

கபிலர் தாம் வாழ்ந்த காலத்தே பெரும் புகழுடையவராகத் திகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் பிற பெரும் புலவர்கள் பலரும் இவரைப் பாராட்டிப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். அவர்கள் கூற்றிலிருந்தும் இவர் தம்மைத் தாமே கூறிக் கொள்வதிலிருந்தும்[1] இவர் ஓர் அந்தணர் என்று தெரிகிறது. 'புலன் அழுக்கற்ற அந்தணாளன்' என்பதால் இவர் திருமணமே புரிந்துகொள்ளாத தூய துறவியாக வாழ்ந்திருக்க வேண்டும் என அறிகிறோம். மற்ற எல்லா உயிர்க்கும் 'செந்தண்மையாம்' அருள் பூண்டு ஒழுகிய காரணத்தால் 'அந்தணன்' என்றும் தூய துறவியாக வாழ்ந்த காரணத்தால் புலன் அழுக்கற்ற அந்தணாளன் என்றும் இவர் அழைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

பாரியின் தோழராக விளங்கிய பான்மையும்; பறம்பு மலையை மூவேந்தரின் முற்றுகையிலிருந்து காக்க முயன்ற பெருமையும்; பாரி மகளிரைத் திருமணம் செய்து கொடுக்க முயன்ற அருமையும் அனுபவம் முதிர்ந்து அறிவு நிறைந்த வயதான ஒரு தூய துறவியை நம் மனக்கண் முன் நிறுத்துகின்றன. அகநானூற்றில் நக்கீரர்,

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்"[2]

என இவரது பெரும்புகழையும் வாய்மையையும் புகழ்ந்துள்ளார்.

பதிற்றுப்பத்தில் ஏழாவதனை, கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேரமன்னன் மீது

---

1 புறம் : 200, 201.

2 அகம் : 78.

பாடினர். அப் பெரு வேந்தன் இச் சிறந்த பாடல்களுக்காக, "சிறுபுறம் என நூறுயிரம் காணம் கொடுத்து, நன்று என்னும் குன்றேறி நின்று தன் கண்ணில் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான்"[1] என்று குறிக்கப் பட்டுள்ளது. அஃதாவது நூறுயிரம் பொற்காசுகளை (காணம்) சிறு நன்கொடையாகக் கொடுத்தான். மேலும், நன்று என்னும் மலைமீது ஏறி நின்று பார்த்து, கண்ணுக்குத் தோன்றிய நாடுகள் அனைத்தையும் 'இவை உமக்கு' எனக் காட்டி அவ்வேந்தன் கொடுத்தானும். பதிற்றுப் பத்துள் எட்டாவது பத்தைப் பாடிய பெருங் குன்றூர் கிழார்,

'உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவில் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே'[2]

என்று, கபிலர் பெற்ற இப் பரிசிலைப் புகழ்ந்துள்ளார். அப்பாடலுக்கே 'நாடுகாண் நெடுவரை' என்று பெயர். 'சுற்றிலுமுள்ள நாடுகளைப் பார்ப்பதற்கு ஏற்ற உயர்ந்த மலை' என்பது இதன் பொருள். உவலை கூரா (இழிவு தோன்றாத) நெஞ்சம் என்றமையான் கபிலரின் பண்பாட்டு உயர்வு தெரிகிறது. கவலை இல் நெஞ்சம் என்றது கபிலரின் பற்றற்ற துறவு வாழ்க்கையினால் வந்தது எனலாம். அல்லது, கம்பருக்கு ஒரு சடையப்ப வள்ளல் கிடைத்தது போல கபிலருக்கு ஒரு பாரிவள்ளல் கிடைத்தமையால் அவர் கவலையற்ற நெஞ்சினராக வாழ்ந்தார் என்றும் கூறலாம்.

கபிலரது புலமைத் திறத்தைச் சங்க காலத்திலேயே புலவர்களும் அரசர்களும் பொது மக்களும் அறிந்து போற்றினர்கள். சேரமன்னன் மாந்தரஞ் சேரல் இரும்

---

1 பதிற்றுப் பத்து: 70, பதிகம்.
2 ,, ,, 85.

பொறையைப் பொருந்தில் இளங்கீரனார் பாடிய புற நானூற்றுப் பாடல் இதனை நன்கு விளக்குகின்றது.

அப்பாடல் பகுதி

''தாழாது
செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப்
பாடுவன் மன்னால் பகைவரைக் கடப்பே''1

என்பதாகும். இதன்பொருள், 'விரைவாக, பல பொருட் சிறப்புக்களை அடக்கிய செய்யுளைப் பாடும் செம்மை வாய்ந்த நாவினை உடையவன்; மிக்க கேள்வி அறிவை உடையவன்; விளங்குகின்ற புகழை உடையவன் கபிலன். அத்தகையான் இன்று இருந்தால் மிக நலமாக இருக்கும்; அப்பேற்றைப் பெற்றிலேனே என்று கூறி. அரசே! நீ வருந்துகின்றனை. நீ பகைவரை வென்ற மையை, அச் சிறப்பிற்குப் பொருந்த நானும் பாடு வேன்,' என்பதாகும். கபிலன் இருந்து தன்னைப் பாட வில்லையே என்ற பொறையனின் வருத்தமும், அப் பெரும் புலவரைப் போலத்தாமும் பாட முயலுவதாகக் கூறும் புலவரின் ஊக்கமும் எதைப் புலப்படுத்துகின் றன? கபிலரின் வற்றாத புகழையும் வளமான திறமை யையும் அல்லவா?

மாறோக்கத்து நப்பசலையார்,

''புலன் அழுக்கற்ற அந்தணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிடன் இன்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்''2
''பொய்யா நாவிற் கபிலன்''3

1. புறம் : 53.
2. புறம் : 126.3 புறம் : 174.

என்று கபிலரது அகத்தூய்மை, மிகுதியாகப் பாடியமை புகழ், வாய்மை முதலிய சிறப்புக்களைப் பாராட்டியுள்ளார் பழைய உரையாசிரியர்கள் இவருடைய பாடல்களை மேற்கோளாக எடுத்தாளும் போது கபிலரது 'பாட்டு' என்று ஆசிரியர் பெயரால் எடுத்தாளும் முறையே இவருக்குத் தொன்று தொட்டு இருந்துவரும் சிறப்பை விளக்கும்.

திருவள்ளுவர், தொல்காப்பியர், இளங்கோ, கம்பரைப் போலக் கற்று உணர்ந்து மகிழ்ந்து கொண்டாடத்தக்க—விழாவெடுத்துப் போற்றத் தக்க பெரும் புலவராகக் கபிலர் விளங்குகிறார்.

கபிலர் என்ற பெயர் வடசொல் போலத் தோற்றுகிறது. இப்பெயர் எவ்வாறு வந்தது? சாங்கிய நெறியை நிறுவியவர் பெயர் 'கபிலர்' என்பதாகும். புராணங்களில் வரும் 'பதினொரு கபிலரைப்' பற்றிப் பரிபாடல்[1] சுட்டுகிறது. பதினொன்றாம் சைவத் திருமுறையில் உள்ள சில நூல்களை எழுதிய கபிலதேவ நாயனாரும் ஒருவர் உளர். 'நால்வகைச்சாதி இந் நாட்டில் நீர் நாட்டினீர்!' என உணர்ச்சியுடன் கேட்கும் புரட்சிக் கபிலர் ஒருவரும் வாழ்ந்துள்ளார். சங்க காலத்திலேயே இவருடன் வேறு பாடு அறியத் **'தொல் கபிலர்'** எனவும் ஒருவர் அழைக்கப் படுகிறார். தொல்காப்பிய உரைகளால் கபிலர் எழுதிய கபிலம்' என்ற நூல் ஒன்று இருந்ததாக அறிகிறோம்.

இவருக்குக் கபிலர் என்று பெயர் ஏற்பட்டமைக்குக் கீழ்வரும் காரணம் பொருந்துதல் கூடும். புறநானூற்றில் கபிலர் பாட்டு ஒன்றில் கீழ்க்காணும் வருணனை வருகிறது.

> ''துகில் விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
> அகிலார் நறும்புகை ஐதுசென்று அடங்கிய
> கபில நெடுநகர்க் கமழும் நாற்றமொடு
> மனைச் செறிந்தனளே''[2]

---

1. பரிபாடல் : 3-7
2. புறம்:337

"துகில் என்னும் பட்டாடையை விரித்து உலர்த்தும் போது அது மடங்கிச் சுருண்டு காற்றிலே பறப்பது போல, குளிர்ச்சி பொருந்திய அகிலிலிருந்து வரும் மணம் மிக்க புகையானது மென்மையாக மேலே பரந்துசென்று மாளிகை முழுதும் நிறைந்துவிட்டது. அக் கபில (புகை) நிறமுடைய நல்ல மணத்துடன் கூடிய மாளிகையில் அடைப்பட்டுக் கிடக்கிருள் மங்கை", என்பது இதன் பொருளாகும். இதில் 'கபிலம்' என்ற சொல்லாட்சி சிறப்புடையது. அகில் புகை படர்ந்து அதன் நிறமாய்க் காட்சியளிக்கும் மாளிகையைக் 'கபிலநெடுநகர்' என்று கூறுவது புதுமையும் பொலிவும் உடையதாகும்.

சங்க இலக்கியத்துள் நூற்றுக்கணக்கான புலவர் களின் இயற்பெயர் தெரியவில்லை. அவர்கள் பாடிய பாக்களில் வரும் சிறந்த சொல்லாட்சிகளாலும் நலமிக்க தொடர்களாலும் நல்ல உவமைகளாலும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். ஊட்டியார், குயமனர் போல்வன சொல்லாட்சியால், அவை எடுத்தாளப்பெற்ற சிறப்பினுல் ஆசிரியர்க்குப் பெயராகி அமைந்தவை.

இது போலவே, சங்ககாலப் பெரும் புலவராகிய கபிலருடைய இயற்பெயரும் தெரிந்திலது. அல்லது தெரிந்தும் மறக்கப்பட்டிருக்க வேண்டும். இவருடைய புறநானூற்றுப் பாடலைப் பார்த்த புலவர்கள் இச்சொல் லாட்சி நோக்கிக் கபிலர் என இவரை அழைத்திருக்க வேண்டும். இச்சிறப்புப் பெயரே நாடறிந்த பெயராக அன்றே வழங்கி நிலைத்து விட்டது.

பேராசிரியர் டாக்டர் துரை அரங்கசாமி அவர்கள் பிற்காலப் பாகவதர்கள் தமது கீர்த்தனைகளில் தம் பெயரை முத்திரையாக வைப்பது போலக் கபிலரும் தம் பெயரைத் தமது பாடலில் வைத்துப் பாடியுள்ளார் என்று கூறுகிருர்கள்.[1] சங்க இலக்கியத்தில் பாடலால்

1. சங்க காலச் சிறப்புப் பெயர்கள் : பக். 72.

பெயர் பெற்றவர் உண்டே தவிர, பாடலில் தம் பெயரைப் பதித்தவரை யாண்டும் காணல் இயலாது.

கபிலர் காலத்தில் அவரைப் போலச் சீரும் சிறப்பும் ரூபற்ற பெரும் புலவராகத் திகழ்ந்தவர் பரணர் ஆவார். கபிலரும் பரணரும் சொற்போர் நடத்தியதாகப் பழம் செய்தி ஒன்று கூறுகிறது.[1] இருபெரும் சமமான புலவர்களாக, நாட்டு மக்களிடையே புகழோங்கி வாழ்ந்த இவ்விருவரும் கபில பரணர் என்றே அழைக்கப்பட்டனர். அக்கால முறைப்படி அறிவின் மேன்மையையும் கொள்கைச் சிறப்பையும் அறியவும் அறிவுறுத்தவும் சொற்போர் நடத்திய இவர்கள் பின்னுளில் ஒருவர் திறமையை ஒருவர் மதித்து நண்பர்களாகவும் வாழ்ந்திருக்க வேண்டும். எனவே, கபில பரணர் என்பது நாம் நினைப்பதுபோல நட்புக் கருதிய உம்மைத் தொகைநிலைத் தொடர்மட்டுமன்று; சமமான புலமை கருதி நாட்டு மக்களிடையே ஒருசேர இணைத்துப் பேசப்பட்ட வழக்காற்றின் வடிவமைந்த தொடராகும் கபிலரும் பரணரும் என்ற உம்மைகள் மறைந்து வருவது உம்மைத் தொகைநிலைத் தொடராகும். இது இலக்கணத்தில் வரும் எடுத்துக்காட்டு.

கபிலர் பாரியின் இனிய உயிர் நண்பர். மூவேந்தர்களும் பாரி வள்ளல் மீது பொறாமை கொண்டு போர் தொடுத்த போது, பாரியின் பக்கத்தில் நீங்காத் துணையாக நிழல் போல் நின்றவர் அவர் பாரிக்காக அம்மூவேந்தரை எள்ளி இகழ்ந்து பாடியவர். காலத்திற்கு ஏற்ப வேறுபடும் நண்பர்களையுடைய உலகத்தில், நட்புக்காக உயிரையும் கொடுத்த சான்றோர்களைச் சங்க இலக்கியம் நமக்குக் காட்டுகிறது, பாரி இறந்தபிறகு, பறம்பு மலையை விட்டுவிட்டுப் பிரிந்து செல்லும் கபிலர், சிறிது தூரம் சென்ற பிற்பாடும் கண்ணை விட்டு மறையாமல் நிற்கும் அப்பறம்பு மலையை ஒருமுறை திரும்பிப்

1. வீர சோழியம்—தொகைப்படலம்—கலித்துறை : 6.

பார்த்துப் பாடிய பாட்டு, நம் நெஞ்சத்தை இன்றைக்கும் அனலிலிட்ட மெழுகென உருக்கிவிடும். பாரி மகளிரைத் திருமணம் செய்து வைக்க அவர்பட்ட பாடு சொல்லும் தரத்ததன்று. இறுதியாக அவர் பெண்ணையாற்றங்கரையில் வடக்கிருந்து உயிர் நீத்ததாகவும் நெருப்பில் புகுந்து இறந்ததாகவும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கருதுகின்றர்.[1]

கபிலரால் பாடப்பெற்றவர்கள் செல்வக் கடுங்கோ வாழியாதன், அகுதை, அந்துவன், ஆரிய வரசன் பிரகத்தன், இருங்கோவேள் (புலிகடிமால்), எவ்வி, ஓரி காரி (மலையன், முள்ளூர் மன்னர்), நள்ளி, பாரி, பாரி. மகளிர், பேகன், விச்சிக்கோன், கழாத் தலையார், பேகன் மனைவி கண்ணகி, பொறையன் என்பவர்கள் ஆவர்.

இருங்கோவேள் என்னும் அரசனுக்கு உரிய நகரமாக 'அரையம்' என்பது விளங்கியது. அது 'கோடிபல அடுக்கிய பொருளை' அவருக்கு உதவியதாம். அந்நரகம் பின்னாளில் புலவரை இகழ்ந்ததன் விளைவாக அழிந்து பட்டது. இருங்கோவேள் பாரி மகளிரை ஏற்க மறுத்து இகழ்ந்து பேசியபோது கபிலர் இதற்கு முன்பு கழாத்தலை என்ற பெரும்புலவரை, இந்த இருங்கோவேளின் முன்னோர் இகழ்ந்தமையால்தான் அரையம் என்னும் செல்வ வளம் மிக்க அவர்களது நகரம்' அழிவுற்றது என்று எடுத்துக் காட்டுகிறார். 'எனவே இனியும் அவ்வாறு இகழாது இருப்பாயாக!' என்று கண்டித்துக் கூறுகிறார்;

''நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியல் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே![2],

---

1. திருக்கோவலூர்க் கல்வெட்டு திரு. து அ கோபிநாத ராவ், செந்தமிழ்-தொகுதி: 4-232 ஆம் பக்கம்,
2. புறம்:202

என்பது கபிலர் வாக்கு. இதிலிருந்து தம்போலும் புலவரிடத்துக் கபிலர் கொண்டிருந்த பெரும்பற்றும் மரியாதையும் விளங்குகின்றன.

ஆரியவரசன் பிரகத்தன்

குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் காணப்படும் குறிப்பு இது;

"ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது."

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு இரண்டையும் தவிரப் பத்துப் பாட்டுகள் அனைத்தும், இறுதியில் பாடியவர் பெயரும் பாடப்பட்டவர் பெயரும் பெற்றுத் திகழ்கின்றன.

முல்லைப் பாட்டில் பாடிய புலவர் பெயர் மட்டும் இறுதியில் குறிக்கப் பெற்றுள்ளது. குறிஞ்சிப் பாட்டில் தான் இப்புதுமையான குறிப்புக் காணப்படுகிறது. இதிலிருந்து முருகாற்றுப் படையில் முருகனையும், பொருநாற்றுப் படையில் கரிகாலனையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொள்வது போல, ஆரியவரசன் பிரகத்தனை இதற்குப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்வதற்கில்லை.

இத் தொடரை வைத்து மூன்று விதமாகப் பொருள் விரிக்க முயலலாம் :

(1) தமிழ் அறிவித்தற்கு என்பதால் தமிழை அகர வரிசையிலிருந்து எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தார்.

(2) தமிழை இழிவாக மதித்ததால் அதன் பெருமையை அறிவுறுத்துவதற்குப் பாடினார்.

(3) தமிழில் உள்ள அகப்பொருளின் சிறப்பை அது ஆரிய முறையாகிய கந்தருவமணத்திலும் வேறுபட்டது என்பதை அறிவிக்கப் பாடினார்.

இவற்றுள் முதற்கூற்று முற்றும் பொருந்தாது. தமிழைத் தொடக்கத்திலிருந்து படிக்க, எழுதக் கற்றுக் கொடுப்பது கபிலரின் நோக்கமாக இருந்திருந்தால், அரிச் சுவடியை எழுதிக் கொடுத்திருப்பார்; 'குறிஞ்சிப்பாட்டை' எழுதிக் காட்டியிரார். தமிழ் 'அகர' வரிசை அறியார்க்குக் 'குறிஞ்சிப்பாட்டை'ப் பாடித்தந்தார் என்பது. ஊமைக்குச் சொற்பொழிவாற்றக் கற்றுக் கொடுத்தார் என்பது போலாகும்.

இரண்டாவதாகக் கூறும் முறைப்படி, ஆரியவரசன் தமிழை இழிவாக எண்ணியமைக்கோ அவ்விழிவை எதிர் மறுத்துப் பாடப்பெற்றது இது என்பதற்கோ பாட்டில் சான்றுகள் எதுவும் இல்லை.

'குறிஞ்சிப்பாட்டை'ப் படித்துப் பொருளுணருமளவு ஆரியவரசன் தமிழில் ஆற்றல் பெற்றிருந்தான். பொருளி லக்கணம் பற்றி அவன் கற்றபோது இலக்கண நூல் களால் அவன் முற்றும் தெளிவு அடையவில்லை. தமது நாட்டுக் கந்தருவ மண முறைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடுகளை அவன் அறிய அவாவினன். இந்நிலை யிலேதான் கபிலர் குறிஞ்சிப்பாட்டைப்பாடி, அவனைத் தமிழின் சிறப்பறியச் செய்தார்

இவ்வாறு, மூன்றாவதாக உள்ள முறைப்படி தமிழிலே உள்ள அகப்பொருளின் சிறப்பை அறிவுறுத்த, இந்நூல் பாடப்பெற்றது என்பதே உண்மையாகும் இதனைப்பேரா சிரியர் திரு கூ. வெள்ளைவாரணனுர் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார். தமிழ் என்றாலே அது தமிழுக்கே சிறப்பான பொருள் இலக்கண, இலக்கியங்களைக் குறிக்கும் என்பதை நிலை நாட்டியுள்ளார்;

''ஈண்டுக் கபிலர் அறிவுறுத்திய தமிழ் என்பது பிற மொழிக்கு இல்லாத அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றையே குறித்து வழங்கியதாகும். தமிழ் என்னும் சொல்லால்

தமிழுக்கே உரிய அகப் பொருளைக் குறித்து வழங்குதல் தொல்லோர் மரபாகும்.

''தள்ளாப் பொருள் இயல்பின் தண்டமிழ் ஆய் வந்திலார்
கொள்ளார் இக்குன்று பயன்''

எனவரும் குன்றம்பூதனார் பரிபாடல் குறிப்பினாலும். இறையனார் களவியல் நுதலிய பொருள் இதுவெனக் குறிப்பிடவந்த உரையாசிரியர் ''இந்நூல் என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலியதென்பது'' என விளக்கிய உரைக் குறிப்பினாலும் இம்மரபு புலனாதல் காணலாம்!''[1]

இதிலிருந்து தமிழ் அறிவுறுத்தினர் என்பது, பொருளின் ஒரு பிரிவாகிய அகப்பொருளை — அது பிற மொழிக்கு இல்லாத பெருமையென்பதை — அறிவுறுத்தினர் எனப் பொருள்படுகிறது. தொல்காப்பியர்.

''மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே''[2]

என்று, இக்களவுக் கூட்டத்தை ஆரியர்களின் கந்தருவ மணம் போன்றது என ஒப்புமைப்படுத்தி விளக்கியுள்ளார். இதனால் இவ் ஆரியவரசன் கபிலரைச் சந்தித்த காலத்தே ''பொருளிலக்கணம் உங்களுக்கே சிறப்புடையது என்பது எங்ஙனம் பொருந்தும்? எங்களுடைய எட்டுவகை மணத்தில் ஒன்றாகிய கந்தருவ மணத்தைப் பின் பற்றித்தானே நீங்கள் களவு மணத்தை அமைத்துள்ளீர்கள்? வேறு சிறப்பு என்ன?'' என்று கேட்டிருப்பான்.

கபிலர், ''உண்மைதான், ஓர் இளைஞனும் கன்னியும் முன்னறியாராய், ஊழ்வயத்தால் தாமே எதிர்ப்பட்டு மனங்கலந்து காதல் கூர்ந்து களித்தல் வரைக்கும்

---

1. பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்
2. தொல் பொருள் — 89

உங்கள் நாட்டுக் கந்தருவ மணமும் எங்கள் நாட்டுக் களவு மணமும் ஒன்று தான். ஆனால் அதற்குப் பின்னே நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனித்தால் இவ்விரண்டு மணங்களும் பெரிதும் வேறுபட்டன என்பது விளங்கும்'' என்று விளக்கியிருப்பார்.

ஆரிய அரசன் பிரகத்தின் அதனுடன் விட்டிருப்பானா? ''ஏதோ'' பின்னே நடைபெறும நிகழ்ச்சிகளால் பெரிதும் வேறுபாடு உண்டு என்கிறீர்களே! அதனையும் விளக்கி அருளுங்கள்!'' என்று கேட்டிருப்பான்.

கந்தருவ மணம் என்பது பிறர் அறியாமல் ஓர் இளைஞனும் கன்னியும் தாமே ஊழ் வயத்தால் எதிர்ப்பட்டுச் சந்திப்பதாகிய தொடக்க நிலையை மட்டும் குறிக்கவில்லை. திருமணம் புரிந்து கொள்ளும் இறுதி நிலையும் அதுவேயாகும். கந்தருவ மணம் புரிந்து கொண்டனர் என்றால் பிறர் அறியாமல் கணவன் மனைவி ஆகிவிட்டனர் என்று பெயர்.

இரண்டாவதாகக் கந்தருவ மணத் தம்பதிகட்கு உடல் கூட்டமும் குழந்தைப் பேறும் வாய்த்தனவாகப் பாடுதல் மரபு துஷியந்தன் சகுந்தலையை மணந்தப் போன்றது அது.

கந்தருவ மணமக்கட்குப் பின்னர் மனவினை ஒன்று தனியே நடைபெறுவதாகப் பாடுதல் இல்லை. அன்றே யாவும் முடிந்து விடுகிறது.

தமிழர் 'களவு மணம்' பின்னால் ஏற்படும் திருமணத்திற்குத் தோற்றுவாயாகும். தலைவன் தலைவியர் ஆவரே யன்றிக் கணவன் மனைவியர் ஆகார். ''நேர் இறை முன்கை பற்றி'' நாடறி நன்மணம் புணர்ந்ததற்குப் பிற்பாடு தான் கணவன் மனைவியர் ஆவர்.

களவு, கற்பு என்பன நாணயத்தின் இருபுறம் போன்றவை. தமிழ்ப் பண்பின்படி இவற்றுள் பின்னதாகிய கற்பு இல்லையானால், முன்னதாகிய களவும் இல்லை, வெறும் காம வெறியே எஞ்சும். அது பெருந்திணையின் பாற்படும்.

மணமாகா இளைஞன், மணம் பெறத் தக்க பூப்பெய்திய நங்கையைக் கண்டு, காதல் கொள்வதே தமிழர் தம் களவுக்கூட்டம், மணமான இளைஞன் பிறிதொரு கன்னியைக் கண்டு. காதலித்து மணந்தான் எனப்பாடினால் அதற்கு இடம்கொடுத்தவளைப் பரத்தை அல்லது காதல் பரத்தை என்றும்-அவனைப் பரத்தையிற் பிரிந்தான் என்றும் பாடுவது தமிழ் இலக்கிய மரபு. இவ்வளவு வேறுபாடுகளையும் கபிலர் அவனுக்கு விளக்கிக் கூறியிருப்பார். மேலும், அவ்வரசன் மனமகிழும் வண்ணம் மேற்கண்ட கருத்துக்கள் அனைத்தையும்—வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாக விளக்குகின்ற, கட்டுரையாக விளக்காமல் கதையாகக் கூறுகின்ற, இலக்கணமாக எழுதாமல் இலக்கியமாகப் படைக்கின்ற முறையைப் பின்பற்றி இக்குறிஞ்சிப்பாட்டாகப்பாடி அவ்வரசனுக்குத் தந்திருக்கவேண்டும்.

'இதற்குப் பாடலில் ஏதும் சான்றுகள் உண்டோ?' என்று நீங்கள் கேட்கலாம். அவ்வகச் சான்றுகளை இங்கே நாம் ஆராய்வோம்.

கபிலர் இக் குறிஞ்சிப் பாட்டை 'அறத்தொடு நிற்றல்' என்ற துறையமையப் பாடியதே தக்க சான்றாகும் ,களவாக இருந்த காதலைக் கற்பாக' மாற்றும் துறை இது தலைவியின் காதலைப் பெற்றோர் அறியச்செய்து, முறைப்படி மணம்நடக்க வழி செய்வது, இதில் இயற்கைப் புணர்ச்சி கூறப்படுகிறது. அஃதாவது முதன் முதல் இருவரும் ஊழ்வயத்தால், தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது பிறகு அடிக்கடி சந்தித்து அளவளாவ முடியாமையைக் கூறுகிறார். தலைவியின் மெலிவைக் கூறுகிறார். 'நோய்' போலக் காதல் துன்புறுத்துவதை விளக்குகிறார்.

இருவரும் திருமணம் நடைபெறுவது என்றோ என்று ஏங்குகின்றனர். தொட்டவனையே கட்டிக் கொள்ள

தோழியின் நாவன்மைக்கு இப்பாட்டுச் சிறந்ததோர் உதாரணம்.

பழங்காலப் பழக்க வழக்கங்களையும், திருமண முறைகளையும், விருந்தோம்பும் விதத்தையும், காதல் மணக் காட்சிகளையும் தொகுத்துத் தருகின்ற நாகரிகப்பேழையாகவும் இக்குறிஞ்சிப் பாட்டுத் திகழ்கிறது,

# 4. அமைப்பும் அழகும்

## தோழியின் கூற்று

இக்குறிஞ்சிப் பாட்டு முழுவதும் தோழி செவிலித் தாயிடம் கூறுவதாக அமைந்துள்ளது. கவிக்கூற்முக ஒரு வரி கூட வரவில்லை.

சங்கப் பாடல்களில் அகத்திணை பற்றியன அனைத்தும் தலைவி, தோழி, தலைவன் முதலிய உறுப்பினர்கள் தாமே பேசும் முறையிலோ அல்லது தாமே உணரும் முறையிலோ எழுதப்பட்டனவாகும் அஃதாவது, தலைவனும் தலைவியும் ஆடிப்பாடிக் களித்ததையெல்லாம் தலைவி கூறுவாள்; தலைவன் கூறுவான்; அல்லது தலைவியுடன் பிரித்து அறியமுடியாத தோழி கூறுவாள். இவ்வாறு பாப் புனைவரேயன்றிக் கவிஞர்கள் தாமே கூறுவதாக அமைக்கமாட்டார்கள். பிற்காலத்தில், கவிஞரே கூறுவதாகக் காவியங்களிலும், உலா போன்றவற்றிலும் அமைத்தனர். முழுதும் நாடகக்காப்பிய நூலாகிய சிலப்பதிகாரத்தில் இவ்விரு திறங்களும் கலந்து வந்துள்ளன.

அகத்துறைப் பாடல்கள் தாமே அனுபவித்து உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம் பற்றியன. எனவே அவரவர்களே கூறுவதாக அமைக்கும் முறை தான் நாகரிகமானது; சிறப்புடையது. புறப் பாடல்களோ, ஆசிரியன் கூற்முக வரத்தக்கன. இவ்வாறு தாமே உள் உணர்ந்து கூறுவதாக அமைவன 'அகம்' என்றும், பிறரும் அறிந்து கூறக்கூடியன 'புறம்' என்றும் பொருள் வெளிப்பாட்டு முறையால் பெயர்பெற்றன எனவும் இவற்றை விளக்கிக் கூறலாம்.

இன்று புனைகதைகள், சிறுகதைகள் எழுதுவோர் அனைவரும் அந்த அந்த உறுப்பினரே உணர்ந்து கூறுவதாகத் தம் எழுத்தோவியங்களை அமைக்கின்றனர். இவற்றை நாம் வியந்து, சுவைத்து மகிழ்கின்றோம். உறுப்பினர்களே பேசும் இவ் 'உத்தி' உள்ளதை உள்ளவாறு உணர்த்தப் பயன்படுகிறது; உணர்ச்சி நிலைகளை அப்படியே படம் பிடிக்க உதவுகிறது! உளநூல் முறைப்படி படிப்பவர் மனத்துள் கதையில் வருபவர்களை உறவாட வைக்கிறது.

இம்முறையே சிறந்த அமைப்பு முறை என்பர் இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வாளர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இம்முறையை ஆயிரக்கணக்கான அகப்பாடல்களில் கையாண்டு நம் புலவர் பெருமக்கள் வெற்றி கண்டனர். இது சங்க இலக்கியத்திற்கு உரிய தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும்.

**தோழியின் சிறப்பு**

சங்க இலக்கியத்தில் தோழி மிகவும் சிறப்புடையவள். தெருக் கூத்துப் பார்ப்பவர்கள் 'தோழி' யைப்பற்றிக் கொள்ளும் நினைவு வேறு; சங்க இலக்கியத்தில் வரும் தனிச் சிறப்புடைய தோழியின் ஓவியம் வேறு. செவிலியும் தோழியும் தாழ்ந்த குடியினர் என்பது பிற்காலத்தாரின் பிழைபட்ட கருத்து. எல்லா வகையாலும் நற்றாயாம் பெற்றதாய் அளவு செவிலியும் சிறப்புடையவள். தலைவி அளவு தோழியும் சிறப்புடையவள் இன்னும் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும் எல்லா வகையாலும் செவிலிக்கும் தோழிக்கும்தான் மிகுதியான இடம் உண்டு; சிறப்பும் உண்டு. தொல்காப்பியரும் 'தாங்கரும் சிறப்பின் தோழி' என்று புகழ்கின்றார்; பிறர் துன்பம் துடைக்கும் தோழிக்கு நெஞ்சுரம் வேண்டும் என விளக்குகின்றார்.

இன்று புனைகதைகள் — நாவல்கள் எழுதுவோர் பொதுவாகத் தம்மையும் ஓர் உறுப்பினராக அக்கதையில்

படைத்துக் கொண்டு தம் சொந்தக் கருத்துக்களைக் கூறிப் போவதுண்டு. பேரறிஞர் டால்ஸ்டாய் தாம் எழுதிய அன்னு கரீனிஞ என்ற நாவலில், தம்மையும் ஒரு பாத்திரமாகப் படைத்துள்ளார் என்பர். தமிழில் பேராசிரியர் மு வ. அவர்களின் நாவல்களின் வரும் 'அருளப்பர்' அவரின் சாயலமைந்த உறுப்பினரேயாவர். சங்க காலத்துப் பேரறிஞர்கள் தாம் எழுதிய அகப் பாடல்கள் அனைத்தையும் அவ்வவ் வுறுப்பினர்களின் கூற்ருகவே படைத்தனர். ஆயினும் தம் கருத்தையும் அப்பெரும் புலவர்கள் சொல்ல விழைந்திருப்பார்கள் அல்லவா? தோழி கூற்ருக வரும் இடங்களில்தான் அவர்கள் தம் கருத்தை மறைமுகமாக அறிவுறுத்துவது எளிதாயிற்று. தாயர், பாங்கன், கண்டோர் கூற்றுக்களில் சிறுபானமை, புலவர்கள் தம் கருத்தைக் கூற வாய்ப்பு இருப்பினும் மிகுதியான இடங்களில் வரும் தோழி பிற உறுப்பினர்கள் அனைவருடனும் உள்ளங்கலந்து உரிமை யுடன் பழகுபவள் ஆதலினுல், அவள் வாயிலாகப் புலவர் தம் கருத்தை வெளிப்படுத்துவதே பெரு வழக்கா யிற்று. இதனுல் இலக்கியத்தில் தோழி என்ற பாத்திரமே அறிவுநிலை, புனைவு நிலை, தகுதிநிலை போன்றவற்ருல் புலவர் நிலைக்கு உயர்ந்து விளங்குகிறது.

தோழி தலைவியுடன் பிரித்தறிய முடியாத தன்மை உடையவளாதலின் தலைவி உணர்வதைத் தானும் உணர்ந்துகூற இயலும், தோழி தலைவியின் வேறுபட்ட வளென்பது உண்மையாதலின் பிரிந்துநின்று - மூன்ருவது ஆளாக நின்று திருத்தவும் இயலும். தலைவி, தலைவன், தாயர் போன்ருரின் குற்ற நற்றங்களைத் திறன் ஆய்வு முறையில் எடுத்துக் கூறவும் அவளால் இயலும்.

இத்தோழி தலைவன் தலைவியர் உறவையும் அறிவாள். அது பற்றிய ஊரார் வாயையும் உற்றுக்கேட்டு அறிவாள். இதனுல் தலைவன் தலைவியரை நல்வழிப்படுத்தவும் தீங்கு வராமல் காக்கவும் அவளால் முடியும்.

இல்வாழ்க்கை ஏற்கப்போகும் இளவரசியாகிய தலைவிக்கு நல்ல அமைச்சி ஆவாள் தோழி எனலாம். சங்க இலக்கியத்துள் மிகுதியானது தோழி கூற்றேயாகும்: அடுத்து மிகுதியானது தலைவி கூற்றாகும்.

இக்குறிஞ்சிப் பாட்டில், தலைவியைப்பற்றி முதன் முதலில் தாயிடம் கூற வருகின்ற தோழி 'ஒலிமென் கூந்தல் என் தோழி மேனி' (2) என்று கூறுகிறாள். ஆம். நமக்குத்தான் முன்னிற்பவள் தலைவி, அடுத்து நிற்பவள் தோழி என்ற வேறுபாடு உண்டு. சமமான தரமும், ஒத்த அறிவுமுடைய அவர்கள் ஒருத்திக்கு ஒருத்தி தோழி தானே! இங்கு 'ஒலிமென் கூந்தல் என் தலைவி மேனி' என அழைத்திருப்பாளானால், தமிழிலக்கியம் தனிச் சிறப்புடையதாகியிராது.

தோழி நாவன்மை மிக்கவள். இக்குறிஞ்சிப் பாட்டில் அவள் கூற்று, அன்றாடப் பேச்சு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. தோழி பேசும்போது இடையிடையே செவிலித்தாய் மறித்துக் கேட்க, அதற்குத் தோழி தக்கவாறு விடை கூறுவதாக இந்நூல் முழு நாடக முறையில் அமையவில்லை. ஆயினும், செவிலி இடையே கேள்விகள் கேட்டால் அவற்றுக்குத் தோழி எம்முறையில் விடை கூறுவாளோ, அவ்விடைகள் அனைத்தையும் தொகுத்துக் கூறும் முறையில் பாட்டின் பொருட்போக்கு உளது.

"முடிவுசெய்த திருமணம் இது வென்று தாய்க்கு அறிவித்தால் பழி உண்டாகுமா?", என்று தலைவிகேட்பதாகத் தோழி கூறுகிறாள். இந்தப் பிறப்பில் அவனுக்குத் தன்னைக் கொடுக்காவிட்டால், சாகும் வரை-வேறு எவரையும் மணம் புரியாது பொறுத்திருப்பாளாம். அவ்வாறு பொறுத்திருந்தால் அடுத்த பிறப்பிலாவது அவனையே அடையப் பெறுவாளாம். 'இப்படியெல்லாம் சொல்லித் தலைவி கண் கலங்கித் தேம்பி அழுகின்றாள். அம்மா!' என்று தோழி அறிவித்துத் தான் நல்லவளாகிக் கொள்கிறாள்.

மேலும், 'இரண்டு வேந்தரைச் சமாதானம் செய்து வைக்க முயலும் சான்றோர் அஞ்சுவது போல நானும் உங்கள் இருவருக்குமிடையே அஞ்சுகிறேன். அவள், தான் விரும்பியவனையே அடையவேண்டும் என்றும், இதைப் பெற்றோருக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றும் துணிந்த பிறகு நான் என்ன செய்வது? பெரியோர்கள் பல பொருத்தங்களைப் பார்த்து இத்தகைய மணவினைகளை முடிவு செய்வர். இவளோ ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள நேர்ந்து விட்டது. இனி, கற்பை இழந்து காதலித்தவனை மறந்து இவள் வாழமாட்டாள். எனவே இவள் உயிருக்குப் பாதுகாப்பான செயல் இம் மண வினைக்கு இசைவதுதான் என்று சிந்தித்து நானும் இதற்கு உடன்பட்டேன். அம்மா! இது திட்டமிட்டுச் செய்த முயற்சி அன்று; எதிர்பாராமல் தானே நடந்து விட்ட நிகழ்ச்சி. இதனை நிகழ்ந்தபடி நீ அறியச் சொல்லுவேன்; கேட்டு, எங்கள் மீது கோபம் கொள்ளாதிருப்பாயாக!' என்று தோழி கூறுகிறாள்.

இதுவரை உள்ள இப்பகுதி முன்னுரை போன்றது. முதல் 34 வரிகளை உடையது.

'எய்யா மையலை நீயும் வருந்துதி' (8)

நோயின் உண்மைக் காரணத்தை அறிய மாட்டாத மனக்குழப்பத்தினால் நீயும் வருந்துகிறாய்.

மான் அமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும் (25-26)

மான் போலும் விரும்பத் தக்க பார்வையில், கண்ணீர் கலங்கி நிற்கச் செயலற்றுத் தீராத துன்பத்தால் இவளும் தேம்பி அழுகின்றாள்.

'இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலென் (29)

ஒரு புறம் உன் சீற்றம், மறுபுறம் அவள் ஆற்றாமை என இரண்டுக்கு மிடையே நானும் அஞ்சி வருந்தலானேன்.

இவ்வாறு 'நீயும் வருந்துகிறுய் இவளும் அழுகிறுள், எனக்கும் இது துன்பமாக இருக்கிறது' என வரும் இத் தோற்றுவாய் அமைப்பு பேசும் நடையில் இருக்கிறது. எந் நிலையிலும் எதிர் எதிரான் இருசாராரிடையே சமாதானம் செய்து வைக்க முயலுவோர், பேசத் தொடங்கும் முறை இதுதான் என உணரவேண்டும்.

'அன்னுய், வாழி வேண்டு! அன்னை!!' (1)

தாயே, வாழ்வாயாக! நான் சொல்லப் போவதை விரும்பிக் கேட்பாயாக அம்மா! என்று மிக எளிமையுடன் தொடங்குகிறுள் தோழி. சேக்ஷ்பியரது நாடகங்களின் தொடக்கக் காட்சியை, தொடக்கப் பேச்சை, தொடக்க வரிகளைப் பலவாறு திறனுய்ந்து மகிழும் பெருமக்கள் இவ் வரியையும் அவற்றுடன் ஒப்பிட்டுப் படித்து இன்புற வேண்டும். தோழி இருமுறை 'அம்மா, அம்மா!' என்று அழைப்பது ஏன்? சொல்லப் போகும் செய்தி அவ்வளவு பெரியது, அச்சத்திற்குரியது, தாய்க்குக் கேட்டதும் சினமூட்டக் கூடியது, பெருங் குற்றமெனக் கருதக் கூடியது என்பதை இத் தொடக்கமே நம் நெஞ்சில் நிழலாட விடுகிறது.

'தாயே! நீயும் வருந்துகிறுயே! இவளது நோயைத் தீர்க்க வெறியாட்டு எடுத்தும் கடவுளை வணங்கியும் வேறு பலரையும் வினுவியும் என்னென்னவோ துன்பப் படுகிறுயே' - என்று அடுத்துத் தோழி தாய்மீது இரக்கப் பட்டவள் போலக் கரைந்து உருகுகிறுள்! எதற்காக? தன் மீது பின்னர் உண்மையைக் கேட்டதும் தாய் காய்ந்து விழக் கூடாதே என்றுதான் இவ்வாறு கரைந்து உருகி, முதலிலேயே தாயின் இறக்கத்தைத் தேவைக்கு அதிகமாகச் சேமித்து வைத்துக் கொள்கிறுள்! தோழி நாவன்மை மிக்கவள் — செப்பல்வன்மை உடையவள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அடுத்ததாக, தலைவி ஒருவனைக் காதலித்துள்ளாள் என்றும் அவனையே அவள் மணந்தால்தான் அவளது

கற்பும் உயிரும் காக்கப்படுமென்றும் தோழி எடுத்த எடுப்பிலேயே உண்மையை அறிவித்து விடுகிருள்.

தலைவியின் காதலை, அவளது சம்மதத்துடன் தோழி செவிலித்தாய்க்கு அறிவிப்பதும், அதன் மூலம் திருமணம் விரைவில் நிகழத் தூண்டுவதும்தான் 'அறத்தொடு நிலை' என்னும் துறை என்ருல், அத்துறைக்குரிய பொருள் இம் முன்னுரையோடு முற்றுப்பெற்று விடுகிறது. இனி இப் பின்னுரையெல்லாம் எதற்கு என்ற பெருங்கேள்வி எழுகின்றது?

ஒருத்தி 'நான் ஒருவனைக் காதலிக்க நேர்ந்தது' என்று கூறினுல் போதுமா? அவ்வளவு எளிதாக விட்டுவிட்டால் நாள்தோறும் இத்தொடரைக் கேட்கும்படியான வாய்ப்புப் பெற்ருேருக்குக் கிடைத்துவிடும் அல்லவா? பிறகு கற்புநிலை பற்றிப் பேசுதல் எவ்வாறு இயலும்?

''ஏன் ஓர் ஆண்மகனைச் சந்தித்தாய்? அவனை எவ்வாறு கண்டு, காதல் கொண்டாய்? அவன் நல்லவன் தான் என்பது உனக்கு எப்படித் தெரியும்? நாளைக்கு உன்னை அவன் கைவிட்டு விட்டால் நீ என்ன செய்வாய்? அவனை யாரென்று தெரியுமா உனக்கு? அவனும் உன்னை மனதார விரும்புகிருனு? இப்படிப் பெற்றவர்களுக்குத் தெரியாமல் ஒருவனைக் காதலித்து விட்டதாகக் கூறும் உன்னை ஒழுக்கமுடையவளென்று எப்படி நம்புவது? பெற்றவர்களாகிய எங்களது புகழுக்குக் கேடு விளைவித்து விடுவாய் போலிருக்கிறதே?'' என்றெல்லாம் அக்கறையுள்ள தாய் கேட்கமாட்டாளா? அதற்கெல்லாம் சரியான விடை கூறி இத்திருமணம் பொருத்தமுடையது, இன்றியமையாதது என உணர்த்தினுல் தானே பெற்றவர்கள் அதற்குச் சம்மதிப்பர். எனவேதான், தோழி இனிவரும் நீண்ட பகுதியில், மேற்கண்ட கேள்விகட்கு எல்லாம் விடைதரும் முறையில் முன்னொருநாள் தலைவனைக் கண்டு தலைவி காதல் கொண்ட கதையைத் தான் அறிந்த முறைப்படி கூறுகிருள்.

**இடைப் பகுதி**

35 ஆம் அடி முதல் 237 ஆம் அடி வரையுள்ள 203 அடிகளில் ஒரு நாள் நிகழ்ச்சி மட்டும் விவரிக்கப்படுகின்றது. இறுதியில் 24 அடிகள் முடிவுரை போல உள்ளன. இவ்வாறு 261 அடிகள் கொண்ட இந்நெடும் பாட்டில் முன்னுள்ள 34 அடிகளும் பின்னுள்ள 24 அடிகளும் ஆக 58 அடிகள் நீங்க, இடைநின்ற 203 அடிகளில் வரும் ஒரு நாள் நிகழ்ச்சி யாது? தலைவன் தலைவியை முதல் முதலில் எதிர்பாராமல் ஊழால் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு நெஞ்சங் கலந்து மகிழ்ந்த 'இயற்கைப்புணர்ச்சி' பற்றிய செய்திதான் இவ்வளவு விரிவாகக் காரண காரியத் தொடர்போடு விரித்து உரைக்கப்படுகிறது.

முன்னுரைப் பகுதியில்.

"நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம் அறிவுறுலின் பழியும் உண்டோ?" (20.22)

என்று - 'பெரிய தேரையுடைய என் தந்தையின் அரிய காவலைக் கடந்து நானும் தலைவனுமாக முடிவு செய்த மணவினை இதுவென்று நாம் தாய்க்கு அறிவுறுத்தினால் அதனால் நமக்குப் பழி உண்டாகுமோ?' என்று தலைவி கேட்டதாக வருகின்றது. இதைக் கேட்டதும் தாய்க்கு "மகள் என்ன செய்தாளோ? குடிப் பிறப்புக்கு மாசு வரு மாறு நடந்து கொண்டாளோ? யாரை மணமகனாக ஏற்றுக், கொண்டாளோ? அவளது வாழ்வு மலருமோ சிதையுமோ? அந்தோ, எனக்கும் தெரியாமல் இவள் என்ன தவறு செய்தனளோ?" என்றெல்லாம் பெரியதொரு சிக்கல் மனத்தில் எழும். நடந்ததை அறியும் பேரார்வம், சினத்தை அடக்கிக் கொண்டு முன் தோன்றும். நாடக முறைப்படி முதலில் ஒரு சிக்கலை உண்டாக்கி வைப்பதை ஐயப்பொருள் அல்லது மறைபொருள் (Suspense) என்பர்; அச்சிக்கலை முறுக்கேற்றுவதை உச்சநிலை (Climax) என்பர்.

தலைவியும் தலைவனைச் சந்திக்கவேண்டும் என்று எண்ணவில்லை; அவனும் அவ்வாறு எண்ணவில்லை. இருவரும் எதிர்பாராமல் தெய்வச் செயலால் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டனர் என்பதை இப்பகுதியில் தோழி அழகுற விளக்குகிறாள்.

தலைவி உயிருக்கும் தன் உயிருக்கும் எமனாக ஒரு மதங் கொண்ட யானை வந்தது என்றும் அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்தோம் என்றும் தோழி நடந்ததைக் காண்பதுபோல விவரிக்கும்போது 'ஐயோ இவர்கள் நிலை யாதாகுமோ' என்ற அச்சம் ஏற்படுகிறது, கதை உச்சநிலையை அடைகிறது.

''கார்ப்பெயல் உருமின் பிளிறி, சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை இருநிலம் சேர்த்தி
சினம் திகழ் கடாஅம் செருக்கி மரம்கொல்பு
மையல் வேழம் மடங்கலின் எதிர்தர

உயர்வுஇடம் அறியேம் ஆகி ஒய்யென,
திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்து அவற்பொருந்தி
சூர்உறு மஞ்ஞையின் நடுங்க'— (162-169)

என்னும் பகுதி தலைவி உயிருக்கு ஒரு பெரிய ஆபத்தைக் கொண்டு வந்து நிறுத்துகிறது.

ஆனால் இந்த ஆபத்து அடுத்த காட்சியில் விடுவிக்கப்படுகிறது. வீரம் மிக்க தலைவன் எய்த அம்பு யானை முகத்திலே பட்டு, குருதி பெருக்கெடுக்கவே, ஆற்றாது அது புறங் கொடுத்து ஓடிவிட்டது. தலைவி காப்பாற்றப் பட்டாள். இவ்வாறு தலைவனும் தலைவியும் யானை காரணமாகச் சந்தித்துக் காதல்கொண்டனர். எனவே தான் இதனைக் 'களிறு தரு புணர்ச்சி' (212) என்று குறிப்பிடுகிறாள். இக் குறிஞ்சி நிலக்காட்சியைத்தான், பிற்காலப் புராணங்களில் முருகன் வள்ளியை மணம்புணர யானை

முகக் கடவுளாகிய அண்ணன் வந்து உதவினர் என்று கற்பனை செய்து எழுதினர்கள்.

'ஏனடி' தினைப் புனத்திற்குச் சென்றீர்கள்?' என்று செவிலித்தாய் கேட்கமுடியாது.

அப்படிக் கேட்பாள் என்றுதான் தோழி தொடங்கும் போதே,

''நல்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி
எல்பட வருதியர் என நீ விடுத்தலின்' (38-39)

'நன்கு விளைந்த சிறிய தினையிலே வந்துவிழும்பறவை களை விரட்டிப் பொழுதுசாய வாருங்கள்' என நீ தான் அன்று அனுப்பினய்! என்று கூறி விடுகிருள்.

தினைப்புனம் காப்பவர்கள் அருவியாடிச் சுனையாடி விளையாடுவதா எனவும் தாய் கேட்கலாமல்லவா? அதற்குத் தோழி விடையிறுப்பாள் போலக் கூறும் முறை நுட்பமானது

''கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந் தோம். ஓன்றல்ல தழல், தட்டை, குளிர் என்ற மூன்று கருவிகளையும் வைத்து முறையாக அவற்றை இயக்கிப் பறவைகளை விரட்டிக் கொண்டிருந்தோம், நண்பகல் வந்தது. ஓரே வெப்பமாக இருந்தது. ஞாயிற்றின் கதிர் கள் வலிமையோடு தாக்குகின்ற நேரம்.''

''திடீரென்று வானம் இருண்டது. பறவைகள் கூடு கட்கு ஓடின. கரிய மேகம் காற்றுலே தள்ளப்பட்டு விரைந்து திரண்டது. இடி முழங்க மின்னல் கண்ணைப் பறிக்கப் பெருமழை பொழிந்தது. மழை நின்றதும், அருவி நீர் பொங்கிவழிந்த காட்சியைக் கண்டோம். நனைந்து விட்ட நாங்கள் தீராத விருப்பத்துடன் அதில் குளித்தோம்'' என்று தோழி கூறுகிருள்.

**'விசும்பு ஆடு பறவை வீழ்பதிப் படர' (46)**

மேகம் திரண்டது என்று தோழி, மழை பொழிந்த காட்சியைச் சொல்ல வரும்போது குறிப்பிடுகிருள். இதிலிருந்து பறவைகளை ஓட்டும் வேலை குறைந்தது, அவைகள் தத்தம் கூடுகளுக்குப் போய் விட்டன என்பதால்தான் நாங்கள் நீராடிவரப் போனோம் என்ற காரணமும் உணர்த்தப்படுகிறது.

பின்னர்த் தாங்கள் மகிழ்ச்சிமிக்க மனநிலையுடன் தழை உடுத்தி பூமாலை புனைந்து, அசோகமர நிழலில் இருந்ததை உவகைச் சுவையுடன் கூறுகிருள். இங்கு 99 வகை மலர்களை அடுக்கிக் காட்டுகிற காட்சி ஒன்றே, தலைவியின் உள்ளம் இன்பக் களிப்பிலே பூரித்து இருந்த சூழ்நிலையை விவரிக்கிறது. இச்சூழலிடையே காதல் உணர்வு அரும்புவது இயற்கைதானே?

'இயற்கைப் புணர்ச்சி' பற்றிய செய்தியும் முப்பிரிவினதாகும். இதுவரை கூறிய முதற் பகுதி தலைவி தினைப்புனம் காத்து, அருவியாடி, மகிழ்ச்சியுடன் இருந்ததை விளக்கியது. இனிவரும் அடுத்த பகுதியில் தலைவனின் தோற்றப் பொலிவும், பேராபத்திலிருந்து அவன் தலைவியைக் காப்பாற்றியமையும் கூறப்படுகின்றன. மூன்றும் பகுதி தலைவி தலைவனுடன் உளமொன்றிக் காதல் வயப் பட்ட செய்தியை, திருமணம் புரிவதாய் இருவரும் உறுதி பூண்ட நிலைமையை விவரிக்கிறது.

தலைவன் தங்கள் அருகே வந்தபோது அவனுடைய பெருமிதத் தோற்றத்தை தாங்கள் வியப்போடு பார்த்தமையைத் தோழி சுவை பொருந்த வருணிக்கிருள்.

தலைவனின் முடி ஒப்பனை ஒன்றே அவன் செல்வ வளம் மிக்க உயர் குடியினன் என உணர்த்துகிறது. மேலும் அணிகலன் பூண்ட மார்பு. அழகிய தோள், தடக்கை, வில்லை ஏந்தி அம்பை ஆராயும் தோற்றம்,

கச்சையழகு, காலிலே கிடந்து அசையும் பொற்கழல் – இவ்வாறு முடி முதல் அடி வரை புனைந்து கூறுகிருள். தலைவிக்கு ஏற்ற அழகுடையவன், சிறப்புடையவன் தலைவன் என்பதை இது குறிப்பாக உணர்த்துகிறது.

'அண்ணல் நெடுங்கோட்டு இழி தரும் அருவி' (54) என்ற இடத்து, 'தலைவனின் உயர்ந்த மலையுச்சியிலிருந்து பாயும் அருவி என்பதால் தலைவனைத் தங்கட்குத் தெரியும், அவனும் இந்த மலைநாட்டிற்கு உரியவனே என்பதைக் குறிப்பாகத் தோழி புலப்படுத்தி விடுகிருள்.

அடுத்து வேட்டை நாய்கள் வேகமாகப் பாய்ந்து வந்ததையும் தாங்கள் அஞ்சி ஓடியதையும் கூறுகிருள். 'பிறகு வந்த தலைவன், எங்களுக்கு இனிய மொழிகளால் ஆறுதல் கூறி, எங்கள் கூந்தல், வளையல், சாயல், கண் போன்றவற்றைப் பாராட்டி எங்களை அழைத்து, "என்னிடமிருந்து விலங்கு ஒன்று தப்பி வந்துவிட்டது, அதைக் கண்டீர்களா?'' என்று கேட்டான். நாங்கள் பேசவில்லை. உடனே 'தப்பி ஓடிய விலங்கைக் காட்டித் தராவிட்டாலும் என்னிடம் பேசுவது கூடப் பிழையா?'' என்று கேட்டு, நாய்களின் கூச்சலை அடக்கி விட்டு, எங்கள் சொல்லை எதிர்பார்த்து நின்முன்,'' என்று தோழி கூறுகிருள்.

தலைவியைத் தலைவன் விரும்பினுன் என்பதையும், தாங்கள் புதியவனிடம் அத்துமீறிப் பழகவில்லை என்பதையும் இதன் மூலம் தோழி தெளிவுபடுத்திவிட்டாள்.

'அம்மா, அச்சமயம் பேரோசை ஒன்று கேட்டது. மதங்கொண்ட யானை ஒன்று அப்பக்கம் ஓடிவந்தது. யாரோ, ஒரு கானவன் (தினைப்புனம் காப்பவன்) கள் குடித்து மயங்கியிருந்தபோது அப்புனத்தை அது அழித்து விட்டதாம். இதற்காக அந்தப் பாவிகள் — கானவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அம்புகளை ஏவி ஆரவாரம் செய்து சீழ்க்கை (சீட்டி) அடித்துப் பேரோசையை எழுப்பி யானையை விரட்டினுர்களாம். அது

மரங்களை முறித்துக் கொண்டு, துதிக்கையைத் தரையிலே மோதிக்கொண்டு எங்களை நோக்கி வந்தது,' என்றுதோழி கூறுகிறாள்.

இதைக் கேட்ட தாயின் மனநிலை எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அதே சமயத்தில் தோழி எவ்வளவு நுட்பமாகப் பேசுகிறாள் என்பதையும் உற்று நோக்க வேண்டும். முதலில் தலைவன் கெடுதி வினவிக் கொண்டு (கெடுதிவினவுதல் - தப்பிப் போன விலங்கு முதலியவற்றைக் கண்டீர்களா? இப் பக்கம் போயிற்றா? எனக் கேட்டுக் கொண்டு வருதல்) வந்ததைக் கூறி னாள். இப்போது திடீரென்று யானை பாய்ந்து வருவதைக் கூறுகிறாள். இதன் உட்கருத்து யாது?

தலைவன் மதங்கொண்ட யானை ஒன்றை வேட்டை யாட, நாய்களுடன் புறப்பட்டு விரட்டியிருக்கிறான், அது தப்பி ஓடிப்பக்கத்துத் தினைப்புனத்திலே புகுந்துவிட்டது. தலைவன் இடம் தெரியாமல் தலைவி இருக்குமிடத்திற்கு ஓடி வந்து அவள் அழகிலே ஈடுபட்டு நின்றான். இதற் கிடையே, பக்கத்தில் ஒரு தினைப்புனத்தை அந்த யானை அழித்து விடவே, கானவர்கள் அதை விரட்டியிருக்கிறார் கள். அது தலைவன் தலைவியுடன் நிற்குமிடம் நோக்கிப் பாய்ந்து வந்தது.

இவற்றிலிருந்து தலைவியும் தலைவனும் ஊழால்—இயற்கையால் சந்திக்க நேர்ந்தது, என இந்த 'இயற்கைப் புணர்ச்சி' (தெய்வத்தால் கூடியமை) மெய்ப்பிக்கப்படு கிறது. ஒருவர் அழகில் ஒருவர் ஈடுபட்டமையும் அறி கிறோம்.

முதலில் நாய்களால் வந்த அச்சத்தைக் கூறினார்; பிறகு யானையால் வந்தபெரிய அச்சத்தைக் கூறினார். உள நூன் முறைப்படி நோக்கினால் முதலில் பெரிய அச்சத்தைக் கூறி விட்டால், மற்றது அச்சமே ஆகாது போய்விடும். மென்மை மிக்க தலைவியின் மன நிலையும் முதலில் சிறிய அச்சத்தால் பாதிக்கப்பட்டு, தலைவனது ஆறுதல் மொழி களால் தேறுதல் அடைந்தது. பின்னர் பேரச்சம் வந்த

போது, அந்தத் தலைவனே அடைக்கலம் என நம்பி வைத்தது. நாயைக்கண்டு வேறு இடம் நோக்கி ஓடினார் கள். யானை பாய்ந்து வரக் கண்டவுடனே, தலைவனிடம் ஓடினார்கள். முன்னே கூறிய அவனது ஆறுதல் உரை களும் அவனுடைய தோற்றமுமே இவ்விளம் பெண்களை அவன்பால் ஓடச்செய்தன.

ஆற்று வெள்ளம் பாய்கின்ற இடிகரையிலே நிற் கின்ற வாழைமரம் போல அவர்கள் நடுங்கினார்களாம். தலைவி தலைவன்மீது சாய்ந்து விட்டாள். தோழி தலைவி கையைப்பற்றி அவள்மீது சாய்ந்தாள். வேலனுக்கு வெறி யாட்டு எடுக்கும்போது, கடப்ப மரத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு மாலைகளைப் போடுவது போலத் தலைவன் மீது தலைவியும் தலைவி மீது தோழியும் சாய்ந்து கிடந்தனராம்!

சிறிது நேரம் சென்றது. அச்சம் சிறிது அகன்றது. அயலானைத் தொட்டுவிட்டோமே என்ற அச்சமும் நாண மும் வரவே தோழி விலகி நின்றாள்; தலைவி பிரிய முயன் றாள். தலைவனோ விடவில்லை. ‘உன் அழகிய நலத்தை நுகர்வேன்’ என மார்புற அணைத்துக்கொண்டான். தலைவி அஞ்சி அகன்று நின்றாள். அவள் மனநிலையைத் தலைவன் உய்த்து உணர்ந்து கொண்டான். உன்னையே மணப்பேன், இல்லறம் நடத்துவேன்’ எனக் கூறி அக் கால வழக்கப்படி அருவி நீரைக் குடித்துச் சூளுறவு (சபதம்) செய்து தலைவியைத் தேற்றினான்.

பகல் முழுதும் நெடுநேரம் கூடியிருந்து, மாலைப் பொழுது வரவே, ‘‘சிறிது காலம் கலங்காதிரு: நாடு அறியும் நல்ல மணத்தைப் பெறுவோம்!’’ என்று தேற்றி ஊரருகே கொண்டு வந்து விட்டுச் சென்றான்.

இவ்வளவையும் தோழி கூறிய காரணம், அவன் கை விடமாட்டான்; கடமை தவறாதவன்; அறநெறியிலே வாழ்பவன் என்பவற்றை அறிவிப்பதற்காகும்.

முடிவுப் பகுதி

இதில் இரவு தோறும் தலைவன் வந்து, தலைவியைச் சந்திக்கப் பெறாமல் திரும்பிப் போவது குறிப்பிடப் படுகிறது. இளமை தீராத, வளமை குறையாத அவன் எத்தனை முறை இவ்வாறு திரும்பிச் சென்றாலும் தலைவியை வெறுக்கவில்லையாம். 'அன்றை அன்ன விருப்போடு'— முதல் நாள் போன்ற விருப்பத்தோடு இருக்கிறானாம்.

இவ்வாறு இரவ தோறும் தலைவன் தன்னைத் தேடி வருவதற்காகவும், அப்போது வழியில் விலங்குகள், பேய்கள், நீர் நிலைகளிலுள்ள முதலைகள், மற்றும் பாம்பு கள் போன்ற வழிப்பகைகளால் வரக்கூடிய ஆபத்துக் காகவும் தலைவி வருந்தி வருந்தி அழுகிறாள். இதுவே அவளது மெலிவுக்கும் நலிவுக்கும் காரணம் என முடிக் கிறாள் தோழி.

இம் முடிவு சிறப்புடையதாகும். இதற்குப்பின் 'தலை வியை அத்தலைவனுக்கே கொடுத்தார்கள்-சுபம்' என்று முடிந்திருந்தால் அது நம் மனத்தில் தங்காது. இந்தத் தலைவனையே இவள் அடையவேண்டுமென ஆவலோடு நாம் எல்லாம் உள்ளூற வாழ்த்தும் வகையிலே இந்த முடிவு அமைந்துள்ளது.

இந்த அவல முடிவு தாயின் உள்ளத்தே அருளைப் பெருக்கெடுத்து ஓடச் செய்யும். இவ்வாறு கூறிவிட்டால் தாய் மனமுருகி ஒப்பமாட்டாள். 'அம்மா. அவனுக்கே இவளை மணமுடித்து விடு' எனத் தோழி வாய்விட்டுக் கூறவில்லை. அப்படித் தோழி கூறியிருந்தால் உளநூன் முறைப்படி தாய்க்கு எதிர் உணர்வுதான் அரும்பும். 'யாரோ ஒரு நாள் காப்பாற்றியதற்காக அவனுக்கே கொடுத்துவிடுவதா' என்று தருக்கம் பேசச் சொல்லும். நலிவு போக்கும் மருந்து இத்திருமணமே என்று தாய் தானே முடிவு கட்டும் வண்ணம் இப்பாட்டு முடிவடைந் திருப்பது உளநூலார் பாராட்டத்தக்க முடிவாகும் அன்றோ?

இந்நூலின் அமைப்பை நோக்குவார்க்கு, முன் எடுத்துக் காட்டியது போல, நாடக அமைப்பு நன்கு பொருந்தியுள்ளமை தெளிவாகும். முற்பகுதி தொடக்கமாகும் இடைப்பகுதியில் முதலில் வளர்ச்சி நிலையும் அடுத்து முதிர்ச்சி நிலையும் பிறகு விடுபடும் நிலையும் உள்ளன. இறுதிப்பகுதி ஆவலைக் கிளப்பும் முடிவாக உளது எனவே, இதனை அப்படியே நல்ல நாடகமாக மாற்றி அமைக்கலாம் என்பதையும் அப்படி மாற்றியமைத்தால் இது புனைவு இல்லாத 'வள்ளி திருமணமாக' முடியும் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.

இக் குறிஞ்சிப் பாட்டின் அமைப்பையும், அழகையும் கருத்தையும் நான்கே வரிகளில் தொகுத்துத் தருகிறது, இறுதியிலே உள்ள முதல் தனிப்பாடல் :

"நின்குற்றம் இல்லை: நிரைதொடியும் பண்புடையள் ;
என் குற்றம் யானும் உணர்கலேன் — பொன்குற்று
அருவி கொழிக்கும் அணிமலை நாடன்
தெரியுங்கால் தீயது இலன்"

"தாயே தினைப்புனம் காக்க அனுப்பிய நீயும் குற்றமுடையவள் அல்லை. வளையல்களை அணிந்த தலைவி குற்றம் செய்யவில்லை என்பது மட்டுமன்று; காதலித்தவனையே உறுதியுடன் கைப்பிடித்த நற்பண்பும் உடையவள் ஆவாள்! என் குற்றம் ஏதும் உளதா என்று எனக்குத் தெரியவில்லை. (தானும் குற்றம் செய்யவில்லை என்று தோழி கூறாமல், இவ்வாறுசொல்வது அவள் பெருமையை) குற்றமற்ற தன்மையைக் காட்டுகிறது) பொன்னைக் கொழிக்கும் அருவி பாயும் அழகிய மலைநாட்டிற்குரிய (செல்வ வளம் மிக்க) தலைவன் தான் குற்றமுடையவனோ என ஆராய்ந்தால் அவனும் தீமை அற்றவனாக உள்ளான்" என்று தோழி கூற்றாகவே இத்தனிப் பாடலும் உள்ளது. பிறகு யாருடைய குற்றம்தான் இது?

ஒருவருமே குற்றம் செய்யவில்லை! பருவத்தின் செயலாகும் இயற்கை விளைவு இது, அவ்வளவு தான்;

# 5. சுவைப்பகுதிகள்

இலக்கியத்திற்குச் சுவை இன்றியமையாததா? நல்ல கேள்வி இது! கவிஞன், தான் சுவைத்து, மகிழ்ந்து, திளைத்த அனுபவத்தைத் தானே பிறருக்குப் படைத்துத் தருகிறான். அல்லல் மிக்க உலகத்தில் இலக்கியத்தைப் படிக்குந்தோறும் சுவை அனுபவம் ஏற்படுகின்ற காரணத்தினால்தான் அது வாழ்கிறது. சுவையிற் பிறந்து, சுவை தர வாழ்ந்து, சுவை வடிவாக இலங்குவதே இலக்கியமாம். சுவையற்ற இலக்கியம் எத்துணைப் பெரியதாக இருக்கட்டும்; அது உப்பில்லாப் பண்டத்திற்குச் சமமாகும்.

சுவை பயப்பன எவை? கருத்து நலத்தாலும், கற்பனை நயத்தாலும் சுவை பயக்கலாம்; சொல்லாட்சிச் சிறப்பாலும் நடையழகாலும் சுவை பயக்கலாம்; அணி பல சேர்த்தும் கலைத்திறன் கூட்டியும் சுவை பயக்கலாம். இக்குறிஞ்சிப்பாட்டு, எல்லா வகையாலும் சுவையுடையதாக இருக்கிறது.

மலைமீது மழை பொழியும் காட்சி மகிழ்ச்சி தருகிறது ஞாயிறு. தனது வலிமை மிக்க கதிர்களால் தாக்குகின்ற வெப்பம் மிக்க நேரம். திடீரென மேகம் சூழ்கிறது. வானத்தே வட்டமிட்டுத் திரிந்த பறவைகள் தங்கள் விருப்பத்திற்கு உகந்த கூடுகளுக்குப் பறந்தோடின. நீர் நிறைந்த கரிய கடலும் குறையும்படி, இந்த மேகம் நீரை முகந்து கொண்டு வந்து விட்டது போலக் காணப்படுகிறது. அவ்வளவு கருமேகங்கள் ஒன்று திரள்கின்றன வானத்தே. காற்று, பலமாக அடிக்கிறது. இதனால் முரசு அதிர்வது போல, தொடர்ந்து இடியோசை கேட்கிறது. மேலே அடுக்கடுக்காகச் செல்லும் மேகங்கள் ஒன்று கலக்கின்றன.

இனிய இசையுடைய முரசினையும் விளங்கும் அணி களையும் உடைய முருகன், பகைவர்க்கு எதிரே எடுத்த விளங்குகிற இலையமைப்பையுடைய வேல் எவ்விதம் ஒளி வீசுகிறது? அதைப்போல, இந்த மேக மண்டல மாகிய பகைக் கூட்டத்தைப் பிளந்து, ஊடறுத்துக் கொண்டு மின்னல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு மலை மீது மழை பொழிகின்றது!

மழை பொழியும் காட்சியை நம் மனக் கண் முன் நிறுத்தும் வரிகள் இதோ,

'உரவுக் கதிர் தெறூஉம் உருப்பு அமர் அமயத்து
விசும்பு ஆடு பறவை வீழ்பதிப் படர,
நிறைஇரும் பெளவம் குறைபட முகந்துகொண்டு
அகல்இரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசு அதிர்ந்தன்ன இன்குரல் ஏற்றொடு
நிரைசெலல் நிவப்பின் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசின் சுடர்ப்பூண் சேஎய்
ஒன்னார்க்கு ஏந்திய இலங்குஇலை எஃகின்
மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென (45-53)

வேட்டை நாய்கள் பாய்ந்து வரும் காட்சியும் இங்ஙனம் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. 'பகைவர் நாட்டைப் பாழ்படுத்தி அழிக்கின்ற, நெருங் குதற்கரிய வலிமையினை யுடையது பகை. அப்பகையை யும் புறமுதுகு காட்டி ஓடச் செய்த பல வேற்படையை யுடைய இளைஞர்கள், துரத்திக் கொண்டு வருவது போலச் சில வேட்டை நாய்கள் ஓடி வந்தன. அவை வலிமை மிக்க சீற்றம் உடையன; நெருங்குந்தோறும் நெருங்குந்தோறும் குரைக்கும் இயல்புடையன; மூங்கில் முளை போன்ற ஒளிமிக்க பற்களையுடையன; கூரிய நகத்தையுடையன இத்தகைய வேட்டை நாய்கள், எங்களை வளைத்துக் கொண்டு இமையாத கண்களை உடையனவாய் நெருங்கிப் பாய்ந்து வந்தன. இதைக் கண்டு நாங்கள் நடுங்கிக் கொண்டே எழுந்து, அடி

தளர்ந்து, துன்பம் மிக்க மனத்துடன் மனம் மயங்கி வேற்றிடம் நோக்கி ஓடினேம். இவ்வாறு தோழி சொல்லி வரும் போது நம் மனத்தில் அப்படியே அச்சச் சுவை எழுகின்றது அல்லவா?

'முனைபாழ் படுக்கும் துன்னரும் துப்பின்
பகைபுறம் கண்ட பல்வேல் இளைஞரின்
உரவுச் சினம் செருக்கி, துன்னுதொறும் வெகுளும்
முளைவாள் எயிற்ற வள் உகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவனம் எழுந்து நல்லடி தளர்ந்து, யாம்
இடும்பைகூர் மனத்தேம் மருண்டுபுலம் படர'
(128-134)

என்பது அப்பகுதியாகும்.

இதுபோலவே அச்சத்தை விளைவிக்கும் மற்றொரு சுவையான பகுதி மதங் கொண்ட யானை பாய்ந்து வரும் காட்சியாகும். அதில் கானவர்கள் யானையை விரட்டுகிற முறையும், யானை பாய்ந்து வரும் பயங்கரக் காட்சியும், தலைவியும் தோழியும் இதைக் கண்டு நடுங்குகிற தன்மையும் தெளிவுறக் கூறப் பெறுகின்றன. இதோ கான்வர்கள் ஒன்று கூடி,

'இரும்புனம் நிழத்தலின் சிறுமை நோனது
அரவுஉறழ் அம்சிலை கொளீஇ நோய்மிக்கு
உரவுச்சின முன்பால் உடல்சினம் செருக்கி
கணைவிடுபு, புடையூ, கானம் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத்து எதிர (157-161)

என, யானையைத் துரத்துகிற காட்சியைக் காண்கிறோம். மதங்கொண்ட யானை பெரிய தினைப்புனத்தை அழித்து விட்டது அதைக் கண்ட கானவர்களுக்கும், தினைப்புனம் அழிந்துவிட்ட சிறுமையைப் பொறுக்க முடியவில்லை. பாம்பு போல வளைந்ததும் கொடியதுமான வில்லை நாண் ஏற்றினார்கள். வருத்தம் மிக்கு, உள்ளத்தில் தோன்றிய சினம் மிக்க வலிமையினால், உடலின்கண் அச்சீற்றத்

தைப் பெருக்கிக் கொண்டு அம்புகளை ஏவினர்கள். தட்டை முதலியவற்றைப் புடைத்து ஒலித்தார்கள். காடு முழுதும் 'கல்' லென்னும் ஓசை எழ வாயை மடித்துவிடும் சீழ்க்கை ஒலியை எழுப்பிப் பேரோசையை உண்டாக்கி யானையை எதிர்த்து விரட்டினர்கள் - என வரும் பகுதி. யானையை விரட்ட எப்படிப் பேரோசை எழுப்புவது என்பதைக் கூட நமக்கு உணர்த்துகிறது. உள்ளத்திலே சினம் பொங்கி எழும்போது உண்டாகிற வலிமை, உடம்பில் இயல்பாகவுள்ள வலிமையை மிகுதிப் படுத்துகிறது அல்லவா? பொருள்களில் மறைந்து கிடக்கும் ஆற்றலை நிலை ஆற்றல் என்பர். அதே ஆற்றல் இயங்கு நிலை பெறும்போது பன் மடங்காகும் என்பார்கள். சிறு பாறை நிற்கும்போது அதிலே மறைந்திருக்கும் பேராற்றல் அதை உருட்டி விடும்போது பன்மடங்காகப் பெருகி, எதிரே உள்ளவற்றை அழித்து விடுமல்லவா? கோபமும் 'மனிதனின் இயங்கு நிலை ஆற்றல்தான் என்பதை, உரவுச் சின முன்பால் உடல் சினம் செருக்கி' என்ற பகுதி விளக்குகிறது. சூழ்நிலை தன்னை அழிப்பதாக மாறும்போது பூனையும் புலியாகிறது; கோழையும் வீரனாகின்றான். காரணம் இயல்பாகவுள்ள உடல் வலிமை, சினத்தால் பொங்கும் மன உரத்தால் பன் மடங்காகி விடுகிறது!

இதற்கு ஆற்ருமல் யானை எப்படி ஓடி வருகிறது, தெரியுமா?

'கார்ப்பெயல் உருமின் பிளிறி, சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை இருநிலம் சேர்த்தி
சினம்திகழ் கடாஅம் செருக்கி மரம்கொல்பு
மையல் வேழம் மடங்கலின் எதிர்தர (162-165)

கார்காலத்து இடிபோல முழங்கிக் கொண்டு வருகிறது அந்த யானை. அதன் சிறப்புக்குத் தக்க கரிய சருச்சரையை உடைய பெரிய கையைப் பூமியிலே அறைந்து கொண்டு வருகிறது. சீற்றத்தை மிகுதிப்படுத்தும் மதத்தினல் செருக்குக் கொண்டு, எதிர்ப்பட்ட மரங்களை யெல்லாம்

முறித்துக் கொண்டு வருகிறது. மதங்கொண்டு மயங்கிய அந்த யானை, சிங்கத்தைப் போல எதிரே பாய்ந்து வந்தது. இதைப் பார்த்ததும்,

'உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெழிப்ப, நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம், விரைந்துஅவற் பொருந்தி
சூர்உறு மஞ்ஞையின்' (166-169)

தானும் தலைவியும் நடுங்கியதாகத் தோழி கூறுகிறாள். தப்பிப் பிழைக்கும் இடத்தை அறியாமல் திகைத்தார்களாம். திருந்திய, திரண்ட, ஒளி வீசும் வளையல்கள் ஓசையிடுமாறு ஓடினார்களாம். வெட்கத்தை மறந்து, அச்சம் நிறைந்த மனமுடையவர்களாய், விரைந்து சென்று தலைவனை அடைந்தார்களாம். தெய்வம் ஏறிய மயிலைப் போலக் குலை நடுங்க நின்றார்களாம். இக் காட்சிகள் அனைத்தும் சொல்லும் முறையாலும் அச்சச் சுவை மிக்கன என்பதைப் பொருளுணர்ச்சியோடு, பாட்டைப் பன்முறை படித்துணர வேண்டும்.

தலைவன் வரும் வழியிலே உள்ள துன்பங்களை, கணக் கெடுக்கும் அதிகாரி போலத் தோழி அடுக்கி உரைக்கின்றாள். அவலத்தோடு கூடிய அச்சம் அங்குக் காணப் படுகிறது. தலைவன இரவிலே வருகிறான். வழியில் சில இடங்களில் குறுக்கே பெரிய நீர் நிலைகள் உள. அவற்றை அவன் நீந்திக் கொண்டு வரவேண்டும். அங்கு முதலையின் எல்லா வகைகளும் உள்ளன. விலங்குகளின் பகை, இயற்கையின் பகை, மேற் செல்ல அறிய முடியாத வழிப் பகை என எத்தனை பகைகளை -- உயிருக்குத் தீங்கு விளைவிப்பனவற்றைத் தொகுத்து உரைக்கிறாள் இந்தத் தோழி!

'...... .. கங்குல்
அளைச்செறி உழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட்டு ஆமான் புகல்வியும் களிறும்
வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து

உருமும் சூரும் இரைதேர் அரவமும்,
ஒடுங்குஇரும் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழ் அடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடைய' (251-261)

தலைவனது கூட்டமான மலைகளையுடைய இடம் முழுதும் 'வழுவின் வழாஅ விழுமம்' உடையனவாம்; கொலைத் தொழிலைத் தப்பாது விளைவிக்கும் துன்பமுடையனவாம்.

தலைவன் இரவிலே வந்தும் தலைவியைச் சந்திக்கப் பெறுமல் திரும்பும்படி செய்யும் துன்பங்கள் எவை எவை தெரியுமா? தாயை நோக்கித் தோழி சொல்லுகிருள்,

காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்
நீதுயில் எழினும் நிலவு வெளிப்படினும் (240-241)

தலைவியின் வேய்போலும் மென்தோளைத் தழுவப் பெறுமல் தலைவன் திரும்பிச் செல்வான் என்று.

தலைவன், தன் முடி மீது அணிந்திருக்கும் மாலைகளில் உள்ள மலர்கள் தாம் எத்தனை யெத்தனை வகை! எத்தனை யெத்தனை வண்ணம்! நல்ல நல்ல மலர்களாக எடுத்துத் தொடுக்கப்பட்ட மாலையை அவன் சூடியிருப்பதைக் கண்டு, முருகனே இவன்' என அஞ்சுவார்களாம் பெண்'கள். பிற்கால இலக்கியங்களிலே 'மன்மதனே இவன்' என்று பெண்கள் மகிழ்ந்ததாக வரும்; சங்க இலக்கியத்திலோ 'முருகனே இவன்' என அஞ்சியதாக அல்லது போற்றியதாக வரும்.

'மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்
வண்ண வண்ணத்த மலர் ஆய்பு விரைஇய
தண்நறும் தொடையல்' (113-115)

தலைவனின் முடிமாலையாகும். மலைமேலே பூத்தன, நிலத்தின்கண் பூத்தன, சினை (மரக்கொம்பு) களிலே பூத்தன, சுனை (குளம்) களிலே பூத்தன. எனத்தோன்றிய இடத்தாலும் அவை வேறு பட்டவை; நிறத்தாலும் வேறு பட்டவை. மலரை ஆராய்ந்து, கலந்து தொடுத்தது; குளிர்ந்தது; மணம் மிக்கது அந்த மாலை. இனி என்ன தான் இந்த மாலை பற்றிக் கூறுதல் இயலும்? கையில் கொண்டு வந்து தராத குறை தவிர, இம் மாலையைக் கண்ணில் கொண்டு வந்து காட்டுகின்றன அன்றோ இவ் வடிகள்!

261 அடிகளையே கொண்ட இச்சிறு காவியத்தில் 61-ஆம் அடி தொடங்கி 98-ஆம் அடிமுடிய 37-அடிகளுக் குள் 99 மலர் வகைகளைக் கபிலர் அடுக்கித் தொடுத்துக் காட்டுகிறார். பூக்களைத் தொடுப்பதால் மாலைக்குத் தொடை என்ற பெயருண்டு. சீர்களைத் தொடுத்த அடி களை உடைமையால் பாட்டுக்கும் தொடை என்று பெய ருண்டு. இம் முப்பத்தேழு வரிகளும் இரண்டு பொருளின் படியும் தொடையாகவே விளங்குகின்றன. வாடுகிற பூமாலை பற்றியும் வாடாத பாமாலை பற்றியும் இதுவரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்பகுதி பாமாலை மட்டுமன்று; வாடாத பூமாலையும் ஆகும்.

ஊட்டியிலே, கோடைக்கானலிலோ ஒரு மலர்க் கண் காட்சி நடத்தினால், ஒரு வேளை இப்பாட்டின்கண் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போன்ற 99 வகை மலர்களை நாம் காணக்கூடும்.

இயற்கை அழகைக் காணாதவர்கட்கு, இன்ப உணர்வை இழந்து விட்டவர்கட்கு, இம்மலர்க் கூட்டம் மகிழ்ச்சி தராது; வெற்றடுக்காய்க் காட்சி நல்கும். இயற்கையுடன் இரண்டறக் கலக்கும் இன்ப உணர்வு உடையவர்கட்கோ, கபிலர் இவ்வளவு மலர்களையும் எங்கே தேடித் தொகுத்தார் என்ற வியப்புணர்வு பிறக் கும்: இவற்றைச் சேர்த்துக் கட்டித் தம் மெல்லிரும்

முச்சியிலே (தலைமுடி) கவின் பெறக் கட்டிய கன்னியரை நினைக்குந் தோறும் அழகுணர்ச்சி பிறக்கும். இலக்கியம் நமக்குத் தரவேண்டியன இரண்டு; ஒன்று அழகுணர்ச்சி; மற்றது எப்போதும் மனத்தைப் புதிய மலராக இருக்க வைக்கும் இன்ப உணர்ச்சி. இவை இரண்டும் தராத இலக்கியங்கள், வானுலகத்திற்கு நேரே நம்மை அழைத்துச் செல்வனவாயினும் சரியே, வேண்டியன வல்ல.

கபிலர் குறிஞ்சிப் பூக்களை, மும்மூன்று பூக்களாகக் கட்டுகிறார்.

'ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கொடு வேரி, தேமா, மணிச்சிகை' (62-64)

முதலில் ஒரு பெரும்பூவை எடுத்துக் கொண்டு இரு சிறு பூக்களுடன் அதைச் சேர்த்துப் பிணைத்துக் கட்டுவது போல, அடிதோறும் முதலில் வரும் பூக்களை அடைமொழி யோடும் பிற இரண்டையும் அடைமொழி இன்றியும் அமைத்திருக்கும் நடைச் சிறப்பு அழகியதாகும். மேலும்,

வடவனம், வாகை, வான்பூங் குடசம்
எருவை, செருவிளை; மணிப்பூங் குவளை,
பயினி, வானி, பல்இணர்க் குரவம் (67-69)

என்று, முன்னிரண்டு பூவை அடைமொழியின்றி அமைத்தும் இறுதிப் பூவை மட்டும் அடிதோறும் அடைமொழியுடன் அமைத்தும் நடையழகும் காட்டித்தொடையழகும் கூட்டுகின்றார் கபிலர் பெருமான்.

கீழ்வரும் கண்ணிகளின் அழகைச் சிலமுறை படித்துச் சுவையுங்கள்

'வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி' (79-81)

'நந்தி நறவம், நறும்புன் னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடியிரும் புன்னை, (91-93)

இரண்டு பூக்களை மட்டும் உடைய மூன்று அடிகள் தனித் தனியே கீழ்வரும் வரிசையில் உள்ளன:

'உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்' (65)

'குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி' (72)

'காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல், (84)

இவ்வாறு மூன்று பூக்களைக் கொண்ட அடிகள் 30-ம் இரண்டு பூக்களைக் கொண்ட அடிகள் 3-ம் இறுதியில் இரண்டு அடிகளில் மூன்று பூக்களுமாக 99 பூக்களும் அழகுறத் தொடுக்கப்பட்டுள்ளன. 64 பூக்கள் அடை மொழியின்றி எடுத்தாளப் பெற்றுள்ளன. 35 பூக்கள் அடைமொழியுடன் உள்ளன. இறுதியிலே எருக்கம் பூவிற்குத்தான் அடைமொழி பெரிதாக உள்ளது. இயல்பிலேயே அழகிய பூக்கட்கு அடைமொழி அதிக மாகத் தேவையில்லை அல்லவா?

எவ்வாறு இப் பூத்தொடை, இக்குறிஞ்சிப் பாட்டிற்கு உரிய தனிச் சிறப்போ அது போலவே, மாலை வருணனை- பொழுது மறையும் காட்சி — ஒன்றும் இப் பாட்டுக்கே தனிச் சிறப்புத் தரும் முறையில் அமைந்துள்ளது.

''பகற் பொழுது கழிந்தது. ஏழு குதிரைகள் பூட்டிய தேரிலே சென்ற ஞாயிறு கீழே இறங்கினான். பல கதிர் களையுடைய அஞ் ஞாயிற்று மண்டிலம் மலையைச் சார்ந்து மறைந்தது.

அப்போதுதான் என்னென்ன நிகழ்கின்றன! மான் கூட்டங்களெல்லாம் மரத்தின் அடியிலே வந்து கூடு கின்றன. பசுக் கூட்டங்கள் தம் கன்றுகளை 'அம்மா' என அழைத்துக் கொண்டே மன்றுகள் நிறையும்படி புகுகின்றன.

ஊதுகின்ற கொம்பு போன்ற ஓசையுடைய வளைந்த வாயினைக் கொண்ட அன்றில் பறவை, உயர்ந்த கரிய

பனைமரத்தின் உள் மடலிலே இருந்து கொண்டு பெட்டையைக் கூவி அழைக்கிறது!

பாம்புகள் மாணிக்கத்தை உமிழ்கின்றன. பல திசைகளிலிருந்து இடையர்கள் ஆம்பல் என்னும் அழகிய இனிய குழலினால் தெளிந்த இசையை இடையறாது வாசிக்கிறார்கள். இதோ! அல்லிமலரின் அழகிய இதழ்கள் கூம்பு விட்டு அலர்கின்றன.

செல்வ வளம் மிக்க இல்லங்களில் பொலிவு பெற்ற வளையலை அணிந்த பெண்கள் விளக்கேற்றி மாலைப் பொழுதை வரவேற்கிறார்கள், அந்தணர்கள் மாலைக் கடன்களை நிகழ்த்துகிறார்கள்.

இருள் சூழும் நேரமாதலால் காட்டிலே வாழும் மக்கள் வானத்தைத் தீண்டும் தமது பரணிடத்தே, தீக்கடை கோலால் நெருப்பை மூட்டுகிறார்கள். முகில்கள் பெரிய மலையைச் சூழ்ந்து கருக்கின்றன.

காட்டிலே உள்ள விலங்குகளெல்லாம் 'கல்' லென்னும் ஓசையுண்டாகுமாறு ஒன்றற்கு ஒன்று மாறி ஒலிக்கின்றன. பறவை இனங்கள் ஆரவாரிக்கின்றன.

பகைவர் மீது சினம் மூண்ட அரசன் படையெடுத்துப் போர் மேல் விரைந்து செல்வதைப் போல, மாலைப் பொழுது மிக விரைந்து நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.''

இந்த வருணனை முழுவதும் படித்ததும் மாலைச் சூழ்நிலை அப்படியே நம் மனத்தில் படிந்துவிடுகிறது. எவ்வளவு அழகிய ஓவியம் இது.

''எல்லை செல்ல, ஏர்ஊர்பு இறைஞ்சி,
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய;
மான்கணம் மரம்முதல் தெவிட்ட, ஆன்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர.

ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்குஇரும் பெண்ணை அகமடல் அகவ,
பாம்புமணி உமிழ, பல்வயின் கோவலர்
ஆம்பலம் தீம்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆய்இதழ் கூம்புவிட, வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர் தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயர, கானவர்
விண்தோய் பணவைமிசை ஞெகிழி பொத்த
வானம் மாலைவாய் சூழ்புகறுப்ப, கானம்
கல்லென்று இரட்ட புள்ளினம் ஒலிப்ப
சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனைஇய மாலை'' (215-230)

இந்த மாலைப்பொழுது, என்றும் மறையாத பொழுதாகும். காலத்தை வென்ற காட்சி இது! அழியும் உலகை வென்ற அழியா அழகு இது! பசுமை மாறாத நெஞ்சத்தில் இந்த இயற்கை அழகுகளைப் பதிய வைத்துக்கொண்டால், நாமும் அழியா வாழ்வு பெறலாம்.

தொடக்கமும் முடிவும் அவலச் சுவையே யாயினும் இப்பாட்டின்கண் இடையில் பெரும் பகுதி இன்பச் சுவையே யாகும். தலைவனை முதன் முதலில், அறிமுகப் படுத்தும் போதே பெருமிதந்துடன் காட்டுகிறார். நாய் பாயும்போதும் காட்டு யானையைக் கானவர் விரட்டும் போதும் வெகுளிச் சுவை விளங்குகிறது. வேட்டை நாயைக் காணும் போதும் மதங்கொண்டு யானை பாய்ந்து வரப் பார்க்கும்போதும் 'அச்சச் சுவை' பிறக்கக் காணுகிறோம். 'குறிஞ்சிப்பாட்டு' இந்தகைய சுவைக் களஞ்சியம் மட்டுமன்று; கபிலர் பெருமான் உண்மை அரண்களை எழுப்பி, மெய்ம்மைக் கோட்டை கட்டி, வாய்மைக் கோபுரம் அமைத்த இலக்கியக் கலைக் கோயிலும் ஆகும்.

**உவமை நயம்**

அணிகளுள் சிறந்தது உவமையணி, பிற அணிகள் அனைத்திற்கும் அதைத் 'தாய் அணி' என்பர். மனிதன் முதலில் தான் சொல்வதைத் தெளிவுபடச் சொல்லுவதற்கு உவமையைக் கையாண்டான்; பிறகு தான் சொல்ல வந்ததை அழகுபடச் சொல்வதற்கு அதைப் பயன்படுத்தினன்; பின்னர்த் தனது கற்பனைப் படைப்புக்களை யெல்லாம் இந்த ஒப்புமை அறிவு மூலம் உருவாக்கி மகிழ்ந்தான்.

இக்குறிஞ்சிப் பாட்டில் முப்பத்து மூன்று உவமைகளும் இரண்டு உள்ளுறை உவமைகளும் உள்ளன. இவற்றுள் அழகிய ஓவியமாக்கி அதற்கு வண்ணமூட்டுவன சில; உள்ளதை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவன சில: கேளாத ஒலிகளையும் ஒப்புமையால் கேட்க வைப்பன சில.

**அழகு உவமை**

பெண்ணின் பார்வை 'மான் அமர் நோக்கம்' (25) மான் போலும் விரும்பத் தக்க பார்வை எனப்படுகிறது. இதுபோலப் 'பிணை ஏர் நோக்கின் மனையோள்' (154) என்றும் வருகிறது. இங்கு பெண்ணின் அழகிய விழிகட்கு பெண்மான் உவமையாக வருகிறது. மானின் மருட்சி பெண்களின் கண்களில் விளங்குவது ஒரு தனியழகு. பெண்ணின் அழகு அவள் கண்ணில் தெரியுமன்றோ!

தலைவியும் தோழியும் அருவியிலும் சுனையிலும் குளித்து விட்டு, எழுந்து கரைமீது வருகிறார்கள். பொன்னிறமான முதுகில், நனைந்த கூந்தல் படிந்து கிடக்கிறது. இக்காட்சியை, பொன்னில் பதித்த நீலமணிபோல, எம் முதுகில் தாழ்ந்து கிடக்கின்ற பின்னுதலமைந்த கூந்தல் என்று தோழி கூறுவதாக வரைந்து காட்டுகிறார், கபிலர்.

''பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம்
பின்னிரும் கூந்தல்'' (59-60)

என்பது அந்த எழிலோவியம்.

தலைவியின் கண்கள் பெருமையும் மதர்ப்பும் குளிர்ச்சியும் உடையன. அவை இமை சோர்ந்து, கலங்கி அழுத வண்ணம் இருக்கின்றன. இதற்கு, மழை நீரால் தாக்கப் பட்ட மலர் அழகழிந்து, இதழ் சோர்ந்து நீர் சிந்தி நிற்பதை உவமையாக்குகிறார்.

''நீர் எறி மலரின் சாஅய், இதழ்சோரா
ஈரிய கலுழும் இவள் பெருமதர் மழைக்கண்'' (247-48)

இவ்வுவமை சோக உணர்வை மிகுதிப்படுத்திக் காட்டு வதற்குப் பயன்படுகிறது.

**ஒலி உவமை**

இடியோசை முரசு அதிர்வது போலக் (4) கேட்கிறது. யாழ் இசைக்கு வண்டினது ஒலி உவமையாக வருவது பெரு வழக்காகும். அழகு மிக்க வரிகளையுடைய மிஞிறு என்னும் வண்டு யாழ்இசை போல (110) ஆரவாரிக் கின்றது என்று இம்நூலில் வருகிறது. இதே உவமை பின்னர் இன்னும் சற்று விரிவாகக் கூறப்படுகிறது.

''நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்
மாதர் வண்டொடு சுரும்புநயந்து இறுத்த'' (146-148)

என்ற பகுதியில், பெண் வண்டினுடைய 'ரீங்கார' ஒலி தான் யாழிசை போன்றது என்று இங்கு வரையறுத்துக் கூறப்படுகிறது: நைவளம் என்பது நட்டராகம். அது பகலில் பாடும் பண்களுள் ஒன்று அதனை வாசித்தற் கேற்ற, இலக்கணம் முழுதும் அமைந்த பாலையாழை இயக்கவல்லவன் கையால் தெறித்து எழுப்பும் ஓசை போல, 'இம்ம்ம்' மென்று ஒலிக்கும் பெண் வண்டுடன், ஆண் வண்டு விரும்பி உறைகின்ற பூங்கொம்பு என இங்குக் கூறப்படுகிறது. யாழிசை, வண்டுகளில் மிஞிறு என்ற வண்டினுடைய ஒலி போன்றது; பெண் வண்டு ஆண் வண்டுடன் புணர்ச்சி விரும்பி 'இம்மென' இமிருவது போன்றது என வரையறுத்துக் காட்டி எவ்வளவு நுண்

மையாக அந்த யாழிசையை, நம் செவிகளிலே பாய்ச்சி விட முயலுகிருர், இந்தப் பேரறிஞர்!

மதங்கொண்ட யானை கார்கால மழையுடன் கூடிக் கேட்கும் பேரிடி போலப் பிளிறிக் கொண்டு (162) வருகிறது. அன்றில் பறவையின் ஓசை, கொம்பின் இசை போல நீட்டி முழக்கிக் கேட்கிறது; அதன் அலகு வளைந்திருக்கின்றது.

'ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்' (219)

என்று, முன்னர் அன்றிலைச் செவிப்புலனுக்கிப் பிறகு அதனைக் கட்புலனுக்குகிருர், கவிஞர் பெருமகன்.

**ஓவியர்**

அருவிநீர் பாய்வது விளங்குகின்ற வெண் துகில் ஒன்று காற்றில் அசைவது போலக் (55) காணப்படுகிறது. தெளிந்த சுனைநீர் பளிங்கை நீர்ப்பொருளாக்கிச்சொரிந்து வைத்தது போல (57) இருக்கிறது. பருத்த அழகுடைய மலையெருக்கம்பூ தரையிலே உதிர்ந்து பரவிக் கிடப்பது, அரக்கைப் பரப்பி வைத்தாற்போலச் (96) செந்நிறமாகத் திகழ்கிறது. அழகு வாய்ந்த அசோகந்தளிர் நெருப்பைப் போலச் (150) சிவந்த நிறத்துடன் விளங்குகிறது. பின்னும் ஓரிடத்தில், 'சிவந்த நெருப்புப் போன்ற ஒளி பொருந்திய பூக்களையுடைய அசோகு' (118) என்று, அதன் பூவும் செந்நிறமாக இருப்பதைக் கபிலர் குறிப்பிடுகிருர். வில்லின் வளைந்த தோற்றம் வடிவத்தால் மட்டுமின்றிக் கொடுமையினுலும் பாம்பை (158) நினைப்பூட்டுகிறது. மதங்கொண்ட யானை சிங்கத்தைப் போல (அல்லது எமனைப்போல) எதிர்த்து ஓடிவருகிறது (165) யானை மீது' தலைவன் எய்த அம்புபட்டுக் குருதி சிதறிக் கறை படிந்து கிடக்குமிடம் முருகனுல் நோயுற்ற பெண்களுக்கு அந்நோய் தீர மறி அறுத்து வெறியாட்டெடுக்கும் களம் போலக் (175) காட்சியளிக்கிறது.

மலைமேல் விளையாடும் மகளிரால், கீழே செங்காந்தட் பூக்கள் உதிர்ந்து கிடக்குமிடம் கம்பளம் விரிக்கப்பட்ட விழாக்களம் போலத் (148) தோன்றுகிறது.

படப்பிடிப்பு

தங்களை நோக்கிவரும் யானையைக் கண்டதும் தெய்வம் ஏறின மயில் போலத் (169) தலைவியும் தோழியும் அச்சத்தால் நடுங்கினார்களாம்.

வெறியாட்டு எடுக்கும் களத்தில் திண்ணிய நிலைமையினையுடைய கடப்ப மரம் நிற்கும். அதன் மேல் ஒன்றின் மேல் ஒன்றாக மாலைகள் போடப்பட்டிருக்கும். இக்காட்சி, யானை கண்ட அச்சத்தால் விரைந்தோடிய தலைவியும் தோழியும் தலைவனைச் சார்ந்து நின்றமைக்கு உவமையாக்கப் பட்டுள்ளது. அஃதாவது, தலைவனைத் தலைவி சார்ந்து நின்றாள்; தலைவியைத் தோழி சார்ந்து நிற்கின்றாள்.

''திணிநிலைக் கடம்பின் திரள் அரை வளை இய
துணை அறை மாலையின்'' (176-77)

என்று, தலைவனைத் தழுவி நிற்கும் தலைவியையும் தோழியையும் முறைப்படி காட்டும் இது, சிறப்புடைய காட்சியன்றோ?

தலைவன் வீட்டிலே பலர் வந்து உண்ணுகிற காட்சிக்கு, திருவிழாக் காலத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் விருந்து பரிமாறும் காட்சி (201) ஒப்புமையாகிறது. தலைவன், வேட்டை நாய்களை அடக்க, பூங்கொம்பு ஒன்றை முறித்து அவற்றின் மீது வீசுகிறான். இது அங்குசம் என்னும் பரிக்கோலைக் கைகடந்த ஆண் யானை போலத் (150) தோன்றுகிறதாம்.

தலைவன் இரவு தோறும் தன்னைச் சந்திக்க வருவதால், அவனுக்கு வழியிலே என்ன துன்பம் நேருமோ என நினைந்து நினைந்து அழுது நைகின்றாள் தலைவி. இதற்கு வலையிலகப்பட்ட மயில் தன் அழகு கெட்டு வாடுவது போல (250) வாடுகிறாள் என உவமை கூறுகிறார்.

"நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை
முத்தார் மருப்பின் இறங்குகை கடுப்ப
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நல்கோட் சிறுதினை" (35-38)

என்ற பகுதியில் தினைக்கதிர் முற்றி வளர்ந்து, தலை வணங்கி நிற்கும் காட்சி அப்படியே, ஒளிப்படமாய் உவமை வாயிலாகக் காட்டப்படுகிறது. நெல் விளைவு பெற்ற நீண்ட மூங்கிலை வளைத்துத் தின்பதற்காக நெடு நேரம் அண்ணாந்து நின்ற யானை, முத்து நிறைந்து முற்றிய தன் கொம்பிலே துதிக்கையை இறக்கிப் போட்டிருக்குமாம். அதுபோல, துய்யை (பஞ்சு போன்ற முன் பகுதி) உடையதும், முன்னே வளைந்ததுமான முதிர்ந்த பெரிய கதிர்களை மிகுதியாகக் கொண்ட சிறிய தினை காட்சி யளிக்கிறது என்கிறார் கபிலர்.

பகைவருக்கு எதிரே முருகப்பெருமான் வேலை ஏந்தி வீசும்போது அது பகைவரைப் பிளந்து கொண்டு மின்னிப்பாய்வதுபோல, (51-52) மழையிடையே மின்னல் பிளந்தோடுகின்றதாம்.

எதிர் பாராத நிலையில் யானை ஒன்று பிளறிக்கொண்டு வந்தது; தலைவனால் அம்பு எய்யப்பட்டுச் செந்நீர் சிந்த ஓடியது. இக்காட்சியைக் கண்ட தலைவி நடுநடுங்கினாள். மூர்ச்சையுற்று, அப்படியே தலைவன்மீது சாய்ந்து விட்டாள். இதை மிகப் பொருத்தமான உவமையால், கபிலர் நுட்பத்துடன் கூறுகிறார். நுரை பெருக வெள்ளம் பாயும்போது, ஆற்றினுடைய வலிமைமிக்க அலைகள் தாக்குவதால், கரை இடிகிறது, அவ்விடிகரையிலே நிற்கின்ற வாழை மரம் போலத் தலைவி நடுங்குகிறாளாம்.

'நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத்திரை
அடும்கரை வாழையின் நடுங்க' (178-79

என்பது அப்பகுதி. தலைவியின் மென்மையையும் நடுக்கத்தையும் ஏற்பட்ட ஆபத்தையும் எவ்வளவு அழகியதாக விளக்குகிறது இவ்வுவமை!

மலைமீது சுனை ஒன்றில் மாங்கனி உதிர்ந்து, தேன் சிதறியவற்றுடன் அது கலந்து, முற்றி நெகிழ்ந்து உதிர்ந்த பலாக்கனியுடன் கூடி மதுவாக விளைந்து கிடந்தது. அதை நீர் என்றே கருதிப் பருகிவிட்ட மயி லொன்று தளர்ந்து தளர்ந்து ஆடுகிறது. விழாக் கொண்டாடும் ஊரில் விழாக் களங்களில் ஆடுகளமகள், 'மூங்கில்களுக்கு இடையே கட்டப்பட்ட கயிற்றிலேறி' பின்னணியாம் இன்னியங்கள் முழங்கத் தாளத்திற்கேற்ப அசைந்து அசைந்து ஆடுவதுபோல (1992—93) இருக்கிற தாம் அக்காட்சி!

### சிறந்த உவமைகள்

இப் பெருங் குறிஞ்சி ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சிறப்பை அறிவுறுத்த எழுதப் பெற்றது. இதில் வேந்-தரைப் பற்றி மூன்று இடங்களில் வரும் உவமைகள் சிறப்புடையவனாகும். ஏனெனில், ஓர் அரசனுக்கு, அவ னுக்குத் தொடர்பான செய்திகளை உவமை கூறுவதால். பொருளைத் தெளிவுற விளக்கலாம் என்று கபிலர் கருதி யிருக்க வேண்டும். அதனுல்தான், மிக இன்றியமையா இடங்களில் இவ்வுவமைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

தோழியின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போன் றது. ஒருபக்கம் தலைவியின் மெலிவு கண்டு அஞ்சுகிருள்; மறு பக்கம் தாயின் சினத்திற்கு அஞ்சுகிருள். காதல் உண்மையைச் சொல்லாவிட்டால் தலைவி வருந்துவாள்; சொன்னலோ தாய் வருந்துவாள். யாருக்காக அஞ்சி நடப்பது ?

"இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்ருேர் போல
இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலென்" (27-29)

மேலும் மேலும் பகைமையைப் பெருக்கும் இரண்டு பெரிய வேந்தர்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்படுத்த முயலும் சான்ருேர்கள் இருவரும்த் தம்மைத் தவருக

எடுத்துக் கொள்ளக் கூடாதே என்று அஞ்சி வருந்துவது போல, தோழி தானும் வருந்துவதாகக் கூறுகிருள்.

படையெடுத்துச் செல்லும் வேந்தன், எவ்வளவு விரைந்து சென்று பகைநாடு முழுதும் சூழ்ந்து கொள் வானே அதுபோல இந்த மாலைப் பொழுதும் விரைந்து வந்து உலகை வளைத்துக் கொண்டு விட்டதாம்.

''சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனைஇய மாலை'' (229-30)

இவ்வாறு, காலத்தின் படையெடுப்புக்குக் காவலனின் படையெடுப்பை ஒப்பிடும் முறை சிறப்புடையதாகும்.

அடுத்த உவமை வேந்தர்களைப் பற்றியதன்று. ஆயி னும் அவனுல் ஏவப்படும் படைவீரர்களைப் பற்றியது. மூங் கில் முளைபோலும் ஒளிவீசும் பற்களை உடையவாய் வேட்டை நாய்கள் பாய்ந்து வருகின்றன. இது, எதிர்நாட் டைப் பாழாக்கும் நெருங்குதற்கரிய வலிமையுடைய பகைவர்களையும புறமுதுகிட்டு ஓடவைத்துத் துரத்து கின்ற பல வேற்படைகளையுடைய வீரர்களைப் போலக் காட்சியளிக்கிறது.

''முனைபாழ் படுக்கும் துன்அரும் துப்பின்
பகைபுறம் கண்ட பல்வேல் இளைஞரின்'' (128-29)

இவ்வுவமையில், வேட்டை நாய்கள் நெருங்குதற்கு அரிய யானையையும் புறமுதுகிட்டு ஓடவைத்துத் துரத்திக் கொண்டுவந்தன என்ற குறிப்பும் இருக்கிறது.

''மாறுபொருது ஓட்டிய புகல்வின் வேறுபுலத்து
ஆகாண் விடையின்'' (135-36)

ஒருகாளை தனக்கு மாறுன காளைகளுடன் சண்டையிட்டுத் துரத்தி விட்டு, அம் மனச் செருக்கோடு, புதிய இடத் திலே கண்டபுதிய பசுவை நெருங்குவது போலத் தலைவன் தலைவியிடம் ஆவலுடன் நெருங்கினுனும். தலைவனது பெருமிதம், செருக்கு, ஆவல், வேட்கை அனைத்தையும்

இவ்வுவமை வெளிப்படுத்துகிறது. தலைவன் தலைவியுடன் கூடியிருந்து, இயற்கைப் புணர்ச்சி'யின் இறுதியில் பிரிந்து செல்லும் போது, துணையாகிய பசுவுடன் கூடிய காளைபோல உடன் வந்து விட்டுச் சென்றான் என்றும் கூறப்படுகிறது (235). முதலில் பசுவைக் கண்ட காளை போல ஆவலோடு அழகு பொருந்த வந்தவன், இறுதி யில் பசுவைக்கூடிய காளைபோல ஊர்வரை உடன் வந்து விட்டுப் போனான் என்று நூறு அடிக்கு இடையே தொடர்புகெடாமல் முன்வந்த உவமையையே பின்னும் எடுத்தாண்டிருக்கும் திறம் பாராட்டுதலுக்கு உரியது. இதுபோல முன்சொன்ன உவமைகளை நினைவிற்கொண்டு, பின்னர் வரும் சூழ்நிலைகட்கு ஏற்ப அவற்றைச் சிறிது மாற்றியும் கூட்டியும் எடுத்தாளும் திறம் பிற்காலத்தில் கம்பரிடம் சிறப்புற அமைந்திருந்தது.

இறுதியாக, இக் குறிஞ்சிப் பாட்டிற்கே முடிமணி எனத்தகும் உவமை ஒன்றும் உளது.

> ''முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
> நேர் வரும் குரைய கலம்கெடின் புணரும்;
> சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
> மாசு அறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
> ஆசு அறுகாட்சி ஐயர்க்கும் அந்நிலை
> எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர்'' (13–18)

—''முத்தினாலும் மாணிக்கத்தாலும் பொன்னாலும் ஆன, அச்சேர்க்கையால் அழகு பொருந்திய அணிகலன் கெடு மானால், மீண்டும் தொழில் வல்லார் செப்பனிட முன்பு போலக் கூடித் திகழும். அவ்வாறன்றி நற்பண்பும் பெருமையும் ஒழுக்கமும் சிறிது குன்றுமாயினும் அக்குற்றம் நீங்கத்தூய்மைப்படுத்தி, மீண்டும் பழைய விளங்கும் புகழ் நிலையில் நிறுத்துதல் என்பது யாருக்கும் இயலாது. பழைய நூல்களைக் கற்ற அனுபவம் மிக்க பெருமக்கள் கூடக் குற்றமற்ற அறிவினையுடைய பெரியோர்களுக்கு இது எளிதென்று கூற மாட்டார்கள்'', என்பது இதன் பொருளாகும்.

புனைகதை இலக்கிய வல்லுநர், மராத்தி மொழி எழுத்தாளர் அறிஞர் காண்டேகர் அவர்கள் திரும்பப் பெற முடியாதபடி வாழ்க்கையே அழிந்து விட்டது என்று கூற வரும் இடங்களில், ''வெள்ளிப் பாத்திரமோ தங்கப்பாத்திரமோ கீழே விழுந்து நெளிந்துவிட்டால் பின்னர் செப்பனிட்டுக்கொள்ளலாம். ஆனால், பண்பு கெட்டால் கண்ணாடிப் பாத்திரம் கீழே விழுந்ததுபோல ஆகும். தூள் தூளாகச் சிதறிவிட்டது என்பதுமட்டு மன்று; திரும்பச் சேர்க்க முடியாத நிலையையும் அடைந்து விட்டது என்பதாகும்'' என்ற முறையில் உவமைகளை எடுத்தாள்வார்.

மேற்காட்டிய சங்க இலக்கிய உவமை இதே கருத்தைத்தான் இன்னும் அழகுறக் கூறுகிறது. அணி கலன்கள் கெட்டால் செப்பனிட்டுக்கொள்ளலாம்; தன்மை கெட்டால் கெட்டது தான் எனத்தெளிவுபடுத்து கிறது, இவ்வுவமை. தலைவனை விட்டுப் பிரித்தால் தன் வாழ்வு சரி செய்ய முடியாதபடி கெட்டுவிடும் என்ற உண்மையைத் தலைவி இவ்வழகிய உவமையால் வெளி யிடுகிறாள். கற்புச் சிதைந்து ஒழுக்கம் பாழானால், மாசு அறக் கழுவுதலும், பழைய வயங்கு புகழிலே நிறுத்து தலும் யாருக்கும் இயலாது.

முத்து, மணி, பொன் என்று வரிசைப் படுத்தியதற்கு ஏற்ப முறையே சால்பு, வியப்பு, இயல்பு என மூன்றைப் பின்னரும் வரிசைப் படுத்தியது தனித்தனியே ஒப்பிட்டுப் பார்க்கும் சிறப்புடையதாகும்

### உள்ளுறை உவமம்

இது கவிஞர் தமது திறத்தை வெளிப்படுத்தத் தக்க கலை நுணுக்கமாகும் உலகில் வெளிப்படையாகக் கூறத் தக்கனவும் உள, மறைமுகமாகக் கூறத் தக்கனவும் உள. உட்பொருளாகச் சொல்வது நாகரிக முறைமட்டு மன்றி, அழுத்தமாகச் சொல்வதற்கும் பயன்படும்.

இக் குறிஞ்சிப் பாட்டில் தலைவன் தலைவியை நோக்கி, 'நினது அழகிய நலத்தை யான் நுகர்வேன்' என்று (185) கூறுகிறான். அதை அடுத்துக் கீழ்வரும் உள்ளுறை உவமை இடம் பெறுகிறது.

மலை மீதுள்ள சுனையில் மாங்கனியும் பலாக்கனியும் முற்றி வெடித்து, உதிர்ந்து, அங்கே சிதறி ஒழுகிய தேனுடன் கலந்து பல நாட்கிடந்து ஊறி மதுவாக விளைந்து விடுகிறது அதனை மது என்று கருதாமல், நீர் என்றே நினைத்துக் குடித்த மயில் தளர்ந்து தளர்ந்து ஆடுகிறது

இதில் அமைந்துள்ள உள்ளுறை யாதெனில், களவொழுக்கத்தின் தீங்கினை அறியாமலே அதில் ஈடுபட்ட தலைவி, அதனாலாகிய மனமயக்கத்துடன் தளர்வுறுகின்றாள் என்பதாகும். மேலும், உயர இருந்த கனிகள் கீழே வீழ்ந்து மதுவானது போல உயர் குடியினனாகிய தலைவன், தலைவிபால் தாழ்ந்து அவளுடன் கூடி அழகு பொருந்தச் செய்தான் என்பதும் உட்பொருளேயாகும். இவ்வாறு தாயிடம் நேரே கூறக் கூடாதவற்றைத் தோழி மறைமுகமாகக் கூறுகிறாள். இவ்வாறு உள்ளுறை உவமைகள் நாடக மாந்தரின் உள்ளுணர்வையும் நாகரிகத்தையும் உயர்த்துக் காட்டுகின்றன.

# 6. வாழ்வும் நாகரிகமும்

இப் பாட்டின்கண் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த, தமிழ் மக்களின் நாகரிகம் பற்றிய பல சான்று கள் உள்ளன. அக்கால மக்களின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் காணக்கிடக்கின்றன. மலைமீது மழை பொழிந்து ஓய்ந்த பின்னர்த் தலைவியும் தோழியும் ஆங் காங்கு மலர்ந்து, கலந்து கிடந்த 'வண்ண வண்ணத்த' மலர்களைத் தேடித் தொகுத்ததுபோல நாமும் இந் நாகரிகக் குறிப்புக்களைத் தேடித்தொகுப்பதிலே ஒரு தனி யின்பம் இருக்கிறது நம் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்வதன் மூலம், நம்முடைய வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொள்வதாகிய பயனும் இருக்கிறது.

### பழக்க வழக்கம்

'விறல் இழை நெகிழ்த்த வீவு அரும் கடும் நோய்; (3) என்பதற்குச், 'சிறப்புடைய அணிகளை நெகிழ வைத்த எதனாலும் தீராத கடிய நோய்' என்றுதான் இதுவரை பலரும் பொருள் சொல்லியுள்ளார்கள். 'இழை' என்பது அணிகலன்களுக்கெல்லாம் பொதுப பெயராயினும், நெகிழ்ந்து விழும்படி செய்த நோய்எனப் பின்னர் வரு வதால் அது கைவளையல்களையே இங்குக் குறிக்கும்.

'விறல்' என்பது இவ்வளையல் தனிச்சிறப்புடையது- மங்கலமுடையது – புனிதமானது எனச் சுட்டுகிறது. தாலிக்கு இன்று எவ்வளவு மதிப்பு உண்டோ, அவ்வளவு மதிப்பு அன்று வளையல்களுக்கு இருந்தது. இன்று கணவனை இழந்ததற்கு அடையாளமாகத் தாலி கழற்றப் படுவது போல, அன்று கைவளையல்கள் கழற்றப்பட்டன. கணவனை இழந்த கண்ணகி, தொடியினை (வளையல்)

உடைத்த செய்தியைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது. தலைவனைப் பிரிந்த தலைவியின் வாட்டத்தைக் காட்டுவதற்கும் 'வளைநெகிழ மெலிந்துவிட்டாள்' என்று கூறுவதே, இலக்கியப் பெருவழக்காகும். தலைவியின் அழகைச் சிறப்பிக்கும் போதும், நலிவைக்கூறும்போதும் முதலில் இடம் பெறுவன இவ் 'வளையல்கள்' தான்.

பெரிய தேரையுடைய தன் தந்தையின் அரிய காவலைக் கடந்து (20) தான காதல் கொண்டதாகத் தலைவி கூறுகிருள். இது பூப்பெய்திய பெண்களை மணங்சுாணும் வரை நம் முன்னோர் கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்தனர் என்பதையே நினைப்பூட்டுகிறது. அன்று 'காதல் மணம்' எவ்வளவு இருந்ததோ, அதைவிட ஒரு படி அதிகமாகவே இக்காவல் நிலையும் இருந்தது. இரண்டும் போதுமான அளவில் இருந்தமையால் தான் இந்நாட்டில் 'கற்பு'ச் சிறப்புற்றது.

'இருவேம் ஆய்ந்த மன்றல்' (21) என்று தலைவி தானும் தலைவனும். இக்காதல் மணத்தை முடிவு செய்ததாகக் கூறுகிருள் பிறகு, தோழியும் இதற்கு ஒப்புக் கொள்கிருள். இதனை, அத் தோழி

''கொடுப்பின்நன்கு உடைமையும், குடிநிரல்
உடைமையும்.
வண்ணமும், துணையும் பொரீஇ எண்ணது
எமியேம் துணிந்த'' (30-32)

திருமணம் என்று கூறுகிருள். 'பல பொருத்தங்களையும் பெரியோர்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பாராமல் நாங்களாக இத் திருமணத்தை முடிவ செய்து விட்டோம்' என்கிருள். இதிலிருந்து அன்று காதல் திருமணங்கள் நிகழ்வுற்றனவெனினும் அதே நேரத்தில் 'பெரியோர்கள் கூடி உறுதி செய்யும் திருமணங்களும்' பெரிதும் நடைபெற்றன என அறிகின்ருேம். இன்று கூடப் ' பெரியோர்களால் உறுதி செய்யப்படும் திருமணங்களே பெரும்பான்மையாக இருந்தும், சிறுகதை, பெருங்கதை எழுது

வார் அனைவரும் காதல் மணங்கள் பற்றித்தானே வரைகின்றனர். அன்றும் உலகியலில் வேறுவகைத் திருமணங்கட்கு இடமிருந்தும், இலக்கியத் தனிச் செல்வாக்குக் காதல் மணங்கட்கே வாய்த்திருந்தது என்பதை நாம் உணரவேண்டும்

பெரியோர்கள் கூடி முடிவு செய்யும் பொழுது பல பொருத்தங்கள் பார்ப்பதுண்டு அல்லவா? இப் பழக்கம் அன்றும் இருந்தது. ஆனால் ஒரு வேறுபாடு இன்று 'செவ்வாய் தோசம்' பொருந்தியிருக்கிறதா என ஆராய்கிறார்கள். கோள் நிலைகளிடையேயுள்ள பொருத்தங்களை மட்டும் கருத்தாகக் கொள்கிறார்கள். அன்று, இக் கண்காணக் கோள்நிலைப் பொருத்தங்களை விடக் கண்கண்ட பொருத்தங்களைக் கருதினார்கள்.

பெரியோர்கள் கூடி, 'இப்பெண்ணை இந்த இடத்தில் கொடுத்தால் பின்பு யாவும் நன்றாகி முடியுமா? எனப் பொதுப் பொருத்தத்தை ஆராய்வார்கள். குடிகள் இரண்டும் சமமான தரமுடையவையா என ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். தலைவன் தலைவியரிடையே உள்ள பண்பு ஒற்றுமைகளை நோக்குவார்கள். இருவர்தம் சுற்றத்திலிருந்தும் இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகளையும் பொருத்திப் பார்ப்பார்கள். மேலும் தலைவன் தலைவியரிடையே இருக்கவேண்டிய ஒப்புமைகளைப் பற்றித் தொல்காப்பியம் — மெய்ப் பாட்டியலில்* விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருமணச் சடங்கு பெற்றோர் கொடுக்கக் காதலியின் கையைத் தலைவன் பற்றிக் கொள்வதாகும் இதனை 'நாடு அறி நன்மணம்' (232) என்று தலைவன் கூறுவதால், இம் மணவினை உலகம் அறிவதற்காக நடத்தப்படும் 'சடங்கு' என்பது புலனாகிறது. இல்லறத்தின் தலையாய அறம்

*தொல்காப்பியம்—பொருள் : நூ 269

விருந்து புறந்தருதலே (206) என்பதை இக் குறிஞ்சிப் பாட்டு மிகத் தெளிவாக விளக்குகிறது.

அந்தணர்கள் அந்தி நேரத்தில் மாலை வணக்கம் செய்வர். பெண்கள் தம் இல்லங்களில் விளக்கேற்றி வைத்து மாலைப்பொழுதை வரவேற்பர். வேட்டை யாடுதல் இளைஞர்களின் விருப்பத்திற்குரிய தொழிலா கும். அவர்கள் வேட்டை நாய்களுடன் சென்று விலங்கு களைத் தேடிப் பின் தொடர்ந்து அலைவார்கள்.

வயது வந்த பெண்களைத் தினைப்புனம் காக்க அனுப்புவதுண்டு கானவர்கள் புலி அஞ்சும் இதணம் (பரண்) அமைத்து, அதன்மேலே இரவு நேரத்தில் தங்கியிருந்து தினைப்புனம் காப்பார்கள். அப் பரணிடத்தே, இரவு நேரத்திலும் கானவர்கள் தீக்கடை கோலால் நெருப்பை உண்டாக்குவார்கள். பகற் பொழு தில் மகளிர் கிளிகளை ஓட்டுவதற்குத் தழல், தட்டை, குளிர் எனப் பல கருவிகளைப் பயன்படுத்துவார்கள். கிளிகளை ஓட்ட 'ஆலோலம்' என்ற தெள்விளியை (தெளிந்த ஓசையை) அவர்கள் எழுப்புவார்கள். கானவர் கள் யானையை விரட்டுவதற்குப் பேரோசையை எழுப்பி, கணைகள் ஏவித் தாக்குவார்கள். மயிலை வலைவைத்துப் பிடிக்கின்ற முறையும் அன்று இருந்தது. விழாக்காலங் களில் கூத்துக்கள் நடத்துகிற பழக்கமும் அன்று உண்டு.

**நம்பிக்கைகள்**

''வேறுபல் உருவின் கடவுட் பேணி'' (6)

என்று, தாய் கடவுளை வணங்கியமை கூறப்படுகிறது. இதற்குப் 'பல வேறு வடிவங்களையுடைய கடவுள்களை வணங்கி' என்று பொருள் கூறுவது சங்ககால மரபுக்குப் பொருந்துவதன்று! இப் பாட்டின்கண், 'பல்வேறு உரு வின் வனப்பு அமை கோதை' (103) என்ற இடத்துப் பல் வேறு நிறமுடைய மலர்கள் எனப் பொருள் தருகிறது!

அடுத்து, 'எரி அவிர் உருவின் அம் குழைச் செயலை' (105) என்ற இடத்தும் நெருப்புப் போன்ற நிறமுடைய அசோகந் தளிர்களைச் சுட்டுகிறது. எனவே, இங்கும் 'பல்வேறு நிறங்களையுடைய கடவுளைப் பேணி' எனப் பொருள் கொள்ளுதல் சிறப்பு எனப் படுகின்றது. ஏனெனில் சங்ககாலக் கடவுளரின் பெயர்கள் பெரும் பாலும் நிறம் பற்றி அமைந்திருந்தன. குறிஞ்சி நிலக் கடவுளைச் 'சேயோன்' (சிவந்த நிறமுடையவன்) என்றும் முல்லைநிலக் கடவுளை 'மாயோன்' (கரிய நிறமுடையவன்) என்றும் அழைத்தனர். 'வாலியோன்' என்ற கடவுட் பெயரும் வெண்மை நிறம் உடையவன் என்று பொருள் படும்.

குறிஞ்சி நிலக் கடவுள் முருகன். இக் குறிஞ்சிப் பாட்டில் முருகக் கடவுள் பகைவருக்கு எதிரே வேலை உயர்த்தியமை உவமை வாயிலாகக் கூறப்பட்டுள்ளது பொருத்தமேயாகும். முருகன் பகைவரை அழித்துத் தங்களைப் பாதுகாப்பான் என்றும் அதற்கு அடையாள மாகவே அவன் கைகளில் வேல் விளங்குகிறது என்றும் தமிழ் மக்கள் நம்பினார்கள்.

பழங்காலத் தமிழ் மக்களுக்கு மறு உலகத்தில் நம்பிக்கை (24) இருந்தது. ஆனால் அவ்வுலகைப் பற்றிக் கற்பனை செய்திலர். பருவம் வந்த பெண்களுக்குத் தெய்வத்தால்-குறிப்பாக முருகக் கடவுளால் நோய் ஏற் பட்டு உடல் மெலிவுறும் என அவர்கள் நம்பினார்கள். இந்நோயைப் போக்க முருக பூசை செய்யும் வேலனை அழைப்பார்கள். முதலில் அவனிடம் குறிகேட்பார்கள். கழற்சிக் காய்களைப் போட்டுப் பார்த்து அவன் குறி சொல்வான். இக் காலத்துக் 'கோடாங்கி' என்னும் குறி பார்ப்பவனை இது நினைப்பூட்டுகிறது. முறத்திலே நெல்லைப் போட்டுக் குறிபார்க்கும் கட்டுவிச்சியிடமும் குறிபார்ப்பார்கள். இது தெய்வத்தால் வந்த நோய் என்று அவர்கள் குறிசொன்னால், அவ்வேலனைக் கொண்டோ அல்லது கட்டுவிச்சியைக் கொண்டோ

முருகக்கடவுளுக்கு வெறியாட்டு எடுப்பார்கள். மறி அறுத்துப் பலி கொடுப்பார்கள். மலர் தூவி வழிபடுவார்கள். அகில், சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களை எடுத்து வழிபாடு செய்வார்கள்.

வெறியாட்டு எடுக்குமிடத்தில் கடப்ப மரம் நிற்கும். அதன் அடிப்பாகத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக மாலைகள் போடப்படும். முருகனை வணங்கும் அவ்விடத்திற்கு வெறியாடு களம் என்று பெயர். பலி கொடுப்பதால் அவ்விடம் குருதிக் கறை பட்டுக் காட்சியளிக்கும்.

அன்று, ஊர்கள்தோறும் திருவிழாக்கள் அடிக்கடி கொண்டாடப்படும் ஆடுகள மகளிர் விழா நாட்களில் விழாக்களங்களில், மூங்கில்களுக்கு இடையே கட்டிய கயிற்றில் ஏறித் தாளத்திற்கு ஏற்பத் தளர்ந்து தளர்ந்து ஆடுவார்கள், விழாக் களக்களில் செந்நிறக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும். திருவிழாக்களுக்கு வரும் விருந்தினர்களுக்குப் பெரிய மிடாவிலே சோறு வடிப்பார்கள்.

ஞாயிறு ஏழு குதிரை பூட்டிய தேரில் வருவதாக எண்ணினார்கள். மயில் தெய்வம் ஏறி நடுங்குமெனவும்; பாம்பு மாலை நேரம் ஆனதும் மாணிக்கத்தை உமிழ்ந்து வைத்து அவ்வொளியில் இரை தேடுமெனவும்; பேய் இருக்கிறது எனவும் நம்பினார்கள்.

சொல்லை உறுதிப் படுத்திப் பிறரை நம்ப வைப்பதற்காக ஆணையிடுவதுண்டு அல்லவா? இவ்வாறு கடவுள் மீது ஆணையிட்டுக் கூறுவதைத் தொல்காப்பியர் 'முன்தேற்று' என்பார். இங்கு தலைவன் முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கிப் பாதுகாவலான வஞ்சின மொழியை வாய்மையாகச் சொல்லித் தலைவியைத் தேற்றுகிறான். இதனை மேலும் உறுதிப்படுத்த அழகிய தெளிந்த இனிய அருவிநீரைக் குடித்துச் சூள் உரைக்கின்றான். இங்ஙனம் செய்பவர் பொய்க்க மாட்டார் என்பது பழங்கால நம்பிக்கையாகும்.

**ஒப்பனை வகை**

பெண்கள் அருவியிலும் சுனையிலும் நீராடுவர். கூந்தலைப் பிழிந்து உலர்த்தி அதனை ஐந்து வகையாகப் பின்னிக் கொள்வர். பல்வேறு பூக்களைத் தொடுத்துச் சூடிக் கொள்வர். கொய்த தழையாலான உடையை அடிவயிற்றில் அணிந்து கொள்வர். அழகிய வளையல்களை நிரல்பட அணிவது அவர்தம் இயல்பாகும்.

ஆடவர்கள் எண்ணெய் கலந்த நெளி உண்டாக வளர்க்கின்ற மணம்மிக்க கரிய குளிர்ந்த மயிர்ச்சந்தனத்தைத் தலைமுடியிலே பூசிக் கொண்டு குளிப்பார்கள். பின்பு, அம்முடியை விரலாலே உலர்த்தி, கரிய அகிற் புகையை ஊட்டுவார்கள் இங்ஙனம் நெய்ப்புக் கலந்த முடியில் அழகிய வண்டுகள் யாழிசை போல ஆரவாரிக்கும், பல்வேறு மலர்களை ஆராய்ந்து தொடுத்த மாலை, வெண் தாழை மடலாலே ஆனகண்ணி, பிச்சிப்பூக்களைக் கட்டிய வடம் போன்றவற்றைத் தலையில் அணிந்து கொள்வார்கள். காதில் அசோகந் தளிரைச் செருகிக் கொள்வதுண்டு. அது தோளில் கிடந்து அசையும். மார்பில் சந்தனத்தை மிகுதியாகப் பூசிக்கொள்வார்கள். மணம் மிக்க மாலைகளையும் அணிகலன்களையும் பூணுவார்கள் நுண்ணிய வேலைப்பாடு அமைந்த கச்சையை நன்கு, நெகிழ்வு இல்லாதவாறு கட்டியிருப்பார்கள்; அடியெடுத்து வைக்கும் பொழுதெல்லாம் அசைந்து அசைந்து அவை ஒலிசெய்யும்.

இங்ஙனம் தலைவி, தலைவன் ஒப்பனை முறைகளைக் கூறுவதன் மூலம் அக்கால மகளிர், ஆடவர்களின் புனைவு முறைகளையும் பூச்சூடும் அழகையும் கபிலர் புலப்படுத்தியுள்ளார்.

**நாகரிகம்**

திருவிழாக் காலத்துப் பலருக்கும் விருந்து வைப்பது போலச் செல்வர்கள் வீட்டில் நாள்தோறும் பெரிய மிடாவில் சோறு வடிப்பார்கள். அவர்கள் வீட்டுக்கதவு

எப்பொழுதும் வருபவர்க்கெல்லாம் திறந்திருக்கும். குற்ற மற்ற சான்றோர்கள், சுற்றத்துடன் வந்து நெய்யூற்றிய சோற்றை இறைச்சியுடன் உண்ணுமாறு படைப்பார்கள். தேனில் முற்றிய பலாச்சுளையையும், இனிய மாங்கனி-யையும் போட்டுப் பலநாள் ஊறவைத்த மதுவைப் பருகும் பழக்கம் அன்று இருந்தது.

வேந்தர்களிடையே தோன்றிய பகைமையைத் தணிக்கச் சான்றோர்கள் தூது செல்வதுண்டு. வேந்தன் சினம் கொண்டுவிட்டால் அவனுடைய படை பகைமீது விரைந்து பாயும். அவ் வேந்தனின் படைவீரர்கள், பகைவர்கள் எவ்வளவு வலிமை மிக்கவர்களாயினும் புறமுதுகு காட்டி ஓடவைப்பார்கள்.

முத்துக்களையும் மணிகளையும் பொன்னிலே பதித்துப் பல்வேறு வகையான அணிகலன்களைச் செய்வார்கள். அவற்றைச் செய்யவும் செப்பனிடவும் வல்ல தொழிலறிஞர்கள் பலர் அன்று இருந்தார்கள். நாணில் பொருத்துவதற்கு ஏற்ப அம்பின் பின்பகுதி சிறுபிளவாக இருக்கும்; அதற்கு 'உடு' என்று பெயர். பருத்து அகன்ற கைகளில் கட்டமைந்த வில்லை எந்திக்கொண்டு அம்புகளை ஆராய்ந்தபடி ஆடவர்கள் வருவதே தனிஅழகாக இருக்கும். ஒவ்வோர் ஊரிலும், புகுமிடத்தே தலைவாயிலில் நீருண்ணும் துறைகள்-ஊருணிகள் இருக்கும். இரவு முழுதும் காவலாளர்கள் விழித்துக்கொண்டு ஊரைச் சுற்றிவந்து காப்பார்கள் வேட்டையாடுவோரும், காவலர்களும் நாய்களை வளர்த்துத் துணைக்கு அழைத்துச் செல்லுவார்கள்.

மென்மை மிக்க வெண்மையான துகில் ஆடையும், அடுத்து காட்டும் ஆடியும் போன்ற நாகரிகப் பொருள்களை அன்று பயன்படுத்தினர்.

கலைகள் பல அன்று சிறந்து விளங்கின. நாட்டியமாடுவதில் வல்ல பெண்கள் ஆடுகள மகளிர் எனப் பட்டனர். யாழ் வாசிப்பதிலே வல்லவர்கள் பாணர்கள்

ஆவார்கள். பாலை யாழ் முதலிய யாழ் வகைகளையும், நைவளம் என்னும் நட்டராகம் முதலிய பண்வகைகளையும் கண்டு அறிந்து போற்றி வந்தார்கள். கோவலர்கள் ஆம்பல்குழலை வைத்து இன்னிசை எழுப்புவார்கள். கொம்பு இசைப்பதும் முரசு அதிர்வதும் இனிய ஓசைகளாகும். நடனத்திற்குப் பின்னணியாகப் பல வாத்தியங்கள் முழங்கும்; அவற்றுக்கு 'இன்னியம்' என்று பெயர். அவை ஒன்றாகக்கூடி இசைப்பது 'அரிக்கூட்டு இன்னியம்' (193) என அழகாகக் கூறப்படுகிறது. ஊர் வாயிலில் எப்பொழுதும் 'முழவு' அதிர்ந்து கொண்டிருக்கும்.

செல்வ வள மிக்க பெரிய மனைகள் பல விளங்கின, பெரிய பல தேர்களும் அக்காலத்தே ஊர்திகளாக வழங்கின.

**திருக்குறள் ஒப்புமை**

'ஆற்றின் வாரார் ஆயினும்' (23) என்ற இடத்து ஆற்றின் என்பது அறவழியைக் குறிக்கும்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்

என்ற சொல்லாட்சியுடன் இது ஒப்பு நோக்கத் தக்கது, திருக்குறளில் 'ஆற்றின்', எனத் தனித்து வரும் இடங்களிலும் அறவழி என்றே பொருள்படுகின்றது. (ஆறு-அறவழி)

'விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை நின்னோடு உண்டலும் புரைவது' (206-7) என்ற அடிகள்,

''வித்தும் இடல்வேண்டும் கொல்லோ, விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'',

என்ற குறளை அடியொற்றி நினைப்பூட்டுகின்றன.

இக் குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் உள்ள தனிப் பாட்டு, இதன் முழுப் பயனையும் விளக்குகிறது. இப்

பாட்டு. குறிஞ்சிப் பாட்டைக் கற்றுணர்ந்தவரால் பாடப் பெற்றது போலத் தோற்றுகிறது.

''ஆற்றல் சால் கேள்வி அறம்பொருள் இன்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே—தேற்ற
மறையோர் மணம் எட்டின் ஐந்தாம் மணத்தின்
குறையாக் குறிஞ்சிக் குணம்''

குறிஞ்சிப் பாட்டு அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள்களையும் போற்றிப் புனைந்து கூறுகிறது; மேலும், மறையோர்தம் எட்டுவகை மணங்களில் ஐந்தாவதாகிய கந்தருவ மணத்தைவிடச் சிறிதும் குறையாத சிறப்புடையது, தமிழர் தம் களவு மணம் என்பதை இப் பெரும் பாட்டு நிலை நிறுத்துகிறது. இவையே இப் பெருங்குறிஞ்சியின் பொருளும் பயனுமாகும்.

# 7. உளவியலும் உலகியலும்

மேலைநாட்டு இலக்கியக் கொள்கைகள் பல அந் நாட்டு மரபு அடிப்படையின. அங்கு படிமக் கோட்பாடு (Symbolism), உருக்காட்சிக் கொள்கை (Imagistm), இயல்பியல் (Naturalism), நடப்பியல் (Realism) என எத்தனையோ இயல்கள் அல்லது 'இசங்கள்' பற்றிப் பேசுவர். நம் நாட்டு இலக்கியக் கோட்பாடுகள் பல, நம் மரபு வழிப்பட்டன. உள்ளுறை, இறைச்சி, மெய்ப் பாடு, நோக்கு, வண்ணம், வனப்பு என்றுற்போல்வன. இவற்றை மேலைநாட்டு இலக்கியங்களில் வைத்தும், மேலைநாட்டுக் கொள்கைகளை நம் இலக்கியங்களில் வைத்தும் பொருத்திப் பார்த்தால், பொது வகையால் ஒத்தும் சிறப்பு வகையால் வேறுபட்டும் காணப்படும். இலக்கியங்களும் இலக்கியக் கொள்கைகளும் உலகப் பொதுவாயினும், அவ்வந்நாட்டுத் தட்பவெப்பங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வகைகளாகத் தழைத்து வளரும் பயிரினமும் உயிரினமும் போல நாட்டுக்கு நாடு – மொழிக்கு மொழி இவை வேறுபடவும் காண்கிறோம்.

எடுத்துக் காட்டிற்கு 'நடப்பியல்' என்பதைப் பார்ப் போம். மேலைநாட்டில் சிலர் பாலுணர்வு தழுவிப் பச்சை யாக எழுதப்படுவனவற்றையே நடப்பியல் எனப் பேசு கின்றனர். மற்றும் சிலரோ கம்யூனிச அடிப்படையில் சமுதாயப் பார்வையை வெளிப்படுத்தினுல் மட்டும் நடப் பியல் என ஏற்கின்றனர். நாம் கண்ணுக்கெதிரே நடப்பன வற்றை விட்டுவிட்டுக் கற்பனையில் மிதக்காமல் கண்ணுற் காண்பனவற்றையும் காதாற் கேட்பனவற்றையும் புனை வனவே நடப்பியலமைந்தன என்று நம்புகிதரும். தன்மை யணி போல உள்ளதை உள்ளபடி கூறுவன நமக்கு நடப் பியலாகத் தோன்றுகின்றன. மேலை நாட்டுச் சார்பு

மிகவுடையார், இதனைக் குறிக்கோளியல் (Idealism) அல்லது இயல்பியல் (Naturalism) எனலாமே தவிர, நடப்பியல் எனல் இயலாது என்கின்றனர். எங்ஙனமாயினும் உளவியலும் உலகியலும் ஒருங்கமைந்தனவும் உள்ளதை உள்ளபடி கூறுவனவும் சமுதாய நோக்குடையனவுமே 'நடப்பியல்' என்று இங்கு வரையறுக்க வேண்டியிருக்கிறது. நம் மரபை அறியாமல், நம் இலக்கியங்களைக் கற்காமல், பிற இலக்கியங்களை மட்டுமே கற்றுப் பிற மரபுகளை மட்டுமே அறிந்து போற்றுபவர்கள் தான் இங்குக் காலூன்ற முடியாமல் தடுமாறுகிறார்கள். அவர்களுடைய இலக்கிய ஆய்வுகள், இங்கு உலர்ந்து கொட்டுகின்றனவே தவிர, ஒன்றி வளர்ந்தில.

**உலகியல் வழக்கு**

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் '

என்பது தொல்காப்பியம். புலன் நெறி வழக்கம் என்பது புலவர்கள் தொன்றுதொட்டு, நூல்களில் பின்பற்றி வரும் மரபு வழியான வழக்காறாகும். இதில் 'உலகியல் வழக்கு' என்பது. உலகியலிலிருந்து எடுக்கப்பட்ட வழக்காற்றைக் குறிக்கும். அதைக் கற்பனை செய்து பாடும் புனைவியல் முறையையே நாடக வழக்கு என்று நம் முன்னோர் குறிப்பிட்டனர். சிறுகதை முதல் காப்பியம் வரை இவற்றின் இணைவால் உருவாவனவேயாம். தமிழர் வகுத்த இவ் இலக்கியக் கொள்கை மிக நுட்பமானது. 'உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றொடு ஒத்து வருவது' என்பது இளம்பூரணரின் விளக்கம். உலகில் நடந்ததை எழுதுவதா? நடக்கக்கூடியதை எழுதுவதா? 'நடப்பியல்' என்பதனால். அது நாளிதழில் வரும் செய்தி போல் இருக்க வேண்டுமா? இவ்வாறு பல வினாக்கள் எழுகின்றன. ஒரு படைப்பின் அடிக்கருத்து, உலகத்தார் ஒழுகலாற்றுடன்

ஒத்து வருமானால், உலக வழக்குப்போலக் காணப்படு மானால் அதனை நாம் 'உலகியல் வழக்கு' எனலாம். இவ் வகையில் நடப்பியல் என்பதன் ஒரு கூறாக உலகியலையும் மற்றொரு கூறாக உளவியலையும் கொள்ளுதல் தகும்.

பிறிதொரு வகையாகக் கூறினால் உளவியலும் உலகியலும் ஒருங்கிணைந்து அமைவதுதான் நடப்பியல் எனலாம். எந்தக் கலைப்படைப்பும் உளவியலில்தான் பிறக்கிறது உலகியலையே தன் உடலாகக் கொண்டு அமைகிறது. அதன் அடிக்கருத்து (Theme) நாம் உலகத் தில் கண்டதும் கேட்டதும் போல இருக்கிறது. அதில் கூறப்படும் அனுபவம் நம் அனுபவத்திற்கு முற்றிலும் ஒத்து வருகிறது. சங்க இலக்கியத்தில் எப் பாடலை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இப்பண்புகள் பொருந்தி வருவதைக்காணலாம். தாயின் துயர், மகளின் பண்பு, தலைவன் நிலை, தோழி திறன் எல்லாம் நடப்பியலோடு பின்னிப் புனையப்பட்டிருக்கும் குறிஞ்சிப் பாட்டு சுவை பயந்து நம் உள்ளத்தை ஈர்க்கிறது. இந்நெடும் பாடலின் தலைமை மாந்தர்களாகிய தாய், மகள், தலைவன், தோழி என்ற நால்வரும் உலகியலுக்கேற்பவும் உளவி யற்படியும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இதில் வரும் வேட்டைநாய், மதங்கொண்ட யானை போன்றவற்றின் புனைவுகள் கூட அப்படியப்படியே, உள்ளதை உள்ளது போல் காட்டும் திறனுடையன.

**உளவியல்**

பாடலில் இடம்பெறும் கருத்தும் பாட்டமைப்பும் பயன் படுத்தும் உத்திகளும் உளவியலின்படி அமைதல் வேண் டும். இன்றேல் அப்பாட்டுக் காலம் கடந்தும் நிலைபெறு தல் இயலாது. மனித இனம் அன்றும் இன்றும் ஒன்று போலவே உளது. அவ் இனத்தின் உளவியல்பும் என்றும் ஒரு தன்மையானதேயாம். எனவே, அதன்படி அமையும் படைப்புக்கள் என்றென்றும் சுவைபயப்பனவாய் உள்ளன.

நம் வாழ்க்கை அனுபவங்களே இவ் உளவியலின் வெளிப்பாடுகளாம். தோய்ந்து அனுபவிப்பன மனத்தோடு

ஒன்றிக் கலந்துவிடுகின்றன. பிறகு அவை வெளிப்படும் போழ்து, அதே அனுபவத்தைத் தர முயல்கின்றன. இவ்வாறு அவை உளவியலமைப்பைத் தாமே உடையனவாய்ப் பல்கிப் பெருகுகின்றன. இதற்காக ஒவ்வொரு படைப்பாளியும் உளவியலைத் தனியே கற்பதில்லை; வேண்டுமென்று புகுத்திப் பாடுவதில்லை.

தலைவன் பிரிந்து பல நாள்களாகி விட்டன. 'அவன் எப்போது வருவான் வருவான்' என்று தலைவி வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்தபடி இருந்தாள். அவள் ஏக்கமுற்று, வாடி, மெலிந்து, நைந்து நாடி நின்றாள். எதிர்பாராமல் ஒரு நாள் பாணன் அவள் எதிரே வந்து 'தலைவன் வருகிறான்' என்று கூறினன். அவளால் இதை நம்ப முடியவில்லை. கரைகடந்த மகிழ்ச்சி வெள்ளம் பெருகியது. அவள், 'பாணனே! தலைவன் வருவதாகக் கூறுகிறாயே! நீயே கண்ணுற்ற கண்டாயா? அல்லது யாரும் சொல்லிக் கேள்விப்பட்டாயா? உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், சொல்!'', என்று முதலிற் கேட்கின்றாள். பல நாள்கள் அவன் வருவதாய்க் கேள்விப்பட்டு ஏமாற்ற முற்றதனுலும், அவனுடைய தேரோசையோ என்று காண ஓடிப் பிறர்வரக்கண்டு வருந்தித் திரும்பியதாலும் அவள் இவ்வாறு தன் ஐயத்தைப் போக்கிக் கொள்ள அவாவுகிறாள்.

தேர்வு முடிவு பற்றி அறிய ஆவலுடன் இருக்கும் ஒருவரிடம் நாம் சென்று, 'உன் எண்ணை வெற்றிப் பட்டியலில் பார்த்தேன், நீ தேர்ந்து விட்டாய்!'' எனக் கூறுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள் உடனே அவர் என்ன கேட்பார்? ''நீங்கள் சொல்வது உண்மைதானா? என்னுடைய எண்ணைத்தான் பார்த்தீர்களா? சரியாகப் பார்த்தீர்களா? தமிழ் இதழில் பார்த்தீர்களா? ஆங்கில இதழிற் கண்டீர்களா? நீங்களே எண்ணைப் பார்த்தீர்களா? யாரும் சொல்லிக் கேட்டீர்களா?'' என்றெல்லாம் அவர் பன்னிப்பன்னி வினவுவாரன்றோ? இதே மனநிலைதான் தலைவிக்கும் இருந்தது.

அடுத்து. வெற்றிச் செய்தியைச் சொன்னவருக்கு ஏதேனும் இனிப்புக் கொடுக்கத் தோன்றும். அந்த மன மகிழ்ச்சியில், 'சொன்னவருக்கு என்ன பரிசு வேண்டு மானாலும் கொடுத்துவிடலாம்' என்று தான் மனம் துள்ளும். கொடுக்கக்கூடியது சிறிதேயாயினும் கொடுக்க நினைப்பது எல்லையற்றதாய் இருக்கும். இதுவும் அந்நிலை யில் ஏற்படும் ஒரு மன எழுச்சியாகும். இதோ அத் தலைவி பாணனிடம் பேசுகிறாள், கேளுங்கள் :

''நீ கண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ?
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ!
வெண் கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே?'' (குறு. 75)

''நீ பார்த்தாயா? யாரும் பார்த்தவர்கள் கூறக் கேட் டாயா? அவர் வருவது உண்மைதானா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள விழைகிறேன் கூறுவாயாக! யார் வாய்மொழி மூலம் நீ காதலர் வரவைக் கேள்விப்பட் டாய்? எனக்கு இந் நற்செய்தியைக் கூறிய நீ, வெண் தந்தங்களையுடைய யானைகள் குளிக்கும் சோணையாற்றங் கரையிலே விளங்கும் பொன் நிறைந்த பாடலி புத்திரத்தையே பரிசிலாகப் பெறுவாயாக!'' என்று படு மரத்து மோசிகீரனார் புனைந்துள்ளார். முற் காட்டிய இரண்டு மனநிலைகளையே இப்பாடலிற் காண்கிறோம். ஒன்று தன் வெற்றி மகிழ்ச்சிக்குக் காரணமாகத் தலை வனது வருகையை உறுதிப்படுத்திக் கொள்ள விரையும் உள்ளம் இரண்டு நற்செய்தி கூறியவருக்குச் செல்வப் பரிசிலை அள்ளிக் கொடுக்க முந்தும் மனம் இவையிரண் டும் அடிப்படை மனநிலைகள். தலைவி விளையாட்டுப் போக்கில் பாடலிபுத்திரத்தையே பரிசிலாக நீட்டுகிறாள். அதைக் கொடுக்க இவள் யார்? 'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதா?' தலைவியின் மன நிலை அப்படி இருக்கிறது. உள்ளம் மகிழ்ச்சியாக

துள்ளிக் குதிக்கிற தென்பதையும் மிகவும் நெகிழ்ந்த நிலையில் எதையும் பரிசாகக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிற தென்பதையும் காட்டுகிறது இக்கூற்று. அம்மகிழ்ச்சியின் எல்லையற்ற பெருக்கைக் காட்டவே, பரிசிலை இவ்வளவு உயர்த்துக் கூறுகிறார் ஆசிரியர். பலர் உணர்ச்சிப் பெருக்கில் 'உடல் பொருள் ஆவியை எல்லாம் ஒரு சேரக் கொடுப்பதாகக்' கூறுவதில்லையா? 'என் உயிரே' என்று கொஞ்சுவதில்லையா? அவை எல்லாம் அப்படியப்படியே உண்மை என்று கூறமுடியுமா? மனநிலையைக் காட்டுவனவே அவைகள்.

இப்பாடலில் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வோரசையும் உளவியற் பாங்குடனும் உலகியல் தன்மையுடனும் அமைந்துள்ளன. இதைத் தவிர இதில் வேறு என்ன இருக்கிறது? ஓர் ஐந்துவரிப் பாடல் நம் உள்ளத்தை ஈர்த்து, உவகைச் சுவையின் உச்சத்தைக் காட்டுவதன் அடிப்படை என்ன? முதல் கேள்வியே, 'நீ கண்டாயா? யாரும் கண்டவர் சொன்னதைக் கேட்டாயா?' என்பது தான். 'கண்ணாற் கண்டதும் பொய்; காதாற் கேட்டதும் பொய் தீர விசாரித்து அறிவதே மெய்' என்பது உலகப் பழமொழி அதனால்தான் தலைவி அவ்வாறு கேட்கிறாள். நாளைக்கு, அப் பாணனே. "நான் என்னம்மா செய்வேன். யாரோ சொன்னார்கள் என்று கூறினேன். அது பொய்யாய்ப் போனால், அதற்கு நானென்ன செய்வது?" என்று நழுவிவிடலாம் அல்லவா? மேலும் இந்த மாதிரியான சமயங்களில் நம் உள்ளம் 'பெற்றமகிழ்ச்சி நிலைக்குமா? கிடைத்தவெற்றி உறுதியா?' என்பதையே முதலில் நாடும்; பெற்றதைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே உள்ளம் ஊன்றி நிற்கும்.

'ஒன்று தெளிய நசையினம்' — ஒரு விருப்பம் எமக்கு அது என்னவென்றால் 'நேரில் பார்த்தாயா, கேள்விப் பட்டாயா? இரண்டிலொன்று தெளிய வேண்டும். உண்மையா, பொய்யா என்பதை நன்கு அறியவேண்

ும். என் மகிழ்ச்சி இத்தனை நாளாய்க் கானல்நீராகப் போனது போல், இன்று போய்விடுமா? அல்லது உள்ளங் குளிரும் நன்னீராக உவகை தருமா என்பதை யான் அறிய வேண்டும்.' -இவ்வாறு ஓடும், தலைவியின் மனநிலையை இவ் அடி படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த ஆர்வத்தி னால் 'கொஞ்சம் சொல்லேன்' மொழிமோ என்று கெஞ்சிக் கேட்கிறாள் தலைவி. மோ, என்பது முன்னிலை அசை என்பார்கள். அது இலக்கணம். உலகியலிலும் சொல்லு. சொல்லமாட்டாயா, சொல்லுயே, கொஞ்சம் சொல்லேன்' என்பனவற்றிற்கு ஒரே பொருள்தான் என்றாலும், அவற்றிடையே உணர்ச்சி வெளிப்பாட்டில் வேறுபாடுகள் புலனாகின்றன அல்லவா? அது போன்றது தான் 'மொழிமோ' என்பதும். ஆணையிடாமல், கெஞ்சிக் கேட்கும் ஆர்வநிலையை 'மோ' புலப்படுத்துகிறது.

'யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே?' என்று கேட் கிறாள், தலைவி. காரணம் என்னவெனில், அங்ஙனம் சொன்னவரை வைத்து நாம் வன்மை, மென்மை தெளிய லாம்; உண்மை, பொய்ம்மை அறியலாம். எனவேதான் சொன்ன செய்தியைவிட, அச் செய்தியைச் சொல்லி யவர் யார் என்பதிலே முதன்மையான நாட்டம் கொள் கிறாள் தலைவி.

பாணனுக்கு இந் நற்செய்தியைச் சொன்னதற்காக அவள் தரும் பரிசிலும் எத்தகையதென்பது முன்பே விளக்கப்பட்டது. அக்காலத்தில் சேரனின் மாந்தை நகரம், சோழனின் காவிரிப்பூம் பட்டினம், நந்தர்களின் பாடலிபுத்திரம் போல்வன பொன் நிறைந்த, செல்வ வளம் மிக்க பெருநகரங்களாகத் திகழ்ந்தன. பட்டினப் பாலையில் தலைமகன், "பொய்யாச் சிறப்பிற் பட்டினமே பரிசிலாகக் கிடைத்தாலும், வயங்கிழை ஒழிய, வாரேன் நெஞ்சே!" என்று மனத்திற்குக் கூறிச் செலவழுங்கிய செய்தி கூறப்பட்டிருக்கிறது. அதுபோல இங்கு 'பாண! நீ பாடலி புத்திரத்தையே பரிசிலாகப் பெறுக!' என வாழ்த்துகிறாள். இக்குறுந் தொகைப் பாடலில்

தலைவியின் மனநிலை தான் இவ்வாறு அழகாகப் புனையப் பட்டிருக்கிறது. சங்கப் பாடல்கள் பெரும்பாலும் இவ் வாறு பல்வெறு மனநிலைகளின் படப்பிடிப்புக்களாகவே உள்ளன. குறிஞ்சிப் பாட்டும் இஃதுபோன்று உளவிய லும் உலகியலும் பொருந்த அமைந்த சிறந்த நாடகப் பாட்டு (Dramatic Lyric) அல்லது காப்பியப் பாட்டு (Epic Lyric) எனல் தகும்.

**தோழியின் திறன்**

இப் பாடலில் 'தோழி' என்ற நாடகமாந்தர் திறன் அறிந்து இன்புறற்பாலது தலைவிக்கும் தாய்க்குமிடையே அவள் ஓர் உணர்வுப் பாலமாக அமைந்து ஒற்றுமைப் படுத்துகிருள். தான் மூன்ருமவளாக இருந்தாலும், தலைவி யிடத்தில் நின்று, தலைவிக்காகச் சாதுரியமாக வாதமிடும் அவள்திறன் நிகரற்றது. 'அன்னய் வாழி, வேண்டு அன்னே!' என்பது குறிஞ்சிப் பாட்டுத் தொடக்கம். அன்னய் என்றும் அன்னே என்றும் இருமுறை அழைப்ப தன் காரணம் என்ன? ஒரு சிறு பையன் தாயிடம் ஓடி வந்து 'அம்மா அம்மா!' என்று கெஞ்சுங் குரலில் கூப்பிடு வானயின், அவன் பின்னர் ஏதோ கேட்கப்போகிருன் என்பதை அது காட்டும். அது போலவே தலைவியின் களவுக் காதலாகிய அரிய செய்தியை வெளியிடப்போகும் தோழி, செவிலித் தாயை முதலிலேயே மிக நயந்து கொள் வதற்காக, 'அம்மா அம்மா' எனக் கெஞ்சுவதுபோல் தொடங்குகிருள். பிறகு ஏதோ தாயின் மீது கரிசனம் உள்ளவள் போலவும், தாயின் வருத்தத்தைத் தீர்க்கவே முயல்பவள் போலவும் தோழி தன் பேச்சைத் தொடர் கின்ருள். 'எய்யா மையலையாய் நீயும் வருந்துகிருயே! உன் வருத்தத்தைத் தீர்ப்போம் என்று தான் நான் இப் பேச்சைத் தொடர்கின்றேன் அம்மா! எனக்குச் சுய நலமோ, ஆசையோ கிடையாது எல்லாம் உன் நன்மை கருதித்தான்' என்பது போல் அவள் பேசுவது அவளுடைய பணிவையும், தாயின் மீது கொண்ட அன்புடைமையையும் காட்டுகிறது. ஒரு சிறுமியிடமாயி

னும், 'நீ எவ்வளவு கெட்டிக்காரியாய் இருக்கின்றாய் சமர்த்து! ஐந்து காசுக்கு இதை வாங்கிவா' என்றால், அச் சிறுமி நமக்குச் செவி சாய்ப்பதுறுதி. கடிதங்களில் 'தங்கள் நலன் அறிய அவா' என்றோ, 'தங்கள் குடும்ப நலத்திற்கு எழுதுக' என்றோ குறிப்பிடுகிறோமே, ஏன்? பிறர்பால் நாம் பரிவுடையவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளாவிட்டால், அவர்கள் நம் பேச்சுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். இது உலகியல் மட்டுமன்று; அடிப்படையான உளவியலும் கூட.

'தாயே நீயும் வருந்துகிறாய், இவளும் தேம்புகிறாள். உங்கள் இருவரையும் பார்த்தால் எனக்கு அழுகை அழுகையாக வருகிறது இதைத் தடுத்துக் குடும்பத்தில் அமைதியை நிலை நாட்டவே நான் இதைச் சொல்லப் போகிறேன்' என்ற தோழியின் தொடக்கவுரை, இந் நெடும்பாட்டிற்குச் சிறப்புத் தருவதாய் உளது.

அடுத்துச் சொல்லவந்த செய்திக்கு உடனே வந்து விடுகிறாள் தோழி. ''இவள் திருமணத்தைப பெரியவர்களாகிய நீங்கள் நிச்சயித்திருக்க வேண்டும். அதற்கு எதிராக நாங்கள் நிச்சயித்து விட்டோம். அது எப்படி நேர்ந்தது என்பதைச் சொல்லப்போகின்றேன். கோபமின்றிக் கேட்பாயாக!'' என்று அவள் சொன்னபோது, தாய் எவ்வளவு கடுகடுத்திருப்பாள். அவள் முகம் எப்படி இருந்திருக்கும்? அவள் முகத்தைப் பார்த்துப் பேசும் தோழி 'செப்பல் ஆன்றிசின்! சினவாதீமோ!' என்றாள். அதன் பிறகு தருக்க வாதம் போலத் தோழி தொடர்ந்து பேசிச் செல்கிறாள். தாய் எதுவும் இடை மறுத்துப் பேச முடியாதபடி, அவள் பேச்சு அமைந்து செல்கிறது 'தினை முற்றிவிட்டது. தினைப்புனம்காக்கப் புறப்படுங்கள் என்று அன்று ஒருநாள் எங்களை அனுப்பினாய் அல்லவா? அதில் வந்த வம்புதான் அம்மா எல்லாம்!' என்று பழியைத் தாயின் மேலேயே தூக்கிப்போட்டு, அவளை வாயடைத்துப் போகச் செய்து விடுகிறாள் தோழி! ''நல்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி எல்பட வருதியர் என நீ விடுத்

தலின்'' நாங்கள் சென்றோம். ''அவ்வாறு அன்று நீ எங்களை அனுப்பியிராவிட்டால், எங்கள் தலைவிதிக்குக் காரணமான இவையெல்லாம் நடை பெற்றிரா'', என்று கூறியதனால். இது யார் குற்றமும் அன்று—முன்னைய ஊழின் குற்றமே எனத்தாயை மறுப்பிற்கு இடமின்றி உணர வைக்கின்றாள், தோழி!. இக் கருத்தைக் குறிஞ்சிப் பாட்டின் இறுதியில் உள்ள தனிப்பாட்டு ஒன்றும் மிக நன்றாக விளக்கி நிற்கிறது.

நின்குற்றம் இல்லை;
    நிரைதொடியும் பண்புடையள்;
என்குற்றம் யானும்
    உணர்கலேன் - பொன்குற்று
அருவி கொழிக்கும்
    அணிமலை நாடன்
தெரியுங்கால் தீயது
    இலன்!

எனவே, யார் குற்றமும் இல்லையென்பதால் இது தலைவிதியின் குற்றமே என்று உணர வைக்கப்படுகிறதல்லவா? மேலும் தாய் தோழியைப் பார்த்து ''யான் அனுப்பி வைத்தது உண்மைதான்? அதற்காக நீங்கள் நான் கொடுத்த வேலையை விட்டு விட்டுக் காதல் நாடகமா ஆடினீர்கள்?'' என்று கடியக் கூடுமல்லவா? அதற்கு விடையிறுப்பாள் போலத் தோழி. ஒன்றல்ல இரண்டல்ல, ''தழலும் தட்டையும் குளிநம் போன்ற பல கிளிகடி கருவிகளைப் பயன்படுத்தி ,நாங்கள் எங்கள் கடமையைச் செய்து கொண்டு தான் இருந்தோம்,'' என்று உறுதிப்படுத்துகிறாள். அங்ஙனமாயின் ''நீராடிப் பூச்சூடி மகிழ்ந்திருந்ததென்ன?'' என்று. பின்கதையை அறிந்ததும் தாய்கேட்பாள் என்பதனால், முன் கூட்டியே தோழி 'உரவுக் கதிர் தெறூஉம் உருப்பவிர் அமயம்' ஆகிய வெயிலின் கொடுமையையும், அப்போது பெரு மழை பொழிந்ததால் அதில் நனைந்து விட்ட தாங்கள்,

பெருகி வரும் அருவியில் நீராடியதையும் நீராடிய பின் மலர்களைக் குவித்த செய்தியையும் கூறுகிறாள். இவை அனைத்தையும் தினைப்புனம் காக்கும் கடமைக்கு ஊறின்றியே செய்ததாக விளக்கும் வகையில் "விசும்பு ஆடு பறவை வீழ்பதிப் படர" மழைமேகம் திரண்டது என்று தோழி கூறுகிறாள். மழை வருகிற அறிகுறி கண்டதுமே, பறவைகள் எல்லாம் தாங்கள் தங்கள் கூடுகள் நோக்கி விரைந்தன. எனவே தினைப்புனம் காக்கும் அலுவல் குறைந்தது. அதனால் 'தவிர்வுஇல் வேட்கையேம் தண்டாது ஆடினேம்' என்று தாங்கள் நீராடியதைப் பற்றித் தோழி கூறுகிறாள். தன் கருத்தைச் சொல்லி முடிக்கும் பொழுதும் தோழி தலைவன் வருகிற வழியில் உள்ள துயரங்களை எல்லாம் அடுக்குகின்றாள்.

"கங்குல்

அளைச்செறி உழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட்டு ஆமான் புகல்வியும் களிறும்
வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து
உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்கிருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழ் அடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடையவால் எனவே"

தலைவன் வரும் வழியில் தான் எத்தனை இடர்ப்பாடுகள்? அத்தனையையும் கடந்து அவன் வருவதால், இவள் 'தலைவனுக்கு யாதாகுமோ' என்று நினைக்கும் தோறும் அழுகின்றாள். இவ்வாறு முடிபதும் உளநூன் முறைப்படி அமைந்ததாய் இருப்பது கருதத்தக்கது. 'இத்தகைய தலைமகனுக்கே தலைவியைத் திருமணம் செய்துவை' என்று முடித்திருந்தால் தாய்க்கு எதிருணர்வு தோன்றி அவள் மறுத்து விடக்கூடும். அல்லது தோழி கூறியன அனைத்தும் அவர்கள் திட்டமிட்டுச் செய்தன என்றோ, திட்டமிட்டுக் கூறிய பொய்கள் என்றோ நினைத்து

விடக்கூடும். எனவே தாயே முடிவு செய்யுமாறு. நிகழ்ச்சிகளைக்கூறி முடித்துவிட்ட இம்முறையில் உளவியற் பாங்கு மேலோங்கி நிற்கிறது.

**தலைவியின் பண்பு**

தலைவி பண்பு நலன் மிக்கவளாகக் காட்சி தருகின்றாள். மானமர் நோக்கியாகிய அவள் அழகுகெட்டுத் தோள் நெகிழ்ந்து, வளையல் கழன்று வாடுகின்றாள். தலைவன் பிரிவு அவளை வாட்டுகின்றது. தோழி மிகவும் வற்புறுத்திக் கேட்ட பிற்பாடுதான், தலைவி தன் காதலை வெளிப்படுத்துகிறாள். அப்போது அவள் கூற்றாக வருகிற வாசகங்கள் என்றும் நினைவு கூர்தற்குரியன. முத்தும் மணியும் பொன்னும் ஆகியவற்றால் ஆன அணிகலன்கள் கெட்டுவிட்டால், அவற்றை மீண்டும் புணர்த்துப் பழுது பார்த்துக் கொள்ளலாம். ஆனால் சால்பும் வியப்பும் இயல்பும் (சான்றாண்மையும் பெருமையும் ஒழுக்கமும்) கெட்டால், களங்கத்தைக் களைந்து பழைய நிலையில் நிறுத்துதல் என்பது யாராலும் இயலாது. தந்தையின் காவலைக் கடந்து, களவு மணம் கொண்டது பற்றி வருந்தும் தலைவி, தன்னைத் தலைவனைத் தவிர வேறு யாருக்கும் கொடுத்தால், தன் கற்புநிலை கெட்டு விடுமே எனக் கலுழ்கின்றாள். 'ஒருக்கால் இப்பிறவியில் தான் தலைவனோடு கூடி வாழும் இல்லற வாழ்வு வாய்க்க வில்லையென்றால், மறுபிறவியிலேனும் வாய்க்கும்' என்று கூறுகின்ற தலைவியின் பேச்சுக் கருதத்தக்கது. அதன் உட்கருத்துத் தன் கற்புக்குப் பங்கம் நேருமேல் தலைவி தன் உயிரை விட்டுவிடவும் ஆயத்தமாக இருக்கிறாள் என்பதாகும். பொன்னின் மேல் பதிக்கப்பட்டமணி போலத் தோழி கூற்றினுள்ளே கீழ் வரும் தலைவி கூற்றுப் பதித்துவைக்கப்பட்டிருக்கிறது.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலம்கெடின் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்

ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னுர் தொல்மருங்கு அறிஞர்
மாதரும் மடனும் ஒராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி,
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம்அறி வுறுலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரார் ஆயினும், ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு!''

தலைவியும் தோழியும் பூக்களைத் தேடித் தொகுத்த தில், அவர்களின் அழகுணர்ச்சியும் ஆர்வமும் புலனு கின்றன. அழகிய தழையுடை, வண்ணமலர்க் கண்ணி கள் யாவும் அணிந்து கொண்டு தலைவியும் தோழியும் மரநிழலில் இருக்கும் காட்சி, வேட்டைநாய் எதிர்ப் பட்டவுடன் அவர்கள் மருண்டு மயங்கிய நிலை, மதங் கொண்ட யானையும் வரவே தலைவனை அடைந்து தெய்வம் ஏறிய மயிலைப் போல நடுங்கியமை, யானையைத் தலைவன் கணை தொடுத்து விரட்டிய பிறகும் இடிகரையில் நிற்கும் வாழைமரம் போல நடுங்கியமை, தலைவன் நாள் தோறும் வருகின்ற வழியிலுள்ள ஆபத்துக்களை எண்ணித் தலைவி அழுது மெலியும் பாங்கு அனைத்தும் அம் மகளின் அழகை யும் மென்மையையும் பண்பாட்டையும் காட்டுகின்றன.

**தலைவனின் நிலை**

தலைவனின் அழகும் பெருமையும் குறிஞ்சிப்பாட்டில் மிகவும் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளன. தலைவி, தலைவன் ஆகியவர்களை இலக்கியத்தில் எங்ஙனம் புனைய வேண்டும் என்பது பற்றித் தொல்காப்பியம் சில குறிப்புக்களைத் தரு கிறது.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'

பெருமையுடையவனாகவும் அறிவுடையவனாகவும் ஆண் மகனைப் படைக்க வேண்டும்.

'அச்சமும் நாணும் மடனும்முந் துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப' (1015)

பெண் மகளை அச்சம், நாணம், மடம் முதலியன எப்பொழுதும் உடையவளாகப் படைத்துக் காட்டவேண்டும். அச்சம் என்பது தன்கட் குறை நேராவாறு, எனறும் கண்ணும் கருத்துமாய்ப் பழி பாவங்களுக்கு அஞ்சி ஒழுகுதலைக் குறிக்கும். மடம் என்பது அறிந்தும் அறியாதாள் போல் இருத்தலைச் சுட்டும். பெரியோர் முன் தாம் எல்லாம் தெரிந்தவர் போல் காட்டிக் கொள்வது இளையவர்களுக்குத் தகாது. தெரிந்தும் தெரியாது போலிருத்தல், முந்திரிக் கொட்டை போல் எதற்கெடுத்தாலும் முந்தாமல் இருத்தல் மிகவுயர்ந்த பண்பாடல்லவா?

மேலும் தலைவியின் பண்பாடுகளாகத் தலைவனிடம் சென்று, வாயில்கள் கூறக் கூடியனவற்றையும் தொல் காப்பியம் பட்டியலிட்டுத் தருகிறது. இதிலிருந்து நாம் தலைவியர் தம் ஒழுக்க நிலைகளை உய்த்துணர்கிறோம்.

''கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய'' (1098)

கற்புடைமை. அன்புணர்ச்சியாகிய காமம், நன்னடத்தை எனப்படும் ஒழுக்கம், பொறுமையுடைமை, தீய நெறியில் மனத்தைச் செல்லவொட்டாது நிறுத்தும் நிறையுடைமை, விருந்து புறந்தருதலைக் கைவிடாத் தன்மை, சுற்றம் ஓம்புதல் இன்னன தலைவியின் பண்புகள் என்று தலைவனிடம் தூதுரைப்போர் எடுத்துச் சொல்லி. அவனைத் தலைவிபால் ஒற்றுமைப்படச் செய்வர்

தலைவி அதிகம் பேசாத மடப்பம் உடையவளாதலின், அவள் குறிப்பறிந்து பேசும் தலைவன் கூற்றிலிருந்துதான் தலைவனின் பெருமையையும் தலைவியின் பண்பு நலனையும் அறிகிறோம். அக்கால இளைஞர்கள்

தங்களை எவ்வாறு அழகு படுத்திக் கொண்டார்கள் என்பதைக் குறிஞ்சிப்பாட்டிலிருந்தே நாம் விளக்கமாக, விரிவாகத் தெரிந்து கொள்கிறோம். இன்று ஆடவரும் ஷாம்பூ தேய்த்துக் குளிப்பது போல் மயிர்ச் சந்தனம் பூசிக்குளித்து விட்டுத் தலைமுடியைச் சிக்கல் எடுக்கின்றான் தலைமகன். அக் குஞ்சிக்கு அகிற்புகை ஊட்டுகிறான். இது போன்ற தலைமகனது ஒப்பனை முறைகள் முன்னரும் விளக்கப்பட்டன

தலைவியிடம் அவன் 'மெல்லிய, இனிய, மேவரக் கிளந்து' பேசுகிற அழகு கருதத்தக்கது. மென்மையும் இனிமையும் உடைய சொற்களாகத் தேர்ந்தெடுத்துத் தலைவி விரும்பும்படியாகத் தலைவன் பேசுகிறானும். அவளுடைய அழகிய கூந்தலைப் பாராட்டிவிட்டு, 'என்னிடமிருந்து ஒரு விலங்கு இப்பக்கம் தப்பி வந்துவிட்டது. நீங்கள் கண்டீர்களா ?' என்று தலைவன் கேட்கிறான். தலைவியும் தோழியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்களே தவிர யாரும்பதில் சொல்வதாக இல்லை. இதனால் அவன் அயர்ந்து போகிறான். 'எம்மிடமிருந்து தப்பிய விலங்கை நீங்கள் காட்டிக் கொடுக்கவில்லை என்றாலும், என்னோடு வாய்விட்டுப்பேசுவது கூடப் பழியாகுமா ?' என்று கேட்டு, அவன் வருந்துகிறான். அச்சமயம் பார்த்து மதங்கொண்ட யானை பிளிறிக் கொண்டு, மழைக்காலத்து இடியோசை போலப் பேரிரைச்சலுடன், அவ் இடத்தை அணுகியது தலைவியும் தோழியும் அஞ்சி, நடுநடுங்கி, வியர்த்து விறுவிறுத்து, ஓடி அவனை அணுகி நின்றார்கள். வில்லை வளைத்துக் கணையைத் தொடுத்து யானையை விரட்டியபின், அவன் தலைவியின் நடுக்கத்தைத் தீர்த்தற் பொருட்டாக, அவளை ஆரத் தழுவிக் கொண்டான். அவளுடைய குற்றமற்ற நெற்றியைத் தடவிக் கொடுத்தான். தலைவி உணர்வு வரப்பெற்று நாணமும் அச்சமும் உடையவளாய், அவனைவிட்டு விலகி நிற்க முயன்றாள். அவனே அவனை

மணம்செய்து கொள்ளும் எண்ணம் உடையவன் போல் ஆரத்தழுவிக் கொண்டு, அவள் உள்ளம் நினைத்ததைத் தானும் உணர்ந்தவன் போல் பேசினான். "விழாக் காலத்தில் போலப் பெரிய மிடாக்களில் சோறுவடித்து, வந்த விருந்தினருக்கெல்லாம் வரையாது வழங்கும் இல்லறத்தை'' ஏற்பதாக அவன் உறுதி கூறினான். மலையுச்சியிலே இருக்கும் முருகக்கடவுளைக் கைதொழுது வாழ்த்திச் சத்தியம் செய்தான். அருவி நீரைக் குடித்துச் செய்த அவ்வாய்மொழியைத் தாங்கள் நம்பி விட்டதாகத் தோழி விளக்குகின்றாள்.

மாலை நேரத்தில், ஊருணி அருகில் கொண்டு வந்து, விட்டுவிட்டுப் பிரிந்த தலைமகன் இறுதியாகக் கூறிய சொற்களும் அவனுடைய பண்புநலனைக் காட்டுவன.

''நேர்இறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நல்மணம் அயர்கம்; சில்நாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழையீர்!''

என்றான் அத் தலைமகன் நாடறியும் படியான திருமணச் சடங்கை விரைவில் நிறைவேற்ற முயல்வதாக அவன் உறுதி கூறுகிற திறம் அறியற்பாலது. இவ் அடிகளிலே தான் ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவித்ததாகிய கொளுச் செய்திக்கு அடிப்படை இருக்கிறது. வடநூன் முறைப்படி கந்தர்வமே ஒரு மணமாகும். தமிழர் வழக்கப்படி களவுக்குப் பிறகு, கற்பென்ற நன்மணம்-சடங்கு நிகழவேண்டும். அதனை முடித்துக் தலைவியை அழைத்துப் போவதாகத் தலைமகன் உறுதி கூறிப் பிரிகின்றான்.

அதற்குப் பிறகும் அவன் ஆராத காதல் உடையவனாக விளங்குவதைத் தோழி நன்கு எடுத்துக் காட்டுகிறாள். நாள்தோறும் இரவு நேரத்தில் தலைவியைக் காண்பதற்காகத் தலைவன் மலையுச்சியிலுள்ள தன் ஊரிலிருந்து புறப்பட்டு வருகிறான். முதல் நாள் தலைவிமீது எவ்வளவு காதலுடையவனாக இருந்தானோ, அவ்வாறே இன்றளவும்

அன்பு காட்டுகிறான். அங்ஙனம் துன்பப்பட்டு வரினும் அவனால் தலைவியை நாள்தோறும் சந்திக்க முடிவதில்லை. இடையே எத்தனையோ தடைகள் ஏற்பட்டு எண்ணம் நிறைவேறாமல் போகும். காவலர்கள் விரைந்து வரும் ஓசை கேட்டுத் தலைமகன் திரும்பிவிட நேர்வதும் உண்டு. நாய் குரைத்தாலும் தாய் துயில் நீத்து எழுந்துவிட்டாலும் நிலவு வெளிப்பட்டுப் பகல்போல் ஒளிவீசினாலும் தலைவியைச் சந்திக்கப் பெறாமல் தலைவன் திரும்ப நேரிடும். இவ்வாறு தலைவியைப் பார்க்கக் கூட இயலவில்லையே என்பதற்காக அவன் வருந்தி, அவள் மீது வெறுப்புக் கொள்ளவில்லை. தன் உயர்பண்பிற்குக் குறை நேருமாறோ, தன் இளமை காரணமாக எல்லைகடந்தோ அவன் நடந்து கொண்டதே இல்லை.

அவன் தலைவியைக் காண வருகின்ற வழியில் எத்தனையோ தடைகள், இடர்ப்பாடுகள், ஆபத்துக்கள்! மலையுச்சியிலிருந்து நடந்து வரும் வழியல்லவா அது. குகைக்குள்ளேயிருக்கும் புலிகள், யாளி எனப்படும் கொடிய விலங்கு, கரடி, கொம்பினையுடைய (காட்டுப்பசு எனப்படும்) காளைமாடுகள், யானைகள் இப்படிக் கணக்கற்ற விலங்குகள் திரிகின்ற காடுகள் இடையிடையே உண்டு. இடி, அச்சம் தரும் தெய்வம், இரைதேடும் பாம்புகள் பல உண்டு, ஒடுங்கிய ஆழமான நிர்நிலைகளில் அரிய சுழிகளுக்குள் திரியும் முதலை, இடங்கர், கராம் என்னும் முதலை வகைகள் பலவும் உள்ளன. வழிப்பறிசெய்வோர் கொன்று குவிக்கும் இடமாகிய நூழில், வழுக்குநிலம், ஒற்றையடிப்பாதை போல் காட்டிப் பின்பு வழியின்றி முடியும் முட்டங்கள், பேயும் பெரும்பாம்பும் உலவுமிடங்கள் என இத்தகையவற்றை உடையது அவன் வரும் நெடியபாதை, இதை அஞ்சாமற் கடந்து தலைவன் நாள்தோறும் வருகிறான் என்பதனால், தலைவிமீது அவன் எவ்வளவு ஆராத காதலுடையவனாக, இருந்தான் என்பது புலனாகிறது.

தலைவனின் அழகு, பண்பு, பெருமை, காதல் போல்வன இவ்வாறு இக் குறிஞ்சிப் பாட்டில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தோழி தாயிடம் தலைவனின் பெருமையையும் காதலையும் நன்கு விளக்கிக் கூறி, எந்த விதத்திலும் அவனுக்கே தலைவியை மணம் முடித்துக் கொடுத்து விட வேண்டும் என்று முயல்வதால், தன் திறமையையெல்லாம் பயன்படுத்திப் பேசுகிறாள். அப்பேச்சில் தலைவனின் முழுமையான ஓவியம் வண்ணமுறச் சித்தரிக்கப்படுகிறது. அவ் ஓவியம் தொல்காப்பிய இலக்கணத்திற்குப் பொருந்தி வருகிறது; உலகியலுக்கும் ஒத்து வருகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் அகப்பொருள் இலக்கணம் குறிக்கோளியல் சார்ந்ததாயினும், அஃது உலகியலுக்கு அப்பாற்பட்டதன்று. குறிஞ்சிப் பாட்டிற் காணும் தலைவன், தலைவியர் எங்கும் காண இயலாதவர்கள் அல்லர். ஆனால் நாம் காணக் கூடியவர்களில் உயர்ந்தவர்கள். நாம் அடிக்கடி காணும் குறைகளின் நீங்கியவர்கள் ஆங்காங்கு உலகில் அரிதாகவேனும் நாம் இத்தகையவர்களைக் காணத்தான் செய்கிறோம். இவர்களிடமும் குறைகள் உண்டு. எனினும் அக்குறைகள் உணர்ந்து வருந்துபவர்களாக, தங்களிடம் நேரும் குற்றங்குறைகளுக்காக நாணுபவர்களாக இவர்கள் படைக்கப்படுவதே, இங்குள்ள தனிச் சிறப்பாகும். இவ்வகையில் இத்தலைவன், தலைவியர் ஒரு சில குறிக்கோட் பண்புகளுடைய நடப்பியல் மாந்தர்களே என்று நாம் கொள்ளுதல் கூடும்.

**தாயின் பாசம்**

முதல் எட்டு அடிகளுக்குள் தாயின் பாசவுணர்வு நன்கு புனையப்பட்டுள்ளது தலைவியின் மெலிவுக்குக் காரணம் தெரியாமல், அவள் மனம் சுழன்று வருந்துகிற காட்சி நம் உள்ளத்தில் இரக்கவுணர்வை ஏற்படுத்துகிறது. நம் சமுதாயத்தில் ஒரு தன்மை உண்டு. குடும்பத்தில் ஏதேனும் இடர்ப்பாடு என்றால், உடனே நாம்

'சாதகம்' பார்க்கப் புறப்படுவோம். அறிந்தவர்களைக் கூப்பிட்டு ஆருடம் கேட்போம். கோடாங்கி அழைத்துக் குறி கேட்போம், கட்டுவிச்சியிடமோ, வேலனிடமோ சென்று முறத்தில் நெல்லிட்டோ, கழற்சிக் காயை வைத்தோ குறிபார்த்துச் சொல்லுமாறு கேட்போம்.

அடுத்து நாம் நம் குலதெய்வத்தை வழிபடுவோம். நம் கிராமப்புறச் சிறு தெய்வங்களுக்குப் பல பொருள்களையும் படைத்து, நம்மை மன்னிக்குமாறு வேண்டுவோம். தூப தீபம் காட்டி – 'நறையும் விரையும்' ஓச்சி வழிபடுவோம். காரணம் தெரியாத நோய் வரும் போதெல்லாம் நம் குடும்பப் பெண்களிடம் காணப்படும் மனச் சுழற்சியும் தடுமாற்றமும் அன்றும் இன்றும் ஒன்று போலவே உள்ளன.

இங்ஙனம் இக் குறிஞ்சிப் பாட்டில் இடம் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், புனைவும் உலகியலை ஒட்டியே உள்ளன. 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' என்பது போன்ற புதிய உலகங்களை இவை படைத்துக் காட்டவில்லை. இவை இருக்கிற உலகத்தையே படைக்கின்றன. அந் நடைமுறைகளை ஆங்காங்கு அழுத்தம் பெறச் சுட்டிக் காட்டுகின்றன. காப்பியங்களில் இடம் பெறும் வருணனைகளில் மிகைத் தன்மையுண்டு ஆனால் சங்க இலக்கியப் புனைவுகள் உளவியலை அடித்தளமாய்ப் பெற்று, உலகியலுக் குள்ளேயே சுழல்வதால் அவை இன்றும் நடைமுறை வாழ்வு போல நமக்குக் காட்சி நல்குகின்றன.

'பெருங்குறிஞ்சி' எனப்பட்ட இந் நெடும்பாட்டு இங்ஙனம் நாடகப் பாங்குடைய காப்பியப்பாட்டாக விளங்குவதுடன், உலகியலடிப்படையில் எழுந்த உளவியற்பாட்டாகவும் திகழ்கிறது. இதன் பின்னே இணைக்கப்பட்டுள்ள தனிப்பாடல்களில் ஒன்று, இதன் சிறப்பை எடுத்து மொழிகிறது.

ஆற்றல்சால் கேள்வி
அறம் பொருள் இன்பத்தைப்
போற்றிப் புனைந்த
பொருளிற்றே! — தேற்ற
மறையோர் மணம் எட்டின்
ஐந்தாம் மணத்தின்
குறையாக் குறிஞ்சிக்
குணம்

வடமொழியில் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம். தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டுவகை மணங்கள் நுவலப்படுகின்றன. அவற்றுள் ஐந்தாவதாகிய கந்தருவ மணத்துடன் இயைபுடைய களவு மணத்தை விரித்துரைக்கும் இது 'களிறுதரு புணர்ச்சி' என்னும் துறையைச் சாரும். இத்தகைய வழக்காறு மிகவும் பல காலமாக நடைபெற்று வந்ததின் பின், இப் பாடல் புனையப் பெற்றிருக்க வேண்டும். எனவே தான் இவ் ஆசிரியர் 'களிறுதரு புணர்ச்சி' என்ற துறைப் பெயரை இலக்கணச் சொல்லாட்சியைத் தம் பாடலிடையே எடுத்தாள்கிறார். அறம் பொருள் இன்பம் என்ற மும்முதற் பொருள்களின் வழுவாத இப்பாடல், தமிழர்தம் நாகரிகப் பிழிவாகத் திகழ்கிறது. தமிழர்களின் தொன்மைமிக்க சமுதாயத்தை இது கோடி காட்டி உணர்த்துகிறது. அக்கால மக்களின் பண்பாடும் நாகரிகமும் தெற்றெனப் புலனாகின்றன. தமிழ்ப் புலவர்களின் சிந்தனை ஓட்டத்தையும் இலக்கியத் திறனையும் மதிப்பிடவும் இது பெரிதும் உதவுகிறது. 261 அடிகளையுடைய இந்நேரிசையாசிரிய நெடும்பாட்டின். ஒவ்வொரு சொல்லும் தொடரும் கருத்தும் கற்பனையும் கலைத்திறமையோடு அமைக்கப்பட்டுள்ளன. இதன் கருத்தும் கட்டமைப்பும் உணர்வும் உருவமைப்பும் நம் உள்ளத்தை ஈர்த்து மகிழ்விக்கின்றன. இலக்கியம் மனித்துவத்தை நிலை பெறுத்தும் அமிழ்தமெனில், அவ் அமிழ்தத்தை அள்ளித்தரும் இக் குறிஞ்சியினைப் படித்து மகிழ்தலால், நம் உள்ளமும் வாழ்வும் உயருமன்றோ?

## ஆசிரியரின் பிற நூல்கள்.

ஒப்பிலக்கிய அறிமுகம்

சங்க இலக்கிய ஒப்பீடு

பிறை தொழும் பெண்கள்

ஆய்வியல் அறிமுகம்

புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

இனிய தமிழ் மொழியின் இயல்புகள்

உரைவிளக்கு

நோக்கு

இறைச்சி

மெய்ப்பாடு

உள்ளுறை

---


**மீனாட்சி புத்தக நிலையம்**

60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-625 001

மீனாட்சி
புத்தக நிலையம்